# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 95 மாசி 17ஆம் நாள் வியாழக்கிழமை 01 மார்ச் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


### சமுர்த்தி உத்தியோகத்தர் இருவர் பணி இடைநீக்கம்

*மோசடிக் குற்றச்சாட்டில்*

யாழ். மாவட்டத்தில் சமுர்த்திக் கடன் வசூலிப்பில் ஈடுபட்டிருந்த 4 உத்தியோகத்தர்கள் மாட்டிக்கொண்டனர். அவர்களில் 2 பேர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டனர். 2 பேருக்குத் தண்டனை இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (விரிவு பக். 12)

# காணாமல்போனோர் பணியக ஆணையாளர்களுக்கு நியமனம்

## சட்டம் சமர்ப்பிக்கப்பட்டு 19 மாதங்களின் பின் நேற்று வழங்கினார் மைத்திரிபால



யாழ்ப்பாணம், மார்ச் 1

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், காணாமற்போனோர் பணியகத்துக்கான ஆணையாளர் மற்றும் உறுப்பினர்களுக்கான நியமனங்கள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

காணாமற்போனோர் பணியகத்தை உருவாக்கும் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு 19 மாதங்களின் பின்னர் அந்தப் பணியகத்துக்கான ஆணையாளர் >> 06

## பள்ளிவாசல் உடைப்பு திட்டமிடப்பட்ட செயல்

*அமைச்சர் ரிசாத் குற்றச்சாட்டு*

அம்பாறை, மார்ச் 1

நகரிலுள்ள முஸ்லிம் ஹோட்டலில் பிரச்சினை நடந்தது. அந்தக் கடை உடைத்தார்கள். எந்தச் சம்மந்தமும் இல்லாத, கடையிலிருந்து 500 மீற்றர் தூரத்திலுள்ள பள்ளிவாசலை உடைக்கவேண்டிய எந்தவொரு தேவையும் இல்லை. பள்ளிவாசல் உடைக்கப்பட்டமை இந்தச் சம்பவம் நன்கு திட்டமிடப்பட்டது என்பதை எடுத்துக் காட்டுவ >> 06

## அம்பாறை வன்முறைகள் எவரும் கைதாகவில்லை

அம்பாறை, மார்ச் 1

அம்பாறையில் திங்கட் கிழமை நள்ளிரவில் நடந்த வெறியாட்டத்துடன் தொடர்புடைய எவரும் நேற்று மாலை வரையில் கைது செய்யப்படவில்லை. சந்தேக நபர்களைக் கைது செய்வதற்காக பல்வேறு தரப்பினரிடமும் விசாரணைகளை முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். >> 25

## பிரச்சினைக்குரிய உணவை பகுப்பாய்வு செய்ய ஏற்பாடு

அம்பாறை, மார்ச் 1

அம்பாறையில் கலவரத்துக்கு காரணமானது என்று கூறப்படும் உணவு மாதிரியை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்த நேற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை நகரிலுள்ள ஹாசிம் ஹோட்டலுக்கு உணவுண்ணச் சென்ற இரு சிங்கள இளைஞர் >> 23

## தாக்கப்பட்ட பள்ளிவாசல் நேற்றுத் திறக்கப்பட்டது

அம்பாறை, மார்ச் 1

தாக்கப்பட்ட பள்ளிவாசல் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக நேற்றுத் திறக்கப்பட்டது. அம்பாறை நகரும் நேற்று ஓரளவு இயல்பு நிலைக்குத் திரும்பியது.

அம்பாறை நகரில் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்ற கலவரத்தால், 4 முஸ்லிம் கடைகள் அடித்து நொறுக்கப்பட்டது. பள்ளிவாசலும் சேதமாக்கப்பட்டது. அம்பாறை மாவட்ட நீதிவான் மன்றால் பொலிஸாருக்கு நேற்று 4 கட்டளை >> 25

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் 13,000 விண்ணப்பங்கள் சேகரிப்பு

*தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மார்ச் 1

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விவரங்கள் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சால் திரட்டப்பட்டு வரும் நிலையில், இதுவரை 13 ஆயிரம் விண்ணப்பங்கள் அமைச்சுக்கு கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இன்னும் இரண்டு மாதங்களுக்குள் இந்தப் பணிகள் நிறைவடை >> 23

### வட்டுவாகல் போராட்ட விவகாரம்

## ரவிகரன் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதி



முல்லைத்தீவு, மார்ச் 1

பாதுகாப்புத் தரப்பின் காணி சுவீகரிப்புக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டம் தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் முல்லைத்தீவுப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிராக 5 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு முல்லைத் >> 06

## பொலிஸின் கடும் எதிர்ப்பை மீறியே ரவிகரனுக்குப் பிணை

*சட்டத்தரணிகளின் கடும் வாதத்தால் வழங்கப்பட்டது*

முல்லைத்தீவு, மார்ச் 1

வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரனுக்கு பிணை வழங்க முல்லைத்தீவுப் பொலிஸார் மறுத்ததால், சட்டத்தரணிகள் பொலிஸாருடன் கடும் வாதங்களில் ஈடுபட்டனர். நீண்ட விவாதத்தின் பின்னரே, ரவிகரனுக்குப் பிணை வழங்கப்பட்டது.

கோத்தபாய கடற்படை முகாமுக்கு காணி சுவீகரிக்கப்படு >> 24

## லசந்த படுகொலையில் சரத்திற்க்கும்தொடர்பாம்

*சொல்கிறார் கோத்தா*

கொழும்பு, மார்ச் 1

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலையை மையப்படுத்தி என்னைக் கைது செய்ய முயற்சிகள் இடம்பெறுகின்றன. லசந்த கொல்லப்படுவதற்கு முன்னர் அவர் மீது கோபமாக இருந்தவர் பொன்சேகா. இந்த விடயத்தில் அப்போதைய இராணுவ தளபதி சரத் பொன்சேகவை ஏன் விசாரிக்கவில்லை. கோழியைப் பாதுகாக்க நரியிடம் அதை ஒப்படைக்க வேண்டாம். >> 25

## ரவிகரனுக்காகத் திரண்ட சட்டத்தரணிகள்

முல்லைத்தீவு, மார்ச் 1

பொலிஸ் விசாரணைக்கு அழைக்கப்பட்டு திடீரெனக் கைது செய்யப்பட்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனை நீதிமன்றில் முற்படுத்தியபோது, ரவிகரனுக்கு ஆதரவாக முல்லைத்தீவு மாவட்டச் சட்டத்தரணிகள் அனைவரும் முன்னிலையாகினர்.

முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணி >> 24

## சிவாஜிலிங்கத்துக்கு முன்பிணை மறுப்பு

*6 குற்றச்சாட்டுகள் பதிவு*

யாழ்ப்பாணம், மார்ச் 1

வட்டுவாகலில் காணி சுவீகரிப்புக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்துக்கு எதிராக 6 குற்றச்சர்ட்டுகள் பொலிஸாரால் சுமத்தப்பட்டுள்ளன. அவருக்கு முன்பிணை வழங்க மறுத்த நீதிமன்று வழக்கை ஒத்திவைத்தது. >> 25



## போர்க்களப் புலிகள் 'வைட் ஹெல்மட்ஸ்'

டமஸ்கஸ், மார்ச் 1

சிரியாவில் வான்வழித் தாக்குதல் நடத்தப்படும் இடங்களில் 'வைட் ஹெல்மட்ஸ்' அமைப்பால்தான் தம்மை காப்பாற்ற இயலும் என்று நம்பியுள்ளனர் அங்குள்ள மக்கள்.

சிரிய-ரஷ்ய கூட்டுப் படைகளின் தாக்குதலால் ஒவ்வொரு நாளும் தரைமட்டமான கட்டிடங்களின் இடிபாடுகளுக்கு இடையே அகப்பட்டு >> 24

## குற்றவாளிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குக

*அம்பாறை. அராஜகம் தொடர்பில் அரசிடம் சம்பந்தன் வலியுறுத்து*

>> 06

## வீட்டிலிருந்தோர் சத்தமிட்டதால் பிசுபிசுத்த கொள்ளை முயற்சி

*வீட்டிலிருந்தவர்களை காயப்படுத்தித் தப்பினர்*

யாழ்ப்பாணம், மார்ச் 1

காங்கேசன்துறை, வீமன்காமத்தில் வாள்களுடன் வந்த குழுவொன்று வீட்டுக்குள் புகுந்து கொள்ளையிட முற்பட்டது. வீட்டிலிருந்தவர்கள் அபயக் குரல் எழுப்பியதால் அவர்களை வெட்டிக் காயப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றது. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது.

வீட்டிலிருந்த நாய் இடைவிடாது குரைத்துள்ளது. வீட்டிலிருந்தவர் வெளியே >> 24

# கோத்தாவுக்கு பதவி கொடுத்து ஆட்சியை தக்கவைக்க முயற்சி

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

**கொழும்பு, மார்ச் 1**

**கோத்தபாய ராஜபக்சவை தலைமை அமைச்சராக்கி தொடர்ந்தும் அரச தலைவர் அதிகாரத்தை தக்கவைக்கவே மைத்திரிபால சிறிசேன முயற்சித்தார் என மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்னாயக்க தெரிவித்துள்ளார். பிரதமர் ரணில் விக்கரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தால் மக்கள் விடுதலை முன்னணி ஆதரிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.**

பிரிட்டன் சென்றுள்ள மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் பிமல் ரத்னாயக்க அங்கு செய்திச் சேவை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்தாவது

இந்த அரசு செய்துள்ள அமைச்சரவை மாற்றம் மிகவும் மோசமானது. 2015 ஆம் ஆண்டில் இருந்து இந்த அரசு முன்னெடுக்கும் சகல வேலைத்திட்டங்களும் மோசடிகளுடன் கூடியவை. இந்த கூட்டணியில் அனைவரும் "ஜோக்கர்கள்" மட்டுமே. இந்த அமைச்சசரவை மாற்றம் பெற்றுள்ளது என்பதால் மாற்றங்கள் ஏற்படப் போவதில்லை.

இளைஞர் விவகாரஅமைச்சர் சாகல ரத்னாயக்கவுக்கு வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் இளைஞர் அபிவிருத்தி எதுவும் இடம்பெறப்போவதில்லை. அதேபோல் சட்டம் ஒழுங்கு அவரிடம் இருந்து தலைமை அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதிலும் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை. இருவரும் ஒரே விடயத்தையே செய்கின்றனர். முக்கிய ஊழல் குற்றவாளிகள் அனைவரும் இதுவரை தண்டிக்கப்படவில்லை. இனியும் தண்டிக்கப்படப் போவதில்லை. ஊழல் குற்றவாளிகளை தண்டிக்கும் நடவடிக்கை தனிப்பட்ட ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றது.

மைத்திரிபால சிறிசேனவின் வெற்றி அவரது தனிப்பட்ட வெற்றி மட்டும் அல்ல, கடந்த கால ஊழல் மோசடிகள் குறித்து மக்கள் கொண்டுருந்த அதிருப்தியின் விளைவேயாகும். அவர் ஆட்சிக்கு வந்தவுடன் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கினார். தான் நிறைவேற்று அரச தலைவர் முறைமையை இல்லாதொழிக்க போகின்றேன் என்றும் குறிப்பிட்டார். மீண்டும் அவர் அரச தலைவராகக் களமிறங்கப்போவதில்லை என்ற கருத்துக்களை குறிப்பிட்டார். மூன்று ஆண்டுகளில் அவரது செயற்பாடுகள் சுயநலமான போக்கைக் கொண்டுள்ளன. சிறி லங்கா சுதந்திர கட்சியின் வாக்குகள் மகிந்த ராஜபக்சவிடம் உள்ளன என்பதை அவர் நன்கு அறிவார். மீண்டும் அவர்களை இணைத்துக் கொண்டு அதிகாரத்தை தக்கவைக்க முயற்சித்து வருகின்றமை தெளிவாகத் தெரிவிகின்றது. ராஜபக்ச குடும்பத்தின் சிலரை தக்கவைக்க முயற்சித்து வருகின்றார்.

கோத்தபாய ராஜபக்ச போன்றவர்களை தன்னுடன் இணைத்துக்கொண்டு செல்ல அவர் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். கோத்தபாய ராஜபக்சவை பிரதமராக நியமித்து ஆட்சியை கொண்டுசெல்லவே அவர் திட்டம் தீட்டியுள்ளார். தான் மீண்டும் அரச தலைவராக ஆட்சியை தக்கவைக்க முயற்சித்து வருகின்றார். அதனால் தான் சிறிலங்கா சுதந்திர கட்சியின் ஊழல் வாதிகளை தன்னுடன் இணைத்துக்கொள்ள முயற்சித்து வருகின்றார். ஐக்கிய தேசியக் கட்சியும் தனி அரசு குறித்து சிந்தித்து வருகின்றது. சிறிலங்கா சுதந்திர கட்சியும் அதனையே முயற்சித்து வருகின்றது. அதில் மஹிந்த ராஜபக்சவை இணைத்துக் கொண்டு பயணிக்க முயற்சித்து வருகின்றனர். வர்கள் எவருக்கும் நாம் ஆதரவு வழங்கப்போதில்லை.

புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டு வருகின்றது. அதில் இலங்கையை பொறுத்தவரை பௌத்தத்துக்கு முக்கிய இடம் உள்ளது. ஆனால் ஏனைய சகல மதங்களுக்கும் அதே சம உரிமை வழங்கப்பட வேண்டும். இப்போதுள்ள அரசமைப்பில் பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது என்பதற்காக ஏனைய மதங்கள் பாதிக்கப்படவில்லை. அதுவே தொடர்ந்தும் இருக்கலாம். எனினும் சகல மக்களின் ஆதரவையும் பெற்றுக்கொண்டு புதிய அரசமைப்பை அங்கீகரிக்க வேண்டும். இலங்கை சிங்கள பௌத்த நாடு அல்ல. சகல மதங்களுக்கும் உரிமை உள்ளது. சிங்கள மக்களுக்கு உரிமை உள்ளது எனக் கூறி ஏனைய மக்களை புறக்கணிக்க முடியாது. சிங்களவர்கள் தமிழர்களை அழிக்க முயற்சித்தன விளைவே 30 ஆண்டுகாலப் போர். தமிழர்கள் சிங்களவர்களை நிராகரித்த விளைவே 2009 ஆம் ஆண்டு அழிவாகும். இந்த போரில் அரசியல்வதிகள் எவ்ரது பிள்ளைகளும் அழியவில்லை. அழிந்தது சாதாரண மக்களே. அதை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாம் ஆதரவு இல்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரும் நிலையில் மக்கள் விடுதலை முன்னணி ஆதரிக்கும். ஐக்கிய தேசியக் கட்சியின் ஊழல் செயற்பாடுகள் அனைத்தையும் நாமே கோப் குழுவின் மூலம் வெளிப்படுத்தினோம். நாம் ஐக்கிய தேசியக் கட்சியினை காப்பாற்ற நினைத்திருந்தால் கோப் அறிக்கையை மூடி மறைத்திருக்க முடியும்.

நாம் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்க வேண்டிய அவசியம் இல்லை. நாம் மக்களுக்காக செயற்படும் கட்சியாக மக்கள் சேவையைச் செய்து முடிக்கின்றோம். தேசிய அரசு தோற்கடிக்கப்பட வேண்டும். ஆனால் அடுத்த அணிக்கு இனியொருபோதும் நாம் ஆதரவு வழங்கப்போவதில்லை. நாம் சுயாதீனாமாக களமிறங்குவோம். என்றார். (ற-31)

## புதிய மதுபானசாலை அமைக்க பெரியபரந்தனில் மக்கள் எதிர்ப்பு

கிளிநொச்சி, மார்ச் 1

கிளிநொச்சி, பெரிய பரந்தனில் புதிதாக அமைக்கப்படும் மதுபான சாலைக்குப் பிரதேச மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். கரைச்சிப் பிரதேச செயலருக்கு இது தொடர்பில் மனு ஒன்றையும் கையளித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் கரைச்சிப் பிரதேச செயலகத்துக்குச் சென்ற மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பிரதேச செயலரிடம் மனுக் கையளித்தனர். 10க்கு மேற்பட்ட அமைப்புக்கள் இணைந்து மனுவைக் கையளித்துள்ளனர்.

புதிய மதுபானசாலை அமையவுள்ள இடத்துக்கு அருகில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி, விஞ்ஞானக் கல்வி நிலையம் என்பன உள்ளன. பெரியபரந்தனில் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. அவற்றில் பெரும்பாலானவை வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவை. அங்கு மதுபானசாலை அமைக்கப்படுவது பாதிப்பை ஏற்படுத்தும் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மக்களின் உணர்வைக் கருத்தில் கொண்டு மதுபான சாலைக்கான அனுமதியை வழங்கக் கூடாது என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற-35)

## மக்கள் வரவேற்பைப் பெறும் கோமாளி கிங்ஸ் திரைப்படம்




யாழ்ப்பாணம், மார்ச் 1

கிங் ரத்தினத்தின் இயக்கத்தில் இலங்கையில் உருவாக்கப்பட்ட "கோமாளி கிங்ஸ்' தமிழ் முழு நீளத் திரைப்படம் திரையரங்குகளில் காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் திரைப்படம் மக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது. திரைப்படத்தின் ஒளிப்பதிவு, பின்னணி இசை என்பன சிறப்பாக அமைந்துள்ளன. இலங்கையின் பல பகுதிகளிலும் வழக்கத்தில் உள்ள பேச்சுக்கள் திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளமை இரசிக்கக் கூடியதாக இருக்கின்றது என்று திரைப்படத்தைப் பார்த்த மக்கள் கருத்துத் தெரிவித்தனர். நகைச்சுவை, காதல், அதிரடி என படத்தின் ஆரம்பம்முதல் முடிவு வரை பார்வையாளர்களை கதையோடும் காட்சிகளோடும் ஒன்றிக்க வைக்கும் வகையில் இத்திரைப்படத்தின் கதைக்கரு வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். இந்தத் திரைப்படம் யாழ்ப்பாணத்தில் ராஜா, கார்கில்ஸ் சதுக்க திரையரங்குகளிலும், சாவகச்சேரியில் பாலா திரையரங்கிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பு நகரில் பம்பலப்பிட்டிய எம்.சி, கொட்டேனா சினி வேல்ட், கிங்சிலி, தெகிவளைகொன்கோர்ட், மருதானை சினி சிட்டி, கப்பிட்டல், மாலிகாவத்த ரூபி, மவுண்ட லேனியா சிட்டி சினிமா, பாமங்கடை ஈரோஸ், தெமட்டகொட சமந்தா, பொறளை லிடோ, சிலோ ரமோக, கட்டுநாயக்க ரோசீமா, நீர்கொழும்பு றோயல் ஆகியு திரையரங்குகளில் காட்சிபடுத்தப்படுத்தப்பட்டுள்ளது. (ற)

## ஜயந்த விக்கிரம கைதுக்கு மன்று இடைக்காலத் தடை

கொழும்பு, மார்ச் 1

லசந்த விக்ரமதுங்க கொலை வழக்குத் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்கிரமரத்னவைக் கைது செய்ய உயர் நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது.

முன்னாள் பொலிஸ் மா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

முன்னாள் பொலிஸ் மா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை முடிவடையும் வரை இந்த இடைக்காலத் தடை உத்தரவு நடைமுறையில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி5)

## சங்கராச்சாரியார் நேற்றுக் காலமானார்

### நல்லை ஆதீனம் இரங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 1

காஞ்சிபுரம் சங்கராச்சாரியால் நேற்று அதிகாலை உயிரிழந்தார். திடீர் மூச்சுத் திணறல் காரணமாக ஏற்பட்ட மாரடைப்பால் அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளுக்கு வயது 84.

காஞ்சிபுரம் சங்கராச்சாரியார் ஜெயந்திர சரஸ்வதிக்கு இரு மாதங்களின் முன்னர் முச்சுத்திணறல் ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது. அவர் சென்னை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்ததுடன் தொடர் மருத்துவ கண்காணிப்பில் இருந்தார்.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் அவருக்கு முச்சுத் திணறல் ஏற்பட்டது. உடனடியாக அங்குள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் அது பயனளிக்காது மு.ப. 9.10 மணியளவில் உயிரிழந்தார். அவரது உடல் காஞ்சி மடத்தில் உள்ள மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

நல்லை ஆதீனம் இரங்கல்

காஞ்சி சங்கராச்சாரியார் திருமடத்தின் பீடாதிபதி சங்கராச்சாரியார் ஜெயந்திர சரஸ்வதி சுவாதிகள் சித்தியடைந்தமை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது என்று நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்கராச்சாரியார் ஆன்மீகப் பணிகளோடு, சமூகப் பணிகளையும் முன்னெடுத்தார். இலங்கை வாழ் இந்துக்கள் தொடர்பாகவும் ஆர்வம் செலுத்தியிருந்தார். உலக நிலையில் எமது சமயம் சார்ந்து முக்கிய ஆன்மீகத் தலைவர்களுள் ஒருவராகக் கணிக்கப்பட்ட சுவாமிகள் இயற்கை எய்தியுள்ளார். இலங்கை வாழ் இந்துக்கள் சார்பில் எனது பிரார்த்தனைகளைச் சமர்ப்பிக்கின்றேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-11)

## மயங்கி விழுந்த மாணவி சாவு

கொழும்பு, மார்ச்.1

அவிஸ்ஸாவெல, தெஹியோவிட்ட ஆரம்ப பாடசாலை ஒன்றில் மயங்கி விழுந்த மாணவி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தரம் 4 இல் கல்வி பயிலும் 9 வயதுடைய மாணவி ஒருவரே நேற்று மயங்கி விழுந்த நிலையில், மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததார் எனத் தெரிவிக்கப்பட்டது. சிரட்டைகளைப் பயன்படுத்தி நடக்கும் விளையாட்டில் ஈடுபட்டிருந்த போதே மாணவி, மயங்கி விழுந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. மாணவி உடனடியாக அவிஸ்ஸாவெல மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனவும் கூறப்பட்டது. (ற,ரி2)

# அம்பாறை வன்முறை குறித்து பலகோணங்களில் விசாரணை

## கருத்தடை மாத்திரை விடயம் கட்டுக்கதை என்கிறது அரசு

கொழும்பு, மார்ச்1

முஸ்லிம் உணவக உணவுகளில் கருத்தடை மாத்திரை கலக்கப்படுகின்றன என்று வெளிவரும்தகவல்கள் அடிப்படையற்ற பொய்க்குற்றச்சாட்டு எனத் தெரிவித்த சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன, அம்பாறை சம்பவம் குறித்து தீவிரமான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

அமைச்சரவையின்வாராந்த முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுஅரசதகவல்திணைக்களத்தில் இடம்பெற்றது. அதில் அம்பாறை சம்பவம் தொடர்பில்கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்தாவது

அம்பாறையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். தற்போது இச்சம்பவம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது. நாட்டில் அமைதியை சீர்குலைக்கும் நோக்கத்துடன்தான் வேண்டுமென்றே சிலர் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். நாம் இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். இந்தச் சம்பவத்தை இனவாத சம்பவமாக சித்திரிக்காது பொறுப்புடன் ஊடகங்கள் செயற்பட்டமைக்காக நாம் நன்றிகளையும் இந்த வேளையில் தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

முஸ்லிம் உணவகங்களில் கருத்தடை மாத்திரை கலக்கப்படுவதாக ஒரு செய்தி உலாவுகின்றது. எம்மைப் பொறுத்தவரை அது முற்றிலும் பொய்யான தகவலாகும்.

முஸ்லிம் உணவகங்களில் சிங்களவர் மட்டுமன்றி, தமிழர் மற்றும் முஸ்லிம்களும்தான் உண்கிறார்கள்.

ஆண்களுக்கு உணவில் கருத்தடை மாத்திரை கலந்துதான் என்ன பயன் உள்ளது? இதனைப் பெண்களுக்குத்தானே கொடுக்க வேண்டும். இதுவரை அப்படியொரு முறைப்பாடு எமக்கு கிடைக்கவில்லை.

அம்பாறை உணவகத்தில் மாத்திரை கலக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படின் அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவும் நாம் தயாராகவே இருக்கிறோம். என்றார்..

அம்பாறை உணவகத்தில் கருத்தடை மாத்திரைகள் பயன்படுத்தப்படுவதாக அந்த உணவகத்தின் உரிமையாளரே காணொளியூடாக ஒத்துக்கொண்டுள்ளார். இதுதொடர்பில் என்ன நடவடிக்கை எடுப்பீர்கள்? என்று இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சரிடம் வினவினார்.

அந்தக் காணொளியில் இருப்பது உண்மையான உரிமையாளரா என்பதற்கு என்ன ஆதாரம் உள்ளது? இந்தச் சர்ச்சையால் யார் வேண்டுமானாலும் அவ்வாறானதொரு காணொளியை வெளியிடலாம். இது தொடர்பில் நடவடிக்கை எடுத்துவிட முடியாது. விசாரணைகளை மேற்கொள்ளாமல் எந்தவொரு முடிவுக்கும் வரமுடியாது. என்று அமைச்சர் பதிலளித்தார். (ற-31)

# முஸ்லிம்களின் நலன்களுக்காக பெரமுனவுடன் இணையத்திட்டம்

## மலையக முஸ்லிம் கவுன்சில் கூறுகிறது

கொழும்பு, மார்ச்.1

வளர்ந்து வரும் அரசியல் சக்தியான சிறிலங்கா பொது ஜன பெரமுனவுடன் உத்தியோகபூர்வ பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மலையக முஸ்லிம் கவுன்சிலின் செயலாளர் செய்யத் முஹம்மத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது.

எமக்குக் கிடைத்த அழைப்பை அடுத்து முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவுடன் கொழும்பில் பேச்சுகள் நடைபெற்றன. அடுத்த கட்டப் பேச்சு அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்சவுடன் இன்னும் ஓரிரு தினங்களில் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன.

பொதுபல சேனாவின் இனவாத பிக்குகளை நாய் கூட்டுக்குள் அடைப்போம் என்று கூக்குரலிட்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அதே இனவாத பிக்குகளை சமூக நல்லிணக்க பேச்சு மேசைகளுக்கு அழைத்து கௌரவித்து அழகுபார்த்தது. முஸ்லிம்களின் மத கலாசார உரிமைகளையும் மத தலங்களையும் பாதுகாப்போம் என்று ஆட்சிக்கு வந்த நல்லாட்சி சதிகாரர்கள் மகியங்கனை பள்ளிவாயலுக்குள் பன்றியை வெட்டி வீசி நிரந்தரமாக மூடி விட்ட கயவர்களுக்கு கட்சி அமைப்பாளர் பதவிகளை வழங்கி அவர்களின் கடந்த கால இனவெறிச் செயல்பாடுக்ளை நியாயப் படுத்தியது. அம்பாறை போலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 500 மீற்றர் தொலைவிலுள்ள முஸ்லிம் பள்ளிவாசலையும் முஸ்லிம் உடமைகளை பாதுகாக்க முடியாத நல்லாட்சியை இனிமேலும் நம்ப முடியாத நிலையும் உள்ளது.

ஊவா முஸ்லிம்களுக்கு சாதகமான முடிவுகள் கிடைக்குமாயின் எழுத்துமூல ஒப்பந்தங்களுடன் சிறிலங்கா பொது ஜன பெரமுனவுடன் இணைந்து செயல்பட மலையக முஸ்லிம் கவுன்சில் உத்தேசித்துள்ளது என்றார். (ற-ரி5)

# அம்பாறை சம்பவத்துக்கு ரணிலே முழுப் பொறுப்பு

## திஸ்ஸ விதாரண கூறுகிறார்

அம்பாறையில் கடந்த திங்கட் கிழமை இரவு இடம்பெற்ற அசம்பாவிதத்துக்கான முழுப்பொறுப்பையும் தலைமை அமைச்சர் ரணில் விகரமசிங்க ஏற்கவேண்டும். சட்டம் ஒழுங்கு அமைச்சை பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஏற்று இரு தினங்களுக்குள் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார். அம்பாறையில் கடந்த திங்கட் கிழமை இரவு இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

உணவகம் ஒன்றில் ஏற்பட்ட பிரச்சினையைத் தொடர்ந்தே குறித்த அசம்பாவிதம் நிகழ்ந்துள்ளது. கூட்டு அரசு தற்போதுள்ள நிலையில் இனவாதத்தை தூண்டியாவது ஆட்சியை தக்கவைத்துக்கொள்வதற்கே முயற்சிக்கிறது. ஏனெனில் நாட்டிலுள்ள சகல சமுகங்களும் அரசுக்கு எதிராக எழுந்துள்ளன. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சகல சமுகத்தினரும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவையே ஆதரித்துள்ளனர். வடக்கு, கிழக்கு உட்பட சகல பிரதேசங்களிலும் அந்த மாற்றம் நிகழ்ந்துள்ளது. சகல மக்களும் இணைந்து அரசுக்கு எதிராக போராட முன்வருமிடத்து அதனை கட்டுப்படுத்துவதற்கு நல்லாட்சி அரசால் முடியாது. இன, மத பேதத்தை ஏற்படுத்தியாவது மக்களை பிரித்தாள்வதற்கு அரசு எதிர்பார்க்கிறது. அரசின் சதி வலையில் மக்கள் சிக்கிக்கொள்ளக் கூடாது. தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க சட்டம் ஒழுங்கு அமைச்சை பொறுப்பேற்று இரு தினங்களுக்குள் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. தலைமை அமைச்சர் அது விடயத்தில் உடனடியாகக் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார். (ற-31)

# லலித்துக்கு விதிக்கப்பட்ட பிணை நிபந்தனை தளர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 1

புங்குடுதீவு மாணவி கொலை வழக்கின் பிரதான குற்றவாளியான சுவிஸ் குமார் தப்பி செல்ல உதவினார் என குற்றம் சாட்டப்பட்டுள்ள முதலாவது சந்தேக நபரின் பிணை நிபந்தனைகளில் ஒன்றை நீதிமன்று இரத்து செய்துள்ளது.

இந்த வழக்கு ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் நீதிவான் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேக நபர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி சுபாஸ்கரன் மற்றும் சிரேஸ்ட சட்டத்தரணிகளான துசித் ஜோன்தாஸன் மற்றும் சிரேஸ்ட சட்டத்தரணி சமிந்த அத்துக்கோரள ஆகியோர் . சந்தேக நபர் தொடர்பிலான விசாரணைகள் முடிவடைந்துள்ளன என்று குற்ற புலனாய்வு பிரிவு அதிகாரி மன்றில் தெரிவித்தமையை சுட்டிக்காட்டியும், சந்தேக நபரின் கடவுசீட்டு மன்றின் பாதுகாப்பில் உள்ளமையை சுட்டிக்காட்டியும், பிணை நிபந்தனைகளில் ஒன்றான ஒவ்வொரு மாதமும் முதல் திங்கட்கிழமை கொழும்பில்உள்ள குற்றபுலனாய்வுபிரிவுதிணைக்களத்தில் காலை 09 மணி முதல் 11 மணி வரையிலான நேர பகுதிக்குள் கையொப்பம் இட வேண்டும் எனும் நிபந்தனையை இரத்து செய்ய கோரி மன்றில் விண்ணப்பம் செய்தனர்.

சட்டத்தரணிகளின் விண்ணப்பத்தை பரிசீலனை செய்த நீதிவான் அந்தபிணை நிபந்தனையை இரத்து செய்ய உத்தரவிட்டார். உத்தரவைச் சிங்களம் அல்லது ஆங்கில மொழியில் குற்ற புலனாய்வு பிரிவு பணிப்பாளருக்கு அனுப்ப பதிவாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

வழக்கை எதிர்வரும் ஜீன் மாதம் 20ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (ற-37,26)

# குப்பிளானில் திருட்டு நேற்று இருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 1

கடந்த ஜனவரி மாதம் குப்பிளானில் வீடு உடைத்துத் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் நேற்று இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் சுன்னாகம் மற்றும் உடுவிலைச் சேர்ந்தவர்கள் என்றும் 19, 22 வயதுடையவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களை இன்று மல்லாகம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. கடந்த ஜனவரி மாதம் குப்பிளானில் வீடொன்று உடைத்துத் திருடப்பட்டது. அங்கிந்த 18 நகைகள் மற்றும் 48 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-26)

# சிரியப் படுகொலை ஐ.நாவுக்குக் கடிதம

கொழும்பு,மார்ச்.1

சிரியாவில் இடம்பெற்று வரும் மனிதப் படுகொலைகளை நிறுத்துங்கள். இவ்வாறு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஐ.நா. செயலகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட பிரதிநிதி . நினா பிராண்ட் ஸ்ட்ராபுவிற்கு

நேற்று அமைச்சர் அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை செயலகம் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி உலக நாடுகளின் உதவியுடன் முன்மொழியப்பட்டுள்ள போர் நிறுத்த முயற்சிகளை யதார்த்தமாக்க வேண்டும்.

ஐ.நாவின் செயலாளர் நாயகம் 'சிரியா உலகத்தின் ஒரு நரகம்' என்று குறிப்பிடுகின்ற அளவிற்கு மிக மோசமாக அப்பாவிப் பொது மக்கள் அங்கு கொலை செய்யப்படுகின்றனர்.

குறிப்பாக சிறுவர்களும், பெண்களும் படுகொலை செய்யப்படுகின்றனர். இதற்குப் பொறுப்பான அனைத்துத் தரப்புக்களும் உடனடியாக போர் நிறுத்தத்தில் ஈடுபட்டு மேலும் மனிதப் படுகொலைகள் ஏற்படாத வண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஐ.நா. சபையானது இந்தவிடயத்தினை முக்கியமானதும் அவசரமானதுமான விடயம் எனக் கருத்தில் கொண்டு தனது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ற.ரி2)

# மைத்திரி பொன்சேகா இடையே சிறப்பு சந்திப்பு

கொழும்பு.மார்ச்.1

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் அமைச்சர் சரத் பொன்சேகா ஆகியோருக்கிடையில் சிறப்பு சந்திப்பொன்று இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேபோன்று நேற்று முன்தினம் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க மற்றும், சரத்பொன்சேகா ஆகியோருக்கிடையிலும் சந்திப்பு ஒன்று இடம்பெற்றதாகவும் கூறப்படுகின்றது. அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுக் காலை இந்த சந்திப்பு இடம்பெற்றது.

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சராக சரத்பொன்சேகா நியமிக்கப்படுவதாக அரச மட்டத்தில் இருந்து செய்திகள் வெளியானதைத் தொடர்ந்து பல்வேறு தரப்பினரும் அதற்கு எதிர்ப்புகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

குறிப்பாக சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சில அமைச்சர்கள் இப் பதவியை சரத் பொன்சேகாவிற்கு வழங்கக் கூடாது எனக் கோரிக்கைகளை விடுத்து வந்தது. இந்த நிலையில், தலைமை அமைச்சருக்கு தற்காலிகமாகவே சட்ட ஒழுங்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது எனவும் அந்தப் பதவி மீண்டும் சரத் பொன்சேகாவிற்கு வழங்கப்படும் எனவும் செய்திகள் வெளியாகின. பொன்சேகாவுக்கு சட்டம் ஒழுங்கு அமைச்சு பதவியை வழங்குக வேண்டும் என்று பேராசிரியர் தம்பர அமில தேரர் அரசிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். மேலும், தன்னை சட்ட ஒழுங்கு அமைச்சராக நியமித்தால் ஆறு மாதங்களுக்குள் ஊழல் மோசடிகளுக்குத் தீர்வு காண்பதாக சரத் பொன்சேகா பல தடவைகள் கூறியிருந்தார் இந்த நிலையிலேயே அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர், சரத் பொன்சேகாவுடன் சிறப்பு சந்திப்பு இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ற.ரி2)

# சிரியப் படுகொலைகளை கண்டித்துப் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

சிரியப் படுகொலைகளைக் கண்டித்து வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இன்று கண்டனப் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன. மு.ப. 10 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாகவும், பி.ப. 4 மணிக்குத் திருகோணமலை சிவன் ஆலய முன்றலிலும் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன. இந்தப் போராட்டத்தில் தமிழ் மக்கள் அனைவரும் இணைந்து இனப்படுகொலைக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும் என்று போராட்டங்களை ஏற்பாடு செய்துள்ள இனப்படுகொலைக்கு எதிரான தமிழ் மக்கள் அமைப்புக் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த சில தினங்களாக சிரியாவில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் பச்சிளம் குழந்தைகளும், பெண்களும் அதிகளவில் உயிரிழந்துள்ளனர். அந்த ஒளிப்படங்கள் வெளியாகி உலகில் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளன. (ற-21)

# 30 லட்சம் ரூபா செலவில் பாய் நெசவுத் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்,மார்ச்.01


யாழ்ப்பாணம் வாதரவத்தை பெரிய பொக்கணை அக்காச்சி குடியிருப்பில 30 லட்சம் ரூபா செலவில் பாய் நெசவுத் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மகளிர் கைத்தொழில் மேம்பாடு மற்றும் குடும்ப வாழ்வாதாரத்தை கருத்தில்கொண்டு வடக்கு மாகாண தொழில் துறைத் திணைக்களத்தால் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை திதியின் மூலம் 2017ஆம் ஆண்டு 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் பாய்நெசவு நிலையத்துக்கான புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது.

10 லட்சம் ரூபா செலவில் பாய்நெசவுக்கான தறிகள் (நெசவுகருவிகள்) மற்றும் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. மொத்தம் 30 லட்சம் ரூபா செலவில் பாய் நெசவுத் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

வாதரவத்தை மற்றும் பெரிய பொக்கணைச் சுற்றாடலில் பாய் நெசவுக்கான மூலப்பொருளாக பயன்படுத்தப்படும் "சம்புப்புல்" காணப்படுகின்றது. நீர் நிலைகளில் வளர்ந்து காணப்படும் சம்புப்புல்லை அறுவடைசெய்து காய வைத்து பதப்படுத்தி நிறம் பூசப்பட்டு பல்வேறு வர்ணங்களையும் கொண்டதாக பாய்நெசவு செய்யப்படுகின்றது.

குறித்த பாய் நெசவுத் தொழிற்சாலை இராணுவ நடவடிக்கையின்போது முற்றாக சேதமாக்கப்பட்டது. இராணுவ நடவடிக்கைக்கு முந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் சிறப்பான முறையில் செயற்பட்ட இந்த தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட பாய்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் தனித்துவமான சிறப்புக்கொண்டதாக சந்தைப்படுத்தப்ட்டு வந்தன. பல யுவதிகள் தொழில் வாய்ப்பை பெற்றிருந்ததோடு சம்பந்தப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரமும் மேம்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (எ-11)



## இல்ல மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்.மார்ச்.01

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் தரம் 5 மாணவர்களின் தற்காப்புக் கலை (கராட்டி) கண்காட்சி பலரின் கவனத்தையும் பாராட்டையும் பெற்றிருந்தது. பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்வின் இடைவேளை நேரத்தில் மாணவர்களின் கராட்டி நிகழ்வு நடைபெற்றது. அந்த நிகழ்வு பலரின் கவனத்தையும் பாராட்டையும் பெற்றிருந்தது. (37)

## வாழைப்பழத்தின் விலையில் திடீர் சரிவு

யாழ்ப்பாணம்.மார்ச்.1

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை திடீரென சரிவடைந்ததால் வாழைச்செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போதைய நிலையில் நுகர்வுப் பயன்பாடு குறைந்து காணப்படுவதாலும் செய்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாலும் அவற்றின் விலையில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என வாழைச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக நீர்வேலி வாழைக்குலை விற்பனைச் சந்தைக்கு அதிகளவிலான வாழைக்குலைகள் வந்து சேர்கின்றன. நேற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட வாழைக்கலைகள் வந்து சேர்ந்தன. கதலி வாழைப்பழம் கிலோ 30 ரூபா வரை விற்கப்பட்டது. தென் பகுதியில் இருந்து அதிகமாக வியாபாரிகள் சந்தைக்கு வாகனம் மூலம் வருகை தந்து இவற்றைக் குலைகளாக எடுத்துச்செல்கின்றனர். வாழைப்பழத்தின் திடீர் விலை வீழ்ச்சியால் செய்கை யாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். (எ-17)

## வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களால் இருவர் காயம்

சாவகச்சேரி மார்ச் 1

சாவகச்சேரி நகரப் பகுதியில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த இருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி நகரசபைப் பக்தியில் இடம்பெற்ற தாக்குதலில் சாவகச்சேரி கச்சாய் சாலையைச் சேர்ந்த செல்வராசா அரவிந்தன் ( வயது 35 ) , சாவகச்சேரி சிவன் கோவிலடிப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் அப் பகுதியைச் சேர்ந்த தர்மலிங்கம் கேதீஸ்வரன் (வயது 30 ) ஆகியோர் காயமடைந்தனர். சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த அவர்களில் கண்ணில் பாதிப்பு ஏற்பட்ட த.கேதீஸ்வரன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஆரம்ப விசாரணையைக் கொண்டு பொலிஸார் தெரிவித்தனர். (எ-9)

## கிணற்றில் வீழ்ந்த மூதாட்டி சாவு

தென்மராட்சி மார்ச் 1

கிணற்றில் குளிக்கச் சென்ற 90 வயது மூதாட்டி கிணற்றினுள் தவறி வீழ்ந்து சாவடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கொடிகாமம் கச்சாய் சாலை மடத்தடி ஒழுங்கையில் இடம்பெற்றது.

மூதாட்டியின் சாவு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் அறிக்கை தாக்கல் செய்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரி சீ.இளங்கீரன் மூலம் சாவு விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## குடும்பப் பெண்ணை கடத்திய வழக்கில் கைதுசெய்யப்பட்ட நபர்கள் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 1

குடும்பப் பெண்ணை கடத்திச் சென்றமை தொடர்பான வழக்கில் விசாரணைக்கு நீதிமன்றம் வருகை தராதிருந்த சந்தேக நபர்கள் 4 பேர் மற்றும் பிணையாளிகள் இருவரைப் பொலிஸார் கைதுசெய்தனர். அவர்களுக்கு நேற்றைய தினம் பிணை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 31வயதுடைய குடும்பப் பெண் ஒருவரை கடத்திச்சென்ற வழக்குத் தொடர்பில் 6 சந்தேக நபர்களையும் 6 பிணையாளிகளையும் கைது செய்யுமாறு பருத்தித்துறைநீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இவர்கள் ஏழாலைப் பகுதியில் கைதுசெய்யப்பட்டனர். இவர்களை நேற்றையதினம் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். விசாரணையின்பின் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (26)

### சாவகச்சேரி நகரசபை பொது மைதானத்தில்

## மலகூடம் அமைக்கும் பணிகள் ஆரம்பம்

சாவகச்சேரி, மார்ச். 1

சாவகச்சேரி நகரசபை பொது மைதானப் சீரமைப்பையடுத்து மைதான வளாகத்தில் இருபாலாருக்குமான மலகூடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மைதானப் சீர மைப்புக்கென தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் ஐக்கிய ராச்சியத்தினர் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா தென்மராட்சி பிரதேச செயலகத்திடம் வழங்கியதையடுத்து மைதானப் சீரமைப்புப் பணிகளுடன் மலகூடம் அமைக்கும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.


இந்த மைதானத்தில் எதிர் வரும் பத்தாம் திகதி பிரதேச விளையாட்டு விழாவும் பரிசில்கள் வழங்கலும் இடம்பெறும் நிலையில் பிரதேச பொது அமைப்புகள் மைதானத்தை சிரமதானம் செய்து வருகின்றமை குறிப்பி டத்தக்கது. (எ-9)

## சிதறு தேங்காய் நெற்றியை பதம் பார்த்தது

சாவகச்சேரி மார்ச் 1

ஆலய தேர் திருவிழாவில் தேருக்கு முன்னால் உடைக்கப்பட்ட தேங்காயின் சிதறல் அங்கு நின்ற ஒருவரின் நெற்றியைத் தாக்கிக் காயப்படுத்தியது.

இந்தச் சம்பவம் நேற்று சங்கத்தானையில் இடம்பெற்றது. புலம்பெயர் நாடொன்றிலிருந்து சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோவில் பெருந்திருவிழா காண வந்திருந்த நபர் தேர் பவனியில் கலந்துகொண்டிருந்தார். அதன்போது உடைத்த தேங்காய் சிதறல் பறந்து நெற்றியைத் தாக்கியதெனத் தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)





## சங்கானையில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாம்

சங்கானை மார்ச் 1

யாழ்ப்பாணம் சங்கானை, வலி.மேற்குப் பிரதேச ஓய்வூதியர் நிதியத்தினால் நடத்தப்பட்ட இலவச மருத்துவ முகாம் சங்கானைக் கலாசார மண்டபத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றது. சங்கானை தேசிய சேமிப்பு வங்கியின் அனுசரைனையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட சமூகத் துறையினரும், சங்கானை மருத்துவ அதிகாரி பணிமனையும் இணைந்து நடத்தியிருந்தத முகாமில் பெருமளவானோர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். முகாமில் சமூகமளித்தவர்களைப் படங்களில் காணலாம். (29)

# ஆலயங்கள் உடைக்கப்படுவதற்கு சர்வமதப் பேரவை கடும் கண்டனம்

யாழ்ப்பாணம்,மார்ச்.1

**வடக்கில் தொடர்ந்து இந்து ஆலயங்கள் விஷமிகளால் சேதமாக்கப்படுவதை யாழ்ப்பாண மாவட்டச் சர்வமதப் பேரவை வன்மையாகக் கண்டித்துள்ளது. இது தொடர்பில் பேரவை அனுப்பியுள்ளள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:**

யாழ்ப்பாணம் நல்லூர் மாநகர சபைக்கு உட்பட்ட ஏ-9 வீதியும் செம் மணி வீதியும் இணையும் சந்தியில் மிகப் பழமையானதும் பிரசித்தி பெற்ற துமான பிள்ளையார் கோவில் அமைந்திருந்தது. அந்தக் கோவிலும் அங்கு வீற்றிருந்த பிள்ளையார் சிலை யும் கடந்த 23ஆம் திகதி அன்று விஷ மிகளால் இடித்துச்.சேதமாக்கப்பட்டன. இது மிகவும் கண்டிக்கத்தக்க விடயமா கும்.


அதேபோன்று மன்னார் முல்லைத்தீவு மாவட்டங்களில் இந்து ஆலயங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. இவ்வாறான மோசமான செயல்கள், இந்துக்களின் உரிமைகளையும் மதச் சுதந்திரத்தை யும் பாதிப்படையச் செய்கிறது. எமது நாட்டின் அரசமைப்பின் பிரகாரம் ஒவ் வொரு நபர்களுக்கும் அவரவர் மதங் களின் அனுஷ்டானங்களைக் கடைப் பிடித்து நடப்பதற்கு ஜனநாயக உரிமை யுள்ளது.

மேற்படி விஷமிகளின் செயல்கள் மதங் களுக்கிடையில் நிலவிவரும் நல் லெண்ணத்துக்கு குந்தகம் விளைவிக் கக் கூடியதாக அமைந்துள்ளது. இந்தச் சம்பவங்கள் போன்று கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுபவர்கள் பொலிசா ரால் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களிடமிருந்து ஆல யத்துக்கான நட்ட ஈடுகளை பெற்று புனரமைக்க அரசு நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும்.

இதுதவிர, இந்து ஆலயங்கள் உடைப் புக்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னாரில் நேற்றுமுன்தினம் கண்டனப் பேரணி இடம்பெற்றது.

மேலும் பல அமைப்புகளும் ஆலயங் களின் உடைப்புக்குக் கண்டனம் தெரி வித்துள்ளமை குறிப்பிடத்தக்கது - என் றுள்ளது.





சாவகச்சேரி சங்கத்தானை ஈழவாரியம்பதி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலய பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று நடைபெற்றது. அம்பாள் தேரில் எழுந்தருளி வருவதைப் படத்தில் காண லாம். (எ-9)

## வாகன விபத்து இருவருக்கு காயம்

யாழ்ப்பாணம்.மார்ச்.1

தெல்லிப்பழை மூத்த விநாயகர் கோவிலடியில் கடந்த 27ஆம் திகதி மாலை 3.10 மணியளவில் முச்சக்கரவண்டி துவிச்சக்கரவண்டியில் வந்த இளைஞன் மீது மோதியதில் விபத்து நிகழ்ந்தது.

இதில் நவிண்டிலைச் சேர்ந்த சிவராஜ் அனுதனுசன் (வயது 26) இவர் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணமம் போதனா வைத்தி யசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவரது நிலை கவலைக் கிடமாக உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதனையடுத்து அந்த இளைஞனின் உறவினர்கள் தன் னைத் தாக்கினார்கள் எனக்கூறி முச்சக்கரவண்டி சாரதி மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின் றார். ஜயனார் வீதி பருத்தித்துறையை சேர்ந்த மாணிக்கம் சத்தியானந்தன் (வயது 56) என்பவரே தாக்குதலுக்கு உள் ளானவர் ஆவார். (67)

## நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச்1

வடக்கு மாகாண பண்பாட் டலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் வலி. தெற்கு பிரதேச கலாசார பேரவை மற்றும் உடுவில் பிரதேச செயலகம் இணைந்து நடத்தும் நூல் கள் வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செய லக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று ஏற்பாட் டாளர்கள் தெரிவித் துள்ளனர்.

பிரதேச செயலர் திருமதி மதுமதி வசந்தகுமார் தலை மையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசா லையின் முன்னாள் விரிவு ரையாளர் ஆறுமுகம் ஸ்ரீ ஸ்கந்த மூர்த்தி கலந்து சிறப்பிக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (4.7)



## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மாரச். 1

யாழ்ப்பாணம் வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு, பாடசாலை மைதானத்தில் நேற்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் கோகு லவாசன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட்டுக் கோட்டை ஸ்ரீ முருகன் களஞ்சிய உரிமையாளர் ஸ்ரீ ஜீவா கலந்துகொண்டார்.

## இரவுநேர காவலாளி இல்லாது இயங்கும் பிரபல பாடசாலை

### கல்விசார் ஆர்வலர்கள் கவலை

கிளிநொச்சி.மார்ச்.1

கண்டாவளைப் பிரதேசத் துக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பிரபல்யமான பாட சாலை ஒன்றில் சுமார் மூன்று வாரங்களுக்கு மேல் இரவு நேரக் காவலாளி இல் லாது காணப்படுவதாக கல் விசார் ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட் பட்ட பிரபல்யமான உயர் தர பாடசாலையில் இவ்வா றான ஒரு நிலை காணப்ப டுவது வருந்தத்தக்க விட யம் என்று தெரிவிக்கின்ற னர். கடந்த வருடக் காலப்ப குதியில் மாற்றம் பெற்று ஒரு காவலாளி வருகை தந்ததாகவும் அவர் சுமார் மூன்று வாரங்களாகக் கட மைக்கு சமூகமளிக்காத நிலையில் மாற்றுக் காவ லாளி நியமிக்கப்படாமல் காணப்படுவதாகவும் இத னால் பாடசாலை நிலை பின்னோக்கி செல்லக்கூடிய நிலை காணப்படுவதாக வும் கவலை தெரிவிக்கின் றனர்.

இது தொடர்பாக வலயக் கல்வி பணிப்பாளர் ஜோன் குயின்ரசிடம் கேட்டபோது அவர் மூன்ற வாரங்களாக விடுமுறையில் இருப்பதாக வும் விரைவில் கடமைக்கு திரும்புவார் எனவும் தெரி வித்தார். (எ-6)

## இரண்டு நூல்கள் நல்லை ஆதீனத்தில் இன்று வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச்1

"இலங்கையிலும் தமிழகத் திலும் கதாபிரசங்கக் கலை, அர்த்தமுள்ள சம்பிரதாயங் கள் பாகம் 11" ஆகிய இரண்டு நூல்களின் வெளியீடு நல்லை ஆதீனத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடை பெறும் என்று ஏற்பாட்டாளர் கள் தெரிவித்துள்ளனர்.

கொக்குவிலைச் சேர்ந்த "கான தமிழ்மணி, கலாபூச ணம் செந்தமிழ்ச் செம்மல் எம்.எஸ்.ஸ்ரீதயாளன் எழு திய இந்த இரண்டு நூல்க ளின் வெளியீட்டுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதல மைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் கலந்துகொள்வார்.

கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணத்திலுள்ள இந் திய துணைத்தூதரகஹொன் சியூலர் ஏ.நடராஜனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப் பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முக லிங்கன், கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலா ளர் உடுவை சி.தில்லைந டராஜா ஆகியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப் பட்டது. (4.7)

## சமயங்களினூடாக நல்லிணக்கம் காணல்' சிறப்புக் கலந்துரையாடல் மன்னாரில்

மன்னார்.மார்ச்.1

'சமயங்களினூடாக நல்லி ணக்கம் காணல்' எனும் தொனிப்பொருளில் தேசிய சமாதான பேரவை மற்றும், ஒப்பன் நிறுவனம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த சிறப்புக் கலந்துரையாடல் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுத யத்தில் கடந்த திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் இடம் பெற்றது.



தேசிய சமாதான பேரவை யின் மாவட்ட நிகழ்ச்சித்திட்ட அலுவலகர் ஏ.மெடோசன் பெரேரா தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் சர்வமதத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புக்களின் பிரதி நிதி கள், இளைஞர் அமைப்பு ஆகியவற் றின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர். கலந்துரையாடலில், இலங்கையில் இடம்பெற்ற போரின் பின் னர் ஏற்பட வேண்டிய நல்லிணக்கம் தொடர்பிலும், சமையங்களுக்கிடையி லும், மக்களுக்கிடையிலும் ஒற்றுமை யினை ஏற்படுத்துதல் மற்றும் முரண் பாடுகளின் காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்த்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரி வாக ஆராயப்பட்டது. (எ-56)

## கலந்துரையாடல்

"போதை மற்றும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்து வோம் "என்ற தொனிப்பொருளிலான விழிப்புணர்வுச் செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையடால் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறும். யாழ்ப்பாணம் பிரதேச கலாசார அதிகார சபையினர் இதனை நடத்துகின்றனர். பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாண பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று பிரதேச செயலர் தெரிவித்தார். (4,7)

# அரசியல் வேறுபாடுகளை களைந்து செயற்படவேண்டும்

## இதைப் புரிந்து நடக்குமாறு ஈ.பி.டி.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 1
பல்வேறு தேவைகளுடனும், கோரிக்கைகளுடனும் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது மக்களுக்குச் சேவை செய்ய அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாலும் செயற்பட வேண்டியதன் அவசியத்தை ஒவ்வொருவரும் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும். இவ்வாறு ஈ.பி.டி.பி. நேற்று அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்தக் கட்சியினால் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பத்திரிகைச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆயிரம் வாக்குறுதிகளை வழங்கி வாக்குகளைக் கேட்டவர்கள் மக்கள் வழங்கிய ஆணையை மதித்து மக்களுக்குசேவையாற்ற முன்வர வேண்டும். தேர்தல் முடிந்த கையோடு மக்களை மறந்து அர்த்தமற்ற அறிக்கைகளை வெளியிடுவதும் அரசியல் காழ்ப்புணர்ச்சிகளை உமிழ்வதும் வாக்களித்த மக்களுக்கு எவ்விதமான பயனையும் பெற்றுத்தர போவதில்லை.

கிடைக்கப்பெற்றமக்கள் ஆணையை நாடாளுமன்றத்திலும், மாகாண சபையிலும் அர்த்தமற்றதாக்கியதைப் போன்று உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தையும் முடக்கும் விதமாக எவரும் செயற்படக் கூடாது.

தமக்கு சேவைகளாகப் பலன் கொடுக்க வேண்டுமென மக்கள் வழங்கிய வாக்குகள் மீதான நம்பிக்கையை ஒவ்வொருவரும் உணர்ந்து செயலாற்ற முன்வர வேண்டும். அந்த வகையிலேயே நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத்தேர்தலில் ஆட்சி அமைக்கக் கூடிய முயற்சி எடுக்கக் கூடியவர்கள் ஆட்சி அமைக்க முன்வர வேண்டும். அத்தகையவர்கள், மக்கள் நலன் சார்ந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் போது அதற்கு நாம் முழுமையான ஆதரவை வழங்குவோம் என்றும் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தோம். எமது அறிவிப்பைத் தொடர்ந்து ஆட்சி அமைக்க சிலர் முயற்சித்தாலும் அதற்கான பேச்சுக்கள் உத்தியோகப்பற்றற்ற வகையிலேயே இன்னமும் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. அந்த முயற்சிகள் வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் காலத்தை கவனத்தில் கொண்டு அர்த்தமுள்ள உத்தியோகபூர்வமான பேச்சுக்கள் நடைபெறுவது அவசியமானது. அதற்கான கதவுகள் இன்னமும் திறந்தேயிருக்கின்றன. பல்வேறு தேவைகளுடனும், கோரிக்கைகளுடனும் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது மக்களுக்குச் சேவை செய்ய அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாலும் செயற்பட வேண்டியதன் அவசியத்தை ஒவ்வொருவரும் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும் என்றுள்ளது. (5)

### காணாமல்...

மற்றும் உறுப்பினர்களுக்கு அரச தலைவர் மைத்திரிபாலவால் நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினரான சாலிய பீரிஸ் ஆணைக்குழுவின் தலைவராகவும், லியனகே, நிமல்கா பெர்னாண்டோ, பாதுகாப்புத் தரப்பின் சார்பில் வான் படையின் சட்டஆலோசகராகச் செயற்படும் மொகான் பி பீரிஸ், மட்டக்களப்பைச் சேர்ந்த ஜயதீபா, ரகீம் முல்லைத்தீவைச் சேர்ந்த வேந்தன் ஆகியோர் அரசமைப்புச் சபையினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் ஏழுபேருக்கும், அரச தலைவர் செயலகத்தில் வைத்து நேற்று நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

காணாமற்போனோர் பணியகத்தை உருவாக்கும் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு 11 மாதங்களின் பின்னரே அதனை நடைமுறைப்படுத்தும் அரசிதழில் அரச தலைவர் கையெழுத்திட்டார். இதன் பின்னர் பணியகத்துக்கான ஆணையாளர்களை, அரசமைப்புச் சபை நேர்முகத் தேர்வின் ஊடாகத் தெரிவு செய்திருந்தது. அரசமைப்புச் சபையின் முதல் பரிந்துரையில் அரச தலைவர் சில திருத்தங்களை மேற்கொண்டிருந்தார்.

பின்னர் மீளவும் அரசமைப்புச் சபை ஆணையாளர் மற்றும் உறுப்பினர்களைப் பரிந்துரைத்திருந்தது. அரசமைப்புச் சபை பரிந்துரைத்து ஒன்றரை மாதங்களின் பின்னரே, அரச தலைவர் மைத்திரிபால நியமனம் வழங்கியுள்ளார். (ற-5)

### ரவிகரன்...

தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். பிணையில் விடுவிக்க பொலிஸார் மறுத்தபோதும் சட்டத்தரணிகளின் கடுமையான வாதங்களையடுத்து அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஒவ்வொரு மாதத்தின் இறுதி வெள்ளிக்கிழமைகளை நீதிமன்றில் கையெழுத்திடவேண்டும் என்ற நிபந்தனையுடன், தலா 2 லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணையில் அவர் விடுவிக்கப்பட்டார்.

கடந்த 22 ஆம் திகதி வட்டுவாகல் கோத்தபாய ராஜபக்ச கடற்படை முகாமுக்காக மக்களின் காணிகளைக் சுவீகரிக்கும் முன்னேற்பாடுகள் நடைபெற்றன. காணிகளை அளவீடு செய்ய நில அளவைத் திணைக்களத்தினர் வந்திருந்தனர். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் வட்டுவாகல் பாலத்தை மறித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனும் கலந்து கொண்டார். இறுதியில் அளவீட்டு நடவடிக்கையை இடைநிறுத்திநில அளவைத்திணைக்களத்தினர் திரும்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. ரவிகரனிடம் வாக்குமூலம் பதிவு செய்யப் பொலிஸார் அழைத்திருந்தனர். நேற்றுக் காலை 8.15 மணிக்கு அவர் முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றார். விசாரணைகளைத் தொடர்ந்து அவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

முற்பகல் 10 மணியளவில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்காக பொலிஸ் ஜீப்பில் அழைத்துச் சென்றனர். முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் லெனின்குமார் முன்னிலையில் வழக்கு விசாரணை நடைபெற்றது. பொலிஸார் தமது விசாரணைகள் முடிவடையவில்லை என்பது உள்ளிட்ட 3 காரணங்களை முன்வைத்து நாளை வெள்ளிக் கிழமை வரையாவது விளக்கமறியலில் வைக்க வேண்டும் என்று கோரினர். பிணை வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். சட்டத்தரணிகளின் வாதங்களையடுத்து நீதிவான் பிணை வழங்கினார். (ற-5.26,ரி3)

### குற்றவாளிகளுக்கு...

கொழும்பு, மார்ச் 1
அம்பாறை நகரில் முஸ்லிம் கடைகளை உடைத்து, பள்ளிவாசலையும் அதனோடு ஒட்டியிருந்த தங்கும் அறைகளையும் நொறுக்கி, வாகனங்களையும் தீக்கிரையாக்கிய சம்பவத்துக்கு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளார். அம்பாறைச் சம்பவத்தின் குற்றவாளிகளுக்கெதிராக மிகக் கடுமையான நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அம்பாறை நகரில் முஸ்லிம் சமூகத்தினருக்கெதிராக நடத்தப்பட்ட தாக்குதல்களை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். எந்தவகையிலான வன்முறைகளையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று வலியுறுத்தும் அதேவேளை, பிரிவினையையும் ஒற்றுமையின்மையையும் உருவாக்கும் வகையில் இத்தகைய விரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளோர் மக்களிடையே இன முறுகலைத் தோற்றுவிக்கும் வகையிலான நடவடிக்கைகளில் இருந்து விலகி நிற்கவேண்டுமென நான் வற்புறுத்த விரும்புகின்றேன்.

அம்பாறைச் சம்பவத்தின் குற்றவாளிகளுக்கெதிராக மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசை வலியுறுத்துகின்ற அதேவேளை, இத்தகைய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன். கடந்த காலத்தில் இப்படியான சம்பவங்கள் இடம்பெற்றதையும், அத்தகைய ஏற்றுக்கொள்ள முடியாத நடவடிக்கைகளினால் ஏற்பட்ட பாதக விளைவுகளையும் நாம் அனுபவித்திருக்கின்றோம். பொலிஸாரிடமும் ஏனைய அதிகாரிகளிடமும் இத்தகைய சம்பவங்களுக்கு எதிராக பாகுபாடின்றி சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தப் பிரதேசங்களிலே சமாதானமும் அமைதியும் பேணப்படுவதை சமயத் தலைவர்கள் உறுதிசெய்ய வேண்டுமென நான் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளும் அதேவேளை, இந்தச் சம்பவங்களின் நிமிர்த்தம் கடும்போக்காளர்களின் கைகள் ஓங்காமல் இருப்பதை உறுதிசெய்யுமாறும் வேண்டிக்கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் வகையில் அமைதியைக் கடைப்பிடித்து நடந்துகொள்ளுமாறு அம்பாறை மற்றும் ஏனைய பிரதேசங்களிலுள்ள மக்களிடம் நான் கோரிக்கை விடுக்கின்றேன் - என்றுள்ளது. (ற-5)

## தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம்

# கடற்படைத் தளபதி பொறுப்பிலிருந்து தப்பவே முடியாது

## குற்றப் புலனாய்வு பிரிவு மன்றுக்கு அறிக்கை

கொழும்பு, மார்ச் 1
கொட்டாஞ்சேனையில் கடந்த 2009ஆம் ஆண்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வடிவேல் பக்கிளிசாமி லோகநாதன், இரத்னசாமி பரமானந்தன் ஆகியோர் கொலை செய்யப்பட்டுள்ளதாக நம்பப்படும் நிலையில் அவர்களின் அந்த நிலமைக்கு கடற்படையின் ரியர் அத்மிரால் ஆனந்த குறுகே, லெப்டினன் கொமாண்டர் தர அதிகாரிகளான தயாநந்த மற்றும் மாபா ஆகியோரே பொறுப்புக் கூறவேண்டும் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு நீதிமன்றுக்கு நேற்று அறிவித்தது.

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் திகதி கொட்டாஞ்சேனையில் இருந்து வெல்லம்பிட்டிய பகுதியை நோக்கி தனது பீ.ஏ. 6023 என்ற இலக்கத்தை உடைய வாகனத்தில் பயணித்த போது கடத்தப்பட்ட வடிவேல் பக்கிளிசாமி லோகநாதன் மற்றும் உறவினரான பொரளையைச் சேர்ந்த இரத்னசாமி பரமானத்தன் ஆகியோரது கடத்தல் தொடர்பிலான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போதே குற்றப் புலனயவுப் பிரிவின் கூட்டுக் கொள்ளை தொடர்பிலான விசாரணைப் பிரிவினர் கொழும்பு மேலதிக நீதிவான் சாந்தனி டயஸுக்கு மேற்படி விடயத்தை அறிவித்தனர்.

இந்த விவகாரம் தொடர்பில் அப்போது கடமையில் இருந்த கடற்படைத் தளபதி, உளவுத் துறை பிரதானி ஆகியோரும் பொறுப்புக்களில் இருந்து தப்பிவிடமுடியாது என்பதைக் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளில் வெளிப்படுத்தியுள்ளதாக, நீதிவானுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தர் விட்ட நீதிவான் சாந்தனி டயஸ், வழக்கை எதிர்வரும் ஜூலை 18 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (5,71)

## மீனவர் பிரச்சினைக்கு

# இருதரப்பும் ஒன்றுபட்டு தீர்வு காண வேண்டும்

## இந்தியாவில் வைத்து மகிந்த தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 1
இலங்கை இந்திய மீனவர் பிரச்சினைக்கு இரு தரப்பினரும் இணைந்து தீர்வொன்றுக்கு வர வேண்டும் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டு இந்தியாவுக்குச் சென்ற முன்னாள் அரச தலைவர் மகிந்த, நேற்றுக் காலை முக்கிய பிரமுகர்கள் தரிசனத்தில் ஏழுமலையானை தரிசித்துள்ளார். ஏழுமலையானை தரிசித்த பின்னர் திருப்பதி மலையில் ஊடகவியலாளர்கள் அவரிடம் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்து கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை அரசியலில் நாங்கள் தற்போது ஏறுமுகத்தில் இருக்கிறோம். அரசியலில் எங்களுக்கு சிறந்ததொரு கொள்கை இருக்கின்றது. அதன் பிரகாரமே நாங்கள் செயற்படுகின்றோம். அதனால் தான் எமது மக்கள் எங்களை ஆதரிக்கின்றனர்.

'இந்திய, இலங்கை இருதரப்பினருக்கும் பாதிப்பாக இருந்துவரும் மீனவர் பிரச்சினைக்கு ஏன் தீர்வொன்றை தேடாமல் இருக்கின்றனர்?' என்ற கேள்விக்கு, ஆம், அதனை செய்வதற்குதான் நாங்கள் முயற்சிக்கின்றோம். அதற்காக இரு தரப்பினரும் ஒன்றுபட்டு ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும். என்றாலும் துரதிர்ஷ்டவசமாக அது இடம்பெறாமல் இருக்கின்றது - என்றார். (5,31)

### பள்ளிவாசல்...

தாகவே உள்ளது.

இவ்வாறு அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

அம்பாறைக்கு நகருக்கு நேற்றுப் பயணம் செய்திருந்த அமைச்சர் தலைமையிலான குழு தாக்குதலுக்குள்ளான பள்ளிவாசல், கடைகள் மற்றும் தீக்கிரையாக்கப்பட்ட வாகனங்கள் ஆகியவற்றை பார்வையிட்டார். சம்பவம் தொடர்பில் பள்ளிவாசல் நிர்வாகத்தினரிடமும், ஊர்ப்பிரமுகர்களிடமும் விவரங்களைக் கேட்டறிந்து கொண்டார். அங்கு வந்திருந்த பொலிஸ் உயரதிகாரிகளிடம் உரையாடும்போது அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

பள்ளிவாசலில் இருந்து சில மீற்றர் தொலைவுக்கு அப்பால் அமைந்திருந்த ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற சர்ச்சையை அடுத்து, நூற்றுக் கணக்கானோர் வேண்டுமென்றே இந்தப் பள்ளிவாசலுக்கு வந்து தாக்குதல் நடத்தியதன் காரணம் என்ன? இதன் பின்னணிதான் என்ன?

இந்த நாசகார செயலைப் புரிந்தவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். இலங்கை புலனாய்வுத்துறை இவர்களை கண்டுபிடிக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கூறினார். (ற-5)

# கொத்துக் குண்டுகளை ராணுவம் போரில் பயன்படுத்தவேயில்லை

## கலப்பு நீதிமன்றுக்கு இணங்கியவர் மகிந்ததான் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 1

இலங்கை இராணுவம் போரின்போது எந்தவொரு கட்டத்திலும் கொத்தணிக்குண்டுகளை பயன்படுத்தவில்லை. பாதுகாப்புத் தரப்பினர் கொத்தணிக்குண்டுகளை பாவித்தமைக்கான எந்தவொரு சாட்சியமும் இல்லை. கலப்பு நீதிமன்றப் பொறிமுறைக்கு முதலில் முன்னாள் அரச தலைவர் மகிந்தவே இணங்கினார். தற்போதைய அரசு அதற்கு இணங்கவில்லை.

இவ்வாறு அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

போரின் போது இலங்கை எந்தவொரு கட்டத்திலும் கொத்தணிக்குண்டுகளை பயன்படுத்தவில்லை. இவ்வாறு கொத்தணிக்குண்டுகளை பயன்படுத்தியதாக பன்னாட்டுச் சமூகத்தின் பல்வேறு தரப்புக்கள் குற்றம்சாட்டிய போதும் அவற்றை நாம் நிராகரித்துள்ளோம். அதற்கு எவ்விதமான ஆதாரங்களும் இல்லை. எதிர்வரும் காலங்களிலும் கொத்தணிக்குண்டுகளை பயன்படுத்தக்கூடாது என்பது இலங்கை அரசின் நிலைப்பாடாகும். அதே போன்று தற்போதைய நிலமையில் 102 நாடுகள் இணக்கம் வெளியிட்டுள்ள கொத்தணிக்குண்டுகள் தொடர்பான பன்னாட்டுச் சாசனத்திற்கு (ஒஸ்லோ சாசனம்) இலங்கை இணக்கம் தெரிவிக்கின்றது.. இது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன் வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கலப்புநீதிமன்றத்தை நாங்கள் ஏற்கவில்லை. கடந்த அரசின் காலத்தில் கலப்பு நீதிமன்றத்துக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் பின்னர் கற்றறிந்த பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்து அதனை சமாளித்துக்கொண்டனர். மகிந்த ராஜபக்ச கடந்த காலத்தில் பன்னாட்டுச் சமூகத்தை நன்றாகவே ஏமாற்றியிருக்கின்றார். 2009ஆம் ஆண்டு 13 பிளஸ் என்ற விடயத்தை மகிந்த ராஜபக்சவே முதலில் கூறினார். இலங்கைக்கு வந்து 13 மைனஸ் என்று கூறினார். இவ்வாறு பன்னாட்டுச் சமூகத்தையும் இலங்கையையும் மகிந்தவே ஏமாற்றினார் - என்றார். (5,61)

ரணில் எதிர்நீச்சல்!

### நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தடுக்க கட்சிகளின் ஆதரவு திரட்டுவதில் தீவிரம்

*அலரிமாளிகையில் தொடர் சந்திப்புகள்*

கொழும்பு, மார்ச் 1

நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தடுக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, இதற்காக தொடர் சந்திப்புகளை நடத்தி வருகின்றார்.

அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் மாலை கட்சி முக்கியத் தலைவர்களுடன் முக்கியத்துவமிக்க கலந்துரையாடலொன்றை நடத்தியிருந்த அவர், நேற்றைய தினமும் உயர்மட்டப் பிரமுகர்களுடன் பேச்சு நடத்தியிருந்தார்.

கட்சிக்குள் தனக்கான ஆதரவைத் தக்கவைத்துக் கொள்வதற்கும், தனக்கு எதிராக கட்சி உறுப்பினர் ஒருவரே நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டு வருவதை தடுப்பதற்காகவுமே தலைமை அமைச்சர் இவ்வாறு தொடர் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளார் என்று சிறிகொத்தா தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூட்டரசின் பிரதான பங்காளிக்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்ததையடுத்து அதன் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை தூக்கிவிட்டு, மகிந்த அணியின் உதவியுடன் தனியாட்சி அமைப்பதற்குரிய முயற்சியில் இறங்கிய சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சிமீது அதிருப்தியில் இருக்கும் அந்தக் கட்சி உறுப்பினர்களுடனும் பேச்சு நடத்தியது. கட்சிக்குள் மாற்றங்களைச் செய்வதற்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கொள்கையளவில் இணக்கம் தெரிவித்ததையடுத்து அதிருப்தி நிலையிலிருந்த கட்சி உறுப்பினர்கள் பின்வாங்கினர். அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டமும் ரணிலுக்குப் பெரும் பக்கபலமாக இருந்தது. இதனால் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

தலைமை அமைச்சருக்கு நெருக்கடி ஏற்படாது என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அந்தக் கட்சியின் உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் பாலித்த ரங்கே பண்டார ரணிலுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவரப்போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளதால் கொழும்பு அரசியலில் மறுபடியும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. ரங்கே பண்டாரவின் இந்த நடவடிக்கைக்கு கட்சி உறுப்பினர்கள் சிலர் ஆதரவு தெரிவித்ததையடுத்தே ரணிலுக்கு பெரும் தலையிடி ஏற்பட்டுள்ளது.

ரங்கே பண்டாரவுக்கு ஆதரவாக மகிந்த அணியும், மக்கள் விடுதலை முன்னணியும் குரல்கொடுத்துள்ளன. நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று கொண்டுவரப்பட்டு அதன்மீது இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படுமானால் நெருக்கடி ஏற்பட்டுவிடும் என்பதாலேயே அதைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் ரணில் விக்கிரமசிங்க இறங்கியுள்ளார். (5)

நுண்கடன் நிதிப் பிரச்சினை

### வடக்குக்கு மாத்திரம் உரியது அல்ல என்கிறார் நாமல் எம்.பி.

கொழும்பு, மார்ச் 1

அதிக வட்டியுடன் கூடிய நுண் கடன் திட்டத்தினால் வடக்கு மாகாண மக்கள் மாத்திரம் பாதிக்கப்படவில்லை. நாட்டில் உள்ள அனைத்து மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கை அரசின் தவறான பொருளாதார முகாமைத்துவமே காரணமாகும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். மக்களின் வறுமை, வேலையின்மை, அவசர நிதித் தேவை போன்ற காரணங்களைச் சாதமாகப் பயன்படுத்தி நுண்நிதி நிறுவனங்கள் அதிக வட்டியுடன் கூடிய கடனை மக்களுக்கு வழங்குகின்றது. கடனைப் பெற்ற மக்கள் அதனை மீள செலுத்த முடியாமல் கடன்காரர்களாகவும், உயிரையும் மாய்த்து வருகின்றனர். நுண் கடன் நிதித் திட்டங்களுக்கு எதிராக யாழ்ப்பாண கூட்டுறவாளர்களின் ஏற்பாட்டில் கண்டனப் பேரணி யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.. இது தொடர்பான செய்தி, இந்தியாவின் 'த ஹிந்து' ஊடகத்தில் வெளியாகியிருந்தது. அந்தச் செய்தியை மேற்கோள்காட்டி, நாமல் ராஜபக்ச கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார். அந்தப் பதிவில், இந்தப் பிரச்சினை வடக்குக்கு உரியது மாத்திரம் அல்ல. ஒட்டுமொத்த நாட்டுக்கும் உரியது. இலங்கை அரசின் தவறான பொருளாதார முகாமைத்துவமே இதற்குக் காரணம் என்று குறிப்பிட்டுள்ளார். (5,7)






### அன்று சிறிலங்கா இன்று சிரியாவா?

*நடிகர் விவேக் ஆவேசக் கேள்வி*

கொழும்பு, மார்ச் 1

சிரியாக் குழந்தைகளின் கதறல் உலக நாடுகளின் காதில் விழவில்லையா? என்று தென்னிந்திய நடிகர் விவேக் கேள்வியெழுப்பியுள்ளார்.

சிரியாவில் தொடரும் மோதல் தொடர்பிலும், அங்கு கொல்லப்படும் அப்பாவிக் குழந்தைகள் தொடர்பிலும், நடிகர் விவேக் தனது கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார்.

அவரது பதிவில், சிரியா குழந்தைகளின் கதறல் உலக நாடுகளின் காதில் விழவில்லையா? ஐ.நாவுக்கு கண் இல்லையா? இதை விவாதிக்க பன்னாட்டு நீதி அமைப்புகளுக்கு வாய் இல்லையா? இந்தக் கொடுமை தீர வழி இல்லையா? அன்று சிறிலங்கா இன்று சிரியா! ஆக,யாருக்குமே இதயம் இல்லையா? என்று குறிப்பிட்டுள்ளார். (5)

### ஆணைக்குழுக்கள் வழக்குகளை இனித் தாக்கல் செய்யலாம்

*சட்டத்தை திருத்துகிறது அரசு*

கொழும்பு, மார்ச் 1

விசாரணை ஆணைக்குழுக்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் தகவல்களைக் கொண்டு வழக்குத் தாக்கல் செய்வதற்குரிய வகையில் ஆணைக்குழுச் சட்டத்தை திருத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக, அமைச்சரவை இணைப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அரச தலைவர் மைத்திரிபால தலைமையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போதே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத் திருத்தம் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும். 1948 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழு திருத்தச் சட்ட வரைவை அரசிதழில் வெளியிடவும் அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் அரசு தீர்மானித்துள்ளது. இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (5,61)

# திருடிய மோ. சைக்கிளில் உல்லாசச் சுற்றுலா

### பொலிஸாரால் மாணவன் கைது

கொழும்பு, மார்ச் 1

ஈருருளிகளைத் (மோட்டார் சைக்கிள்களை) திருடி நண்பர்களுடன் உல்லாசச் சுற்றுலா மேற்கொண்ட மாணவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளான். சபுகஸ்கந்தை பிரதேசத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

வீடுகளின் முன்னால் நிறுத்தப்பட்டுள்ள 'ஸ்கூட்டர்களை' திருட்டுத்தனமாக எடுத்துச் சென்று உல்லாசமாக சுற்றித் திரிந்து விட்டு, இரண்டொரு நாள்களின் பின்னர் சனநடமாட்டமில்லாத இடமொன்றில் அதனைக் கைவிட்டுச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளான்.

சில தினங்களுக்கு முன்னர் இவ்வாறு ஈருருளி ஒன்றைத் திருடி உல்லாசச் சுற்றுலா மேற்கொண்டபோது, மாணவன் ஈருருளி உரிமையாளரிடம் கையும் மெய்யுமாக மாட்டியுள்ளான். அவர் மாணவனைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். (5)

# தியத்தலாவ குண்டுவெடிப்பை சாதாரணமாக கருதமுடியாதாம்

### கமால் குணரத்ன சர்ச்சையைக் கிளப்புகிறார்

கொழும்பு, மார்ச் 1

தியத்தலாவ ககொல்லவில் படையினர் உள்ளிட்ட 19 பேர் காயமடைந்த பேருந்துக் குண்டு வெடிப்புச் சம்பவத்தை அரசு அவ்வளவு சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு கைக்குண்டு வெடிப்பின் மூலம் நிச்சயமாக எந்தச் சூழ்நிலையிலும், தீ பரவாது. எனவே, இந்த வெடிப்புக்குக் காரணமான சூழல் தொடர்பாக அரசு மற்றும் இராணுவ அதிகாரிகள் விரிவாக ஆய்வு செய்ய வேண்டும்.

படை அதிகாரி ஒருவர் கைக்குண்டை வீட்டுக்குக் கொண்டு சென்ற போது தற்செயலாக நிகழ்ந்த வெடிப்பு என்ற முடிவுக்கு பொதுமக்கள் வந்தது ஏமாற்றத்தை அளிக்கிறது.

அரசியல் உறுதியற்ற நிலை தொடரும் சூழலில், நாட்டைக் குழப்பத்துக்குள்ளாக்கும் வகையில் பல்வேறு தந்திரோபாயங்கள் கையாளப்படக் கூடும்.

கைக்குண்டு வெடிப்புக்குப் பின்னர் தீ பரவியது என்றால், அந்தப் பேருந்து பெற்றோலில் இயக்கப்பட்டிருக்க வேண்டும் - என்றார். (5)



## தேர்தல் கணிப்பீடு தவறு

# 3 கட்சிகள் 200 ஆசனங்களை இழக்க வேண்டியிருக்குமாம்

### மகிந்த அணி தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்பெறுபேறுகளின் கணக்கெடுப்பில் பெரிய பிழை உள்ளது. விகிதாசாரப் பட்டியல் மூலமான பிரதிநிதிகள் கணக்கெடுப்பில் பிழை நிகழ்ந்துள்ளது. அந்தப் பிழை திருத்தப்படுமிடத்து மூன்று கட்சிகள் 200 க்கும் அதிகமான ஆசனங்களை இழக்க வேண்டியிருக்கும். இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப் பெரும தெரிவித்தார்.

மகிந்த அணியின் பத்திரிகையாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிறைவடைந்து இரு வாரங்கள் கடந்துள்ளன. உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களை அரசிதழ் மூலம் அறிவிப்பதற்கு இன்னும் இரு வார காலம் தேவைப்படும் எனத் தெரிவித்துள்ளனர். தேர்தலின் பின்னர் பட்டியலுக்குரிய உறுப்பினர்களைத் தெரிவு செய்வதில் பெரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. அரசு அவசரமாகக் கொண்டு வந்து நிறைவேற்றிய திருத்தத்தின் மூலமே சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. கட்டுப்பணத்தை இழந்த கட்சிகளுக்கும் ஆசனம் கிடைத்துள்ளது - என்றார். (5)

## பொருளாதார விவகாரங்களை மெல்லக் கையிலெடுக்கும் மைத்திரி

கொழும்பு, மார்ச் 1

தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் இயங்கி வந்த பொருளாதார முகாமைத்துவ குழுவால், எந்தப் பயனும் இல்லை என்பதால், அதனைக் கலைக்க வேண்டும் என்று அரச தலைவர் பரிந்துரைத்துள்ளதாக தெரியவருகிறது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அரச தலைவர் இந்தப் பரிந்துரையை முன்வைத்துள்ளார்.

பொருளாதார முகாமைத்துவ குழுவை கலைக்க வேண்டும். இந்தக் குழுவின் மூலம் கடந்த காலம் முழுவதும் எடுத்த முடிவுகள் தோல்வியடைந்துள்ளது, என்று மைத்திரி இதன்போது கூறியுள்ளார்.

அரச தலைவர் மைத்திரி முன்வைத்த இந்தப் பரிந்துரைக்கு அமைச்சர்கள் எவரும் எதிர்ப்பை வெளியிடவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலைமை அமைச்சர் ரணில் தலைமையிலான பொருளாதார முகாமைத்துவ குழுவில் நிதியமைச்சின் செயலர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க உள்பட நான்கு பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

அரசின் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பான சிறப்பு முடிவுகளை எடுக்கும் சிறப்புரிமை இந்தக் குழுவுக்கு வழங்கப்பட்டது. எனினும் அந்தச் சிறப்புரிமையை அரச தலைவர் தலைமையில் செயற்படும் தேசிய பொருளாதார சபைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (5)

# வழிதவறி மலை உச்சியில் மாட்டிய பல்கலை மாணவர்கள்

கொழும்பு, மார்ச் 1

ஹல்துமுல்லை மலை உச்சியில் வழிதவறி மாட்டிக் கொண்ட பல்கலைக்கழக மாணவர்களைப் பத்திரமாக மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலுள்ள தனியார் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் ஒன்பது பேர் மலையுச்சி சுற்றுலா அனுபவத்துக்காக ஹல்துமுல்லை பிரதேசத்தில் உள்ள வங்கெடி கந்தை (உரல் மலை) பிரதேசத்துக்குச் சென்றுள்ளனர்.

மலையுச்சியில் கூடாரமடித்து கடந்த திங்கட்கிழமை தங்கியிருந்த நிலையில் திடீர் காற்று மற்றும் மழைக்குள் சிக்கி பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

காற்றின் காரணமாக அவர்கள் தங்கியிருந்த கூடாரத்தின் கூரை பிடுங்கி வீசி எறியப்பட்டுள்ளது.

மாணவர்கள் மீண்டும் மலையடிவாரத்தை அடைய முடியாத நிலையில் வழிதவறி மலை உச்சியில் தவிக்க நேர்ந்துள்ளது. பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து சிறப்புப் பொலிஸ் குழுவொன்றினால் பிரதேச வாசிகளின் உதவியுடன் மாணவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

கடும் காற்று மற்றும் மழையில் பாதிக்கப்பட்டதன் காரணமாக மாணவரொருவர் சுகவீனமுற்றிருந்த நிலையில் அவரை மருத்துவமனையில் பொலிஸார் சேர்ப்பித்துள்ளனர். (5)

# புகையிலை ஒழிப்புக்கு அரசியல்வாதிகள் தடை

### மருத்துவர் மகேஸ் ராஜசூரிய தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 1

அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் காரணமாக புகையிலையை முற்றாக ஒழிக்கும் நடவடிக்கைககளில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு கொழும்புப் பல்கலைக் கழகத்தின் புகையிலை தொடர்பான கற்றல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் மகேஸ் ராஜசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் இருந்து புகையிலை உற்பத்தியை முற்றாக ஒழிப்பதில் அரசியல்வாதிகள் முட்டுக்கட்டையாக இருக்கின்றனர். எதிர்வரும் 2020ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் புகையிலை உற்பத்தியை முற்றாகத் தடை செய்ய அரசு தீர்மானித்துள்ளது. அது தொடர்பான சுற்றறிக்கை இதுவரை எந்தவொரு அரச நிறுவனத்துக்கோ அதிகாரிகளுக்கோ அனுப்பப்படவில்லை.

இலங்கையில் புகையிலை உற்பத்தியை ஊக்குவிக்கும் தனியார் நிறுவனமானது அரசியல்வாதிகளின் துணையுடன் விவசாயிகளுக்கு கடன் மற்றும் உபகரணங்களை வழங்கி அவர்களை தொடர்ந்தும் தன் பிடியில் வைத்துக் கொண்டுள்ளது. அரசியல்வாதிகளின் இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக புகையிலையை முற்றாக ஒழிக்கும் நடவடிக்கையில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது -என்றார். (5)

# சு.கவுக்குள் உயர்மட்ட மோதல் துமிந்த - சுசில் கடும் சொற்போர்

### மதில்மேல் பூனையாக மைத்திரி

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவுக்கும், தேசிய அமைப்பாளரான அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்குமிடையே கடும் சொற்போர் மூண்டுள்ளது. இருவரும் ஒருவர் மீது ஒருவராக பகிரங்கமாகவே விமர்சனக் கணைகளைத் தொடுக்கத் தொடங்கியுள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியானது படுதோல்வியடைந்தது. அந்தக் கட்சிக்குள் பெரும் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. கூட்டரசிலிருந்து வெளியேறி மகிந்த அணியுடன் இணைவதற்கு ஒருதரப்பும், கூட்டு அரசைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு மறுதரப்பும் முயற்சித்து வருகின்றன. இருதரப்புகளையும் சமாளிக்கும் முயற்சியில் கட்சித் தலைவரான அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இறங்கியுள்ளார். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கட்சிக்கு ஏற்பட்ட தோல்விக்கு பொதுச்செயலர் என்ற அடிப்படையில் தான் பொறுப்பேற்றாலும், தேர்தல் செயற்பாட்டுக்குழுவின் தலைவராக இருந்த அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும் பொறுப்புக்கூற வேண்டும் என்று அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்திருந்தார். இதை ஏற்க மறுக்கும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, வேட்புமனுத் தாக்கலின் பின்னரே குழுக்கள் அமைக்கப்பட்டன. நான் கொழும்பில் இருப்பதால் ஒருங்கிணைப்புச் செயலை மாத்திரமே செய்தேன். தேர்தல் குழுவின் தலைமையை ஏற்று என்னால் வழிநடத்தப்பட்ட 12 தேர்தல்களிலும் கட்சி வெற்றிபெற்றுள்ளது. கடந்த அரச தலைவர் தேர்தலின்போது மாத்திரமே பின்னடைவு ஏற்பட்டது, என்று கூறியுள்ளார். பிரச்சினைகள் இருந்தால் அதைக் கட்சிக்குள் பேசித் தீர்க்கவேண்டும். மாறாக, ஊடகங்கள் முன்தோன்றி விமர்சிப்பது அழகல்ல, என்று சுட்டிக்காட்டி சுசில் பிரேமஜயந்தவின் செயற்பாட்டை விமர்சித்துள்ளார் துமிந்த திஸாநாயக்க. இதற்குப் பதிலடி கொடுத்துள்ள சுசில், அரசியல் தெரியாதவர்களுடன் பேசமுடியாது. ஏனெனில், நாம் கூறுவது அவர்களுக்குப் புரியபோவதில்லை, என்றார்.

கட்சியின் பொதுச்செயலர் பதவியிலிருந்து துமிந்த திஸாநாயக்கவை நீக்க வலியுறுத்திவரும் குழுவுக்கு சுசிலே தலைமையேற்று வருகிறார். பொது வேட்பாளராகத் தான் களமிறங்கிய போது அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவே தன்னுடன் வந்தார் என்பதால் இந்த விடயத்தில் கட்சித் தலைவரான மைத்திரிபால சிறிசேன பொறுமை காத்து வருகிறார் என்று கட்சி வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. (5)

## மூன்று தசாப்தகாலப் போர்

# அவலத்தை எடுத்தியம்பும் "மூவர்" திரைப்படம் வெளியீடு

கொழும்பு, மார்ச் 1
போர் காரணமாக தாம் பறிகொடுத்த பிள்ளைகளையும் மற்றும் குடும்ப உறுப்பினர்களையும் நினைவுகூர்ந்து தற்போது வாழ்ந்து வருகின்றவர்களிடம் ஏற்பட்டுள்ள அச்சம் மற்றும் மனக்கவலைகளை வெளிக்காட்டும் "மூவர்" திரைப்படம், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் வெளியிடப்பட்டுள்ளது.

நல்லிணக்கம், சகவாழ்வு தொடர்பான தேசியக் கொள்கை வெளியீடு மற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தால் தயாரிக்கப்பட்ட 'மூவர்' திரைப்பட வெளியீடு நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு றீகல் திரையரங்கில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் தலைவி முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இங்கு தெரிவித்ததாவது:

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் எதிரான சவால்களை வெற்றிகொள்ள அனைவரும் ஒன்றிணைய வேண்டும். நல்லிணக்கம் என்பது ஆன்மீகத் தத்துவம். ஆன்மீக பக்குவத்தை அடையாத சமூகத்தில் அதனை வெற்றிபெறச்செய்வது சவால் நிறைந்தது. இதனைப் பல்வேறு துறைகளினூடாக அதற்கு ஊக்கமளிப்பது அனைவரினதும் பொறுப்பாகும் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, நல்லிணக்கம் தொடர்பான விரிவான தேசிய கொள்கையொன்றின் தேவையை நிறைவேற்றும் வகையில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தால் இந்தக் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இத்தகையதொரு கொள்கை வெளியிட்டு வைக்கப்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற ஆயுதம் தாங்கிய போராட்டங்கள் உட்பட நீண்டகாலமாக இருந்துவரும் சமூக, அரசியல் கொந்தளிப்புகளால் இலங்கையிலுள்ள அனைத்துக் குடிமக்களினதும் வாழ்க்கைக்கும், மதிப்புக்கும், பாதுகாப்புக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களையும் அழிவுகளையும் கருத்திற்கொண்டு அரசின் முழுமையான முயற்சியுடன் கடந்த கால நிகழ்வுகள் மீண்டும் இடம்பெறாதிருப்பதை உறுதி செய்தல் மற்றும் நல்லிணக்கத்துக்கான எதிர்கால திட்டங்களுடன் பலதரப்பு செயற்பாட்டுக்கு அழைப்புவிடுத்து, ஜனநாயகம், நல்லாட்சி, மொழி, கலாசார உரிமைகள் உள்ளிட்ட மனித உரிமைகள், சட்ட ஆட்சி, தேசிய ஐக்கியம் மற்றும் பல்வகைத்தன்மையை அங்கீகரிக்கும் சகவாழ்வு ஆகிய விடயங்களின் அடிப்படையில் இந்த நல்லிணக்கம், சகவாழ்வு தொடர்பான தேசியக் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.எஸ்.ஜயசிங்கவால் இந்தக்கொள்கைப்பிரகடனம்அரசதலைவரிடம் கையளிக்கப்பட்டது. (5)

## சட்டம், ஒழுங்கு அமைச்சை சு.க. கைப்பற்ற முயற்சி

கொழும்பு, மார்ச் 1
சட்டம் ஒழுங்கு அமைச்சு தற்காலிகமாகவே தலைமை அமைச்சர் ரணிலுக்கு வழங்கப்பட்டுள்ளது. சில வாரங்களில் அமைச்சை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பக்கம் பெற்றுக்கொள்ள கலந்துரையாடல் நடத்தப்படுகின்றது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலரும், அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பு அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சரவை மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. சுதந்திரக் கட்சியின் அமைச்சுக்கள் மாற்றப்படாமைக்கு எமது உறுப்பினர்கள் நாட்டில் இல்லாமையே காரணமாகும். முக்கியமான அமைச்சர்கள் சிலர் மாநாடுகளில் கலந்துகொள்ள வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில் அவர்கள் இல்லாது சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் மாற்றங்களை முன்னெடுக்க முடியாது. எவ்வாறு இருப்பினும் இன்னும் இரண்டு வாரங்களில் மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் மாற்றம் இடம்பெறும். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சட்டம் ஒழுங்கு அமைச்சு வழங்கப்பட்டுள்ள போதிலும் இது தற்காலிகமாக வழங்கப்பட்டதாகும். சில வாரங்களில் அவருக்கு வழங்கப்பட அமைச்சுப் பதவி மீண்டும் பெற்றுக்கொள்ளப்படும். எவ்வாறு இருப்பினும் சட்டம் ஒழுங்கு அமைச்சை சிறிலங்கா சுதந்திர கட்சியின் பக்கம் பெற்றுக் கொள்ளும் முயற்சிகளில் நாம் பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றோம். பொதுவாகக் கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சுக்கள் கட்சிகளுக்குள்ளேயே மாற்றி வழங்கப்படும். எனினும் எமது தரப்பின் அமைச்சு ஒன்றை வழங்கி அதற்குப் பதிலாக சட்டம் ஒழுங்கு அமைச்சை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பக்கம் பெற்றுக் கொள்ளும் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுகின்றன -என்றார். (5,31)

## பிரிகேடியர் பிரியங்க சீனாவுக்குப் பறக்கிறார்

கொழும்பு, மார்ச் 1
பிரிட்டனிலிருந்து கொழும்புக்குத் திருப்பி அழைக்கப்பட்ட பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ, பயிற்சிக்காக சீனாவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளார்.

லண்டனில் புலம்பெயர் தமிழர்களை நோக்கி கழுத்தை அறுத்து விடுவது போன்று எச்சரிக்கை சைகை காண்பித்தார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளான பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ, கடந்த வாரம் கொழும்புக்குத் திருப்பி அழைக்கப்பட்டார்.

அவர் மீண்டும் பிரிட்டன் செல்லமாட்டார் என்றும் அவரது பணிக்காலம் முடிந்து விட்டது என்றும் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க கூறியிருந்தார்.


இந்த நிலையில், சீனாவில் மேலதிக கற்கைநெறி ஒன்றுக்காக பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ பயணமாகவுள்ளார்.

5 மாதகால கற்கைநெறிக்காக அவர் நாளை பீஜிங் குக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (5)

## இலங்கை – கனடா உறவை வலுவூட்டும் சந்திப்பு

கொழும்பு, மார்ச் 1
கனடாவின் ஆசிய பசிபிக் விவகாரங்களுக்கான உதவிப் பிரதி அமைச்சர் டொனால்ட் போபியாஷ், அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் அயலுறவுத்துறை அமைச்சுச் செயலர் பிரசாத் காரியவசம் ஆகியோரை கொழும்பில் அண்மையில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

வணிகத்தை விருத்தி செய்தல், இலங்கை மாணவர்களுக்கான கல்வி இலக்காக கனடாவை மேம்படுத்துதல், இலங்கையில் நல்லிணக்கத்தை முன்னேற்றுதல் மற்றும் கனடாவுக்கும் இலங்கைக்குமிடையிலான வழமையான ஒழுங்கமைக்கப்பட்ட ஈடுபாடுகளுக்கான பொறிமுறையொன்றை அமைத்தல் போன்றன உள்ளடங்கலான சாத்தியப்பாடுகளை கண்டறிவதற்கான கலந்துரையாடல்கள் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளன. (5)



## நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு

# இரு கட்சிகளும் இணைந்து செயற்பட்டேயாகவேண்டும்

### சந்திரிகா வலியுறுத்து

ஊழலும், இனப்பிரச்சினையும் இலங்கை தற்போது எதிர்கொள்ளும் முக்கியமான இரண்டு நெருக்கடிகளாகும். இந்த நெருக்கடியை நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து செயற்படுவதன் மூலம் தீர்த்து வைக்க முடியும் என்று முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டில் அரச தலைவர் தேர்தலின்போதும் பொதுத் தேர்தலின்போதும் மக்கள் எதிர்பார்த்த வேணவாக்களை நிறைவேற்றாமைக்கு இந்த முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதனை சிறந்த முறையில் தெளிவுபடுத்திக் கொண்டு அடுத்த இரண்டு ஆண்டுகளில் வெற்றிகரமான பயணத்தை முன்னெடுக்க திடசங்கற்பம் மேற்கொள்ளவேண்டும்.

அரசின் செயற்பாடுகள் தொடர்பில் சரியான தகவலை மக்களுக்கு கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு ஊடகங்களைச் சார்ந்ததாகும். எனினும் கடந்த காலங்களில் அது உரிய முறையில் நிறைவேற்றப்படவில்லை. அதனால் சில தரப்பினர் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி அரசின் செயற்றிட்டங்களை மூடி மறைத்து பொய் பரப்புரைகளை முன்னெடுத்தனர் - என்றார். (5)

# கூட்டு அரசின் இரண்டு தேசியக் கட்சிகளும் தமக்குள் மோதியதே தோல்விக்குக் காரணமாம்

### இப்படி இப்போது சொல்கிறது மகிந்த அணி

கொழும்பு, மார்ச் 1
கூட்டு அரசின் பிரதான கட்சிகளுக்கிடையில் உள்ளூராட்சித் தேர்தல் இறுதிக் காலத்தில் பெரிய கருத்து மோதல்கள் இடம்பெற்று வந்தன. இதன் காரணமாக நடுநிலைவாதிகள் கூட்டு அரசுக்கு எதிராக வாக்களித்தனர். இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் சந்திர சிறி கஜதீர தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு அரசு தேர்தல் தோல்வியை ஏற்றுக்கொண்டு பிழைகளைத் திருத்திக்கொள்ள முயற்சிக்கவேண்டும். மாறாக தேவையற்ற விமர்சனங்களைத் தெரிவித்து பொதுமக்கள் முன்னணியின் வெற்றியை மழுங்கடிக்கக்கூடாது. அரசு ஒரு காரணத்துக்காக மாத்திரம் தோற்கவில்லை. அதற்குப் பல நடவடிக்கைகள் காரணமாக இருந்தன. அதிலும் அரசுக்குள் இருக்கும் பிரதான கட்சிகளுக்கிடையில் தேர்தல் இறுதிக் காலத்தில் பெரிய கருத்து மோதல்கள் இடம்பெற்றுவந்தன. இதன் காரணமாகவும் நடுநிலைவாதிகள் அரசுக்கு எதிராக வாக்களித்துள்ளனர். மக்கள் புள்ளடியிட்டு அரசின் மீது இருக்கும் விரக்தியைக் காட்டியுள்ளனர். அதேபோன்று தேர்தலுக்குப் பின்னர் தனித்து ஆட்சியமைப்பதாக தெரிவித்து வந்த இரண்டு தரப்பினரும் மீண்டும் இணைந்து செயற்பட ஆரம்பித்துள்ளனர். அமைச்சுக்களை மாற்றுவதன் மூலம் மக்களை ஏமாற்றலாம் என்று இவர்கள் நினைக்கின்றனர். பதவிகளில் மாற்றம் ஏற்படுத்தி மறுசீரமைப்பு மேற்கொள்வதன் மூலம் எந்த மாற்றமும் இடம்பெறப்போவதில்லை. மாறாக பொருளாதாரக் கொள்கையில் மாற்றம் ஏற்பட வேண்டும். அந்த மாற்றம் இல்லாமலே இரண்டு தரப்பினரும் மீண்டும் ஒரே படகில் பயணிக்க ஆரம்பித்துள்ளனர்.

தேர்தல் தோல்விக்கு பிரதான காரணம் என்ன என்பது தொடர்பாக அரசில் இருப்பவர்கள் யாரும் ஆராய்வதில்லை. குற்றவாளிகள் என்று தெரிவிக்கப்படுபவர்களை கைது செய்யாததனாலே தோல்வியடைந்ததாக சிலர் தெரிவிக்கின்றனர். அதற்காக அரசு புதிய வழக்குகளைத் தயாரித்து எதிரணியில் சிலரை சிறையிலடைக்கும் வேலைத்திட்டத்தையும் மேற்கொள்ள திட்டமிட்டு வருகின்றது. இதனால் தொடர்ந்தும் அரசின் மீது விரக்தியே ஏற்படும் - என்றார். (5,31)

சத்தியம் உங்களை விடுதலையாக்கும் (யோவான் 8:32)

# நற்செய்தி பெருவிழா-2018

காலம் :
**2,3,4**
மார்ச்-2018
(வெள்ளி, சனி & ஞாயிறு)

இடம் :
**மாநகர சபை மைதானம்,**
சுப்ரமணியம் பூங்கா எதிரில்,
**யாழ்ப்பாணம்**

நேரம் : மாலை 5.00 மணிக்கு

செய்தியாளர் :



## சகோ.ஜோஷ் ஹாவர்ட்

தேவ வரம் பெற்ற ஊழியர் (அமெரிக்கா)

- வாழ்க்கையில் சமாதானமில்லையா?
- மனதில் அமைதி வேண்டுமா?
- எதிர்காலத்தைக் குறித்து பயமா?
- பிரச்சினைகளிலிருந்து விடுதலை வேண்டுமா?
- மாந்திரகம் பயமா? வாழ்க்கையில் போராட்டமா?
- இதோ உங்களுக்காக நற்செய்தி பெருவிழா


அனுமதி இலவசம்

குறிப்பு : அனைத்து பிரச்சனை உள்ளவர்களுக்காகவும் விசேஷித்த பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.

பங்குபெறுங்கள் பாக்கியமடையுங்கள்

அனுசரணை : யாழ் கிறிஸ்தவ சபைகள்/ஸ்தாபனங்கள் ஐக்கியம்
மேலதிக தொடர்புக்கு : 0777242135

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் திருக்கேஸ்வரன்

**(அதிபர், யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்)**

சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பை சேர்ந்த சுப்பிரமணியம் திருக்கேஸ்வரன் நேற்றுமுன்தினம் (27.02.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நவமலரின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிர மணியம் மனோன்மணி தம்பதியரின் அன்புமகனும் நமசிவாயம் லீலாவதி தம்பதியரின் அன்புமருமகனும் ரேகா (உயர்தர மாணவி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரக்கல்லூரி), மித்திரன் (உயர்தர மாணவர், மகாஜனக்கல்லூரி தெல்லிப்பழை), உமைபாலா (மாணவர், சில்லாலை றோ.க.த. பாடசாலை) ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவனேஸ்வரி, நகுலேஸ்வரி, செந்தாமரை, சிவனேசராசன் (ஆசிரியர், அச்சுவேலி மத்திய கல்லூரி), யாதவன் (மதுவரி உத்தியோகத்தர், சங்கானை), சிவசக்தி ஆகியோரின் அன்புச்சகோதரரும் தர்மலிங்கம், வசந்தமலர், சுகிர்தமலர், பிரபாகரன் ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2018) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பில்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சில்லாலை மேற்கு,**
**பண்டத்தரிப்பு.**
(cs4087)(17.13)
**தகவல்: குடும்பத்தினர்.**

077 435 1909, 077 615 1783

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக முன்னாள்
பிரதேச செயலாளரும் தற்போதைய
யாழ்.மாவட்ட செயலாளரும் ஆகிய
**திரு. நா. வேதநாயகன்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி**
**இராசம்மா நாகலிங்கம்**
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

(CS 747)(15/17)

**பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்**
**பிரதேச செயலகம், நெடுந்தீவு.**

## இதய அஞ்சலி



யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின்
வளர்ச்சியில் அதீத அக்கறையுடன்
செயலாற்றிவரும் யாழ். மாவட்ட
அரசாங்க அதிபர்
**திரு. நாகலிங்கம் வேதநாயகன்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி இராசம்மா நாகலிங்கம்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தின் துயரில் நாமும் பங்குகொண்டு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(sup 1358)(13/17)

**முகாமைத்துவக் குழுவினரும், பணியாளர்களும்,**
**யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம்**

## துயர் பகிர்கின்றோம்



யாழ்ப்பாண மாவட்ட
அரசாங்க அதிபர்
**திரு. நாகலிங்கம் வேதநாயகன்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி**
**இராசம்மா நாகலிங்கம்**
அவர்கள் காலமான செய்தி அறிந்து துயர் அடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS 14333)(13/17)

**யாழ். மாவட்ட சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கம்.**

## இதய அஞ்சலி



யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்,
**திரு.நா.வேதநாயகன்** அவர்களின்
அன்புத் தாய்
**திருமதி. இராசம்மா நாகலிங்கம்**
அவர்கள் 27.02.2018 (செவ்வாய்க்கிழமை)
இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த
துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவினால்
துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(CS/14341)(10)

**இயக்குனர் சபையினரும், ஊழியர்களும்**
**Green Visva Lanka Farm Developers (Guarantee) Ltd.**
**Keerimalai Road, Vilavely, Chankanai.**

### பாடசாலை மாணவர்களுக்கு

# இலவச போக்குவரத்தை கோரி சமூக விழிப்புணர்வுப் பயணம்

## வவுனியா இளைஞர் இருவர் ஆரம்பிக்கின்றனர்

**வவுனியா,மார்ச் 1**

**''இலங்கையிலுள்ள சகல பாடசாலை மாணவர்களும் பாடசாலைச் சீருடையுடன் பாதையில் நின்று இலங்கைப் போக்குவரத்து பேருந்துகளை வழிமறித்தால் அவர்களை இலவசமாக ஏற்றிச் செல்ல வேண்டும்'' என்று வலியுறுத்தி வவுனியாவிலுள்ள இரு இளைஞர்கள்; எதிர்வரும் 3ஆம் திகதி இலங்கையின் அதி உயரமான பீதுருதாலகால மலைக்கு பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.**




இலங்கை மாணவர்களின் கல்வி நலனைக் கருத்தில்கொண்டு நாட்டில் வாழும் அனைத்து மாணவர்களும் இன, மத, சாதி பேதமின்றி நாள்தோறும் பாடசாலை சென்று திரும்புவ தற்காக பஸ் இல் இலவசமாக போக்குவரத்துச் செய்வதற்கான அனுமதியை நாடளாவிய ரீதியில் செயற்படுத்த வேண்டி 'சிறுவர் வாழ்வை ஒளிமயமாக்குவோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் வவுனியா வைசப்பிரகாச மகளிர் கல்லூரி முன்பாக இருந்து சனிக்கிழமை காலை 8.30மணியளவில் தமது பயணத்தை ஆரம்பித்து கடல் மட்டத்தில் இருந்து 2524 மீற்றர் உயரத்துக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

குறித்த பயணமானது வவுனியாவிலிருந்து ஆரம்பமாகி அனுராதபுரம், தம்புள்ளை, மாத்தளை, கண்டி, நுவரெலியா பீதுருதாகால மாலை ஏறி திரும்பவும் நுவரெலியா, பதுளை, மகியங்கனை, தம்புள்ளை, அனுராதபுரம் ஊடாக எதிர்வரும் 5ஆம் திகதி வவுனியாவுக்கு திரும்புவதற்கு தீர்மா னிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் இலங்கையிலுள்ள 60வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்க அரசை வலியுறுத்தி இலங்கை முழுவதுமான 1515கிலோ மீற்றர் துவிச்சக்கர வண்டிப்பயணத்தை மேற்கொண்ட வவுனியா வேப்பங்குளம் இளைஞர் தர்மலிங்கம் பிரதாபன் இந்த முறை பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் போக்குவரத்தை வழங்க வலியுறுத்தி அவரது நண்பரான மங்களராஜன் இமயவனுடன் இணைந்து மேற்கொள்ளவுள்ளார். (எ-ரி)

# உருளைக்கிழங்குச் செய்கையாளர்களின் விவரங்கள் கணினி மயப்படுத்தப்படுகின்றன

அச்சுவேலி,மார்ச்.1

உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையாளர்கள் தொடர்பான விவரங்கள் திரட்டப்பட்டு கணினி மயப்படுத்தப்படுகின்றன. கணினி மயப்படுத்தப்படுவதற்கான ஏற்பாடுகளை நடுவண் அரசின் விவசாயப் பிரிவு மேற்கொண்டு வருகின்றது.

விதை உருளைக்கிழங்கு மானிய விலையில் வழங்கப்படும்போது சிலர் விவசாயிகள் என்ற போர்வையில் துஸ்பிரயோகம் செய்து வருகின்றனர். அதனைத் தடுக்கும் நோக்கிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் செய்கை பண்ணப்படும் நிலத்தில் விஸ்தீரணம் தொடர்பான தகவலை திருத்தமான முறையில் பெற்றுக் கொள்வதற்கு வசதியாகவும், உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், விவரம் அவர்கள் பயிரிட்ட நிலத்தின் அளவு என்பவை உள்ளிட்ட விவரங்கள் நடுநிலையாளர் குழுவினால் நேரில் பார்வையிட்டு திரட்டப்பட்டன.

தகவல் திரட்டும் நடுநிலையாளர் குழுவில் உருளைக்கிழங்கு உற்பத்தி விற்பனை கூட்டுற வுச்ச ங்கத்தின் பிரதிநிதிகள், சங்கங்களின் சமாஜத்தின் பிரநிதிகள், விவ சாயத்திணைக்கள அலுவலர்கள் என மூன்று தரப்பினர் இடம் பெற்றிருந்தனர்.

திரட்டப்பட்ட விவரங்கள் கணினிமயப்படுத்தப்படவுள்ளன. கணினி மயப்படுத்தப்படுவது தொடர்பாக நடுவர் அரசின் யாழ்ப்பாண மாவட்ட விவசாயப் பணிப்பாளர் சசி பிரபாகைலேஸ்வரன் தெரிவித்ததாவது:

கடந்தவருடம் 50 வீத மானிய விலையில் விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்கு வழங்கப்பட்டது. இந்த வருடம் 100 வீதம் மானிய அடிப்படையில் அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. மானிய உதவியில் வழங்கப்படும் விதை உருளைக் கிழங்கு, போலிகளின் கையில் சிக்கிவிடக்கூடாது. உண்மையுான விவசா யிகளைச் சென்றடைய வேண்டும். துஸ்பிரயோகம் தவறுகளுக்கு இடமளிக்கக் கூடாது. திருத்தமான முறையில் விநியோகத்தை மேற்கொள்ளுவதற்கும் தேவையானபோது திருத்தமான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு வசதியாகவே உருளைக்கிழங்குபயிர்ச் செய்கையாளர்களின் விவரம் திரட்டப்பட்டு ஒப்பு நோக்கப்பட்டு கணினிமயப்படுத்தப்படுகின்றது" -என்றார். (எ-11)

# பொலிஸ் சமிக்ஞையை மீறியவருக்கு ரூ.21 ஆயிரம் தண்டம்

தென்மராட்சி,மார்ச்.1

ஆவணங்களின்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய போது பொலிஸாரின் சமிக்ஞையை மீறிய மீசாலை வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 21 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் போக்குவரத்துப் பொலிஸார் சாலை வாகனப் பரிசோதனையில் ஈடுபட்டவேளையில் வழியே வந்த வாகனத்தை நிறுத்துமாறு சமிக்ஞை செய்தனர். சாரதி அதனை மதிக்காமல் தொடர்ந்து வாகனத்தைச் செலுத்தியுள்ளார். துரத்திச் சென்று பிடித்த பொலிஸார் சோதனையிட்ட போது அவர் மதுபோதையில் இருந்தமை தெரியவந்தது. அத்துடன் சாரதிய அனுமதிப் பத்திரம் காப்புறுதிப் பத்திரம் வாகன வரிப்பத்திரம் போன்றவை இல்லாதமையும் கண்டு பிடிக்கப்பட்டது. சாரதிக்கு எதிராக ஐந்து குற்றச்சாட்டுக்களுடன் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது ஐந்து குற்றங்களை யும் சாரதி ஒப்புப் கொண்டதால் இக் குற்றங்களுக்காக 21 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்ட தெனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# மணல் கடத்தியவருக்கு ரூ. 50 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி, மார்ச்.1

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய மட்டுவில் சந்திரபுரத்தைச் சேர்ந்த வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் மணலையும் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த எட்டாம் திகதி நாவற்குளி தச்சன்தோப்புப் பகுதியில் சாலைப் பரிசோதனையில் ஈடுபட்ட சாவகச்சேரி பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸார் சோதனையிட்டபோது வாகனத்தில் மணல் ஏற்றி வந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. விசாரணைகளை மேற்கொண்டபோது அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றியமை கண்டுபிடிக்கப்பட்டது. சாரதியைக் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இந்த வழக்கு நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது வாகனச் சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் மணலையும் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)



### வவுனியாவில்

# ரயிலில் பாய்ந்த பெண் படுகாயம்

வவுனியா,மார்ச்.1

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலில் பாய்ந்த பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் 11.30 மணியளவில் வவுனியா குருமன்காடு பகுதியில் இடம்பெற்றது.

விபத்து தொடர்பிவ் மேலும் தெரியவருவதாவது:

குறித்த பெண் ரயில் வருவதற்குமுன் ரயில் தண்டவாளத்தில் இருந்துள்ளார். அங்கு வேலைசெய்யும் ஊழியர் அங்கு இருக்க வேண்டாம் என்று சொல்லி அவரை அனுப்பி வைத்தார். எனினும் ரயில்; வரும்போது மீண்டும் அங்கேவந்து குறுக்கே பாய்ந்ததால் விபத்து ஏற்பட்டது. முகத்திலும் கையிலும் பலத்தகாயமடைந்த நிலையில் அங்கு நின்றவர்களால் வவுனியா வைத்தியசாலைக்கு சேர்ப்பிக்கப்பட்டார்.

வவுனியா பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-ரி)

# ஆலயம் சீரமைப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 1

யாழ்ப்பாணம் 2ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள இலங்கை திருச்சபையின் கிறிஸ்து நாதர் ஆலயத்தினை புனரமைப்பது தொடர்பில் அங்கிலிக்கன் சபை கொழும்பு அத்தியட்சகர் நேற்று நேரில் பார்வையிட்டார்.

1990ஆம் ஆண்டு இடம் பெற்ற இராணுவத்தினரின் குண்டுத் தாக்குதலில் இந்த ஆலயம் சேதமடைந்தது. அத்தியட்சகர் திலோராஜ் கனகசபையின் தீர்மா னப்படி அவர் ஒதுக்கிய நிதியில் புனரமைக்கப்படவுள்ளது. குறித்த ஆலயத்தின் அழிவையும் ஆவணமாக்கும் நோக்கில் அழிவடைந்த சுவர்களில் ஒரு பகுதியை அவ்வாறே ஆலயத்தில் தொடர்ந்தும் பராமரிக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (எ-101)

# தவறான முடிவு எடுத்து பல்கலை மாணவன் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட மாணவன் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். அவர் தவறான முடிவு எடுத்து அவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

தற்காலிகமாக யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் தனது பெற்றோருடன் தங்கியிருந்த வவுனியா உக்கிளாங்குளம் பகுதியைச் சேர்ந்த இ.சாமுவேல் (வயது 26) என்பவரே சடலமாக நேற்றுமுன்தினம் முற்பகல் மீட்கப்பட்டார்.

இறுதியாண்டில் கற்கும் அவர் படிப்பதற்கு, பரீட்சைக்குத் தயார்ப்படுத்தலுக்கு இயலாதுள்ளதாகக் கூறியுள்ளார். 3 வாரங்களாக அவர் கற்றலுக்குச் செல்லவில்லை. அதற்கு மன உளைச்சல் காரணமாக இருந்துள்ளது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் தாயார் வவுனியாவுக்குச் சென்றிருந்த நிலையில், தந்தையார் வெளியே சென்றிருந்தபோது தனது வீட்டில் அவர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார் என்று விசாரணையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (எ-4)

காணாமல் ஆக்கப்பட்டோரின் தீர்வு தொடர்பில்

# உடனடியாக செயலில் இறங்குவதற்கான அழுத்தத்தை அரசுக்கு வழங்க வேண்டும்

## வடக்கு மாகாண சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம் மார்ச் 1

வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டு பிடிப்பதற்கும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறியவும் இலங்கை அரசு உடனடியாக செயலில் இறங்கி செயற்படக் கூடிய வகையில் பன்னாட்டு சமூகம் அரசுக்கு கடும் அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும் என வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறை வேற்றப் பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 117ஆவது அமர்வு நேற்று முன்தினம் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. அமர்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சத்தியலிங்கம் இது தொடர்பான தீர்மானத்தை முன்மொழிந்தார்.

அவர் தனது தீர்மானத்தில் தெரிவித்ததாவது:

உலகிலேயே அதிகூடிய காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக எமது நாடு காணப்படுகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடித் தரும்படியும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிவிக்குமாறும் கோரி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பல போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். தொடர் போராட்டமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் அவர்களின் போராட்டம் ஒரு வருடத்தை எட்டியுள்ளது.

உள்நாட்டுப் போர் 2009ஆம் ஆண்டு முடிவுறுத்தப்பட்ட பின்னர் பன்னாடுகளின் ஆதரவுடன் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் ஒன்றை நிறுவுவதற்கான சட்டமூலம் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானி அறிவுறுத்தலும் வெளியாகியது.

எனினும் அந்த சட்டமூலமானது உரிய முறையில் இன்னும் நடைமுறைப்படுத்தப் படவில்லை.

எனவே குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்றார். இந்த பிரேரணையை வடக்கு மாகாண பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரன் வழிமொழிய பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (எ-8)

---

மதகு வைத்த குளத்தின் கீழுள்ள

# 250 ஏக்கர் நெற்செய்கைக்கு தண்ணீர் வழங்க முயற்சிக்கப்படுகின்றது

## வடக்கு மாகாண விவசாய அமைச்சர் சிவநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 1

வெங்கல செட்டிக் குளம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு கீழ் உள்ள மதகு வைத்த குளத்தின்கீழ் செய்கை பண்ணப்பட்ட 250 ஏக்கர் நெல் வேளாண்மையை அழிவடையாது பாதுகாக்கும் பொருட்டு நீர் வழங்க முயற்சி எடுத்து வருவதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் சிவநேசன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 117ஆவது அமர்வு நேற்று முன்தினம் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இந்த அமர்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராசா இது தொடர்பில் பிரேரணை ஒன்றை சபையில் முன்வைத்தார்.

அவர் தனது பிரேரணையில் தெரிவித்ததாவது:

வெங்கலச் செட்டிக் குளம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு கீழ் உள்ள அரிவித் தோட்டம் மற்றும் மதகு வைத்த குளங்களின் கீழ் செய்கை பண்ணப்பட்ட 250 ஏக்கர் நெல் வேளாண்மை கதிர் தள்ளிய நிலையில் நீர் பற்றாக்குறை காரணமாக அழிவை எதிர்நோக்கி உள்ளது.

எனவே இந்தச் செய்கைக்கு ஒருதடவை நீர் திறந்து விட்டால் கூட விவசாயிகள் முழு விளைச்சலை பெறக் கூடியதாக இருக்கும்.

குறித்த பிரதேச செயலர் பிரிவில் உள்ள பாவற்குளத்தில் இருந்து சிறிதளவு நீரை திறந்து விடுவதன்மூலம் இந்த நெல் வயல்களை காப்பற்ற முடியும்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக தலையிட்டு விவசாயி களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என தனது கவன வீர்ப்பு விடயத்தை சபையில் முன்மொழிந்தார்.

இதனை வழிமொழிந்து கருத்துக்களை விவசாய அமைச்சர் முன்வைக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (8)

---

# பண மோசடியில் ஈடுபட்ட சமுர்த்தி உத்தியோகத்தர் இருவர் பணிநீக்கம்:

## இருவர் தண்டனை இடமாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

**யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்களின் சமுர்த்திக் கடன் வசூலிப்பில் மோசடியில் ஈடுபட்ட நான்கு உத்தியோகத்தர்களுக்கு தற்காலிக பணி நிறுத்தம் மற்றும் தண்டனை இடம்மாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.**

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் நான்கு பிரதேசங்களில் சமுர்த்திக் கடன் வசூலிப்பு உத்தியோகத்தர்கள் பணமோசடியில் ஈடுபட்டனர்.

தெல்லிப்பளைப் பகுதியில் குழுக் கடன் மற்றும், தனிநபர் கடனை வசூல் செய்யும் சமுர்த்தி உத்தியோகத்தர் அந்தப் பகுதியில் மக்கள் பெற்றுக்கொண்ட கடன் தொகையின் மாதப் பணத்தினை வாங்குவதற்காக சென்றுள்ளார்.

பணத்தை வாங்கிய பின்னர் அவர்களுக்கான பற்றுச்சீட்டை வழங்காமல் வந்துள்ளார். கடன்களை கொடுத்தவர்கள் மாதாந்தக் கடன் தொகையை செலுத்தாமல் உள்ளனர் என்று சமுர்த்தி வங்கியால் தெரியப்படுத்தப்பட்டது. அதன்போது. குறித்த ஊழியர் மீது கவனம் செலுத்தப்பட்டது.

இதேபோன்று ஊர்காவற்துறைப் பிரதேசத்தில் மக்களிடம் வசூலிக்கப்பட்ட கடன்பணம் வங்கியில் வரவு வைக்கப்படாமை தொடர்பிலும் மக்கள் விசனம் தெரிவித்திருந்தனர். கோப்பாய் பிரதேசத்திலும் இவ்வாறான இரண்டு மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

இது தொடர்பில் மாவட்டச் செயலகத்தின் கணக்காய்வுக் குழு பரிசோதனைகளை மேற்கொண்டது. அதில் மோசடிகள் இடம்பெற்றமை உறுதி செய்யப்பட்டது. அதன் பின்னர் விசாரணைகள் இடம்பெற்றன. ஊர்காவற்துறை மற்றும் தெல்லிப்பளை பகுதியில் மோசடியில் இடம்பெற்ற உத்தியோகத்தர்கள் முதலாவது பொது மன்னிப்பு வழங்கப்பட்டு நெடுந்தீவு பிரதேசத்துக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். கோப்பாய் பிரதேசத்தில் நடைபெற்ற மோசடிகளுடன் தொடர்புடைய இருவர் தற்காலிக பணி இடை நிறுத்தம் செய்யப் பட்டுள்ளனர்.

அத்துடன் இவர்கள் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு கொழும்பு முதன்மை செயலகத்துக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

---

# கோவில்கள் சேதமாக்கப்படல் கண்டிக்கத்தக்க விடயமாகும்

## மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் ஆதங்கம்

யாழ்ப்பாணம் மார்ச் 1

வடக்கில் சைவக் கோவில்கள் உடைக்கப்படுதல் பரவலாக இடம்பெற்றுவருகின்றன. இத்தகைய செயற்பாடுகளை மிக வன்மையாக கண்டிப்பதாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார்.

அண்மையில் முல்லைத்தீவு, முள்ளியவளைப் பகுதியில், கோட்டை ஐயனார் எனும் சைவ கோவிலில் இருந்த சிலைகள் விசமிகளால் உடைக்கப்பட்ட நிலையில் குறித்த இடத்துக்கு நேரடியாகச்சென்று பார்வையிட்டு பின் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வட பகுதியின் மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் காணப்படுகின்ற சைவ கோவில்கள் இனந்தெரியாத விசமிகளால் உடைக்கப்பட்டுவந்த நிலையில் தற்போது முல்லைத்தீவு மாவட்டத்திலும் அவ்வாறானதொரு சம்பவம் நடந்தேறியிருக்கின்றது.

எமது நாட்டில் பலதரப்பட்ட சமயத்தவர்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தத்தமது சமயத் தலங்களில் வழிபாடு செய்வதற்கு உரிமை இருக்கின்றது. ஒருபோதும் இன்னொரு சமயத்தவரின் வழிபாட்டுத் தலங்களையோ அல்லது சமய அடையாளங்களையோ சிதைப்பதற்கு யாருக்கும் உரிமையில்லை. இத்தகைய செயற்பாடுகள் நாட்டில் வாழ்கின்ற மக்களிடையே காணப்படும் ஒற்றுமையைச் சீர்குலைத்து மத மோதல்களை தோற்றுவிக்கும்.

எனவே உரிய தரப்பினர் இந்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களை இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக்கொடுக்கவேண்டும் -என்றார். (எ-8-ரி3)

---

## வைக்கோல் திருடியவரிடம் ரூ.20,000 அறவீடு

சாவகச்சேரி, மார்ச் 1

உழவு இயந்திரப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த வைக்கோலைத் திருடி விற்பனை செய்த இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்று நேற்று தலா 3 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. வைக்கோலின் பெறுமதியான 20 ஆயிரம் ரூபா அதன் உரிமையாளருக்கு வழங்க வேண்டுமெனவும் உத்தரவிட்டது.

மறவன்புலோ பகுதியில் உள்ள காணியில் நெல் அறுவடையின் பின்னர் உழவியந்திரத்தில் குவிக்கப்பட்டிருந்த வைக்கோல் அண்மையில் திருப்பட்டது. (4,9)

---

# மதிப்பளிப்பும் விருது வழங்கலும்



யாழ்ப்பாணம் மார்ச் 1

வடக்கு மாகாண விவசாய அமைச்சால் யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறந்த விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான மதிப்பளிப்பும் விருது வழங்கல் நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றன.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் மாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் முதன்மை விருந்தினரா்க கலந்து கொண்டு விருதுகளை வழங்கி வைத்தார். இதன் போது மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 200க்கு மேற்பட்ட சிறந்த விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களுக்கு விருதும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன், எதிர்க்கட்சித் தலைவர் தவராசா மற்றும் மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன் மற்றும் இ.ஜெயசேகரம் உட்பட பெருமளவான மக்களும் கலந்து கொண்டனர். (எ-8)

# பல்கலை. ஊழியர்கள் சேவைப் புறக்கணிப்பு

கொழும்பு,மார்ச்.1

பல கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முதல் அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவன ஊழியர்கள் தொடர்ச்சியான சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊழியர்கள் மற்றும் பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங் களில் தற்காலிக ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணிபுரியும் அனைத்து ஊழியர் களே பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களால் 2016.07.27 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரால் கையெழுத்திட்டு வழங்கப்பட்ட உடன்பாட்டுக் கடிதத்தின் அடிப்படையில் தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. மேற்கண்ட உடன்பாட்டுக்கு ஏற்ப உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை, மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உயர்மட்டப் பதவிகள் நிரப்பப்படுவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாமை, அந்தப்பதவிகள் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளில் காணப்படும் சீரற்ற தன்மையை நிவர்த்தி செய்யும்படி எம்மால் வழங்கப்பட்ட அழுத்தத்தை கவனத்தில் கொள்ளப்படாமை போன்றவற்றை சுட்டிக்காட்டியே போராட்டம் நடத்தப்பட்டது. இவற்றுக்கான முடிவு கிடைக்கும் வரையில் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபடுவோம் எனப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளோர் தெரிவித்துள்ளனர்.

(ற-ரி5)

## ஒரு வழக்கில் இருந்து வெலே சுதா விடுதலை



கொழும்பு, மார்ச்.1

ஹெரோய்ன் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் இருந்து பிரபல போதைப் பொருள் வர்த்தகரான வெலே சுதா விடுவிக்கப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு நேற்று நடைபெற்றபோதே மேல்நீதிமன்ற நீதிபதி விக்ரம் களுஆராய்ச்சி தீர்ப்பு வெளியிட்டார்.

சந்தேகநபருக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்கள் சாதாரண சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால், அவரை இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்ய நீதிபதி உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை ஹெரோய்ன் சம்பந்தப்பட்ட மற்றுமொரு வழக்கில் வெலே சுதாவுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

(ற-ரி5)



இலங்கை விவகாரம் தொடர்பில் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கத்தை அளிக்கும் தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்புச்சபை நிறைவேற்ற வேண்டும். என்ற கோரிக்கையை வலியுறுத்தி நேற்று மல்லாவி வர்த்தக சங்கத்தில் கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டன.

(ற,ரி2,74)

## தாக்குதலைக் கண்டித்து நிந்தவூரில் ஆர்ப்பாட்டம்

அம்பாறை, மார்ச் 1

நிந்தவூர் உதவிப் பிரதேச செயலர் மற்றும் அதிகாரிகள் பிரதேச நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து பிரதேச சபை உத்தியோகத்தர்கள் நேற்றுப் பணிப் புறக்கணிப்பு மற்றும் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நிந்தவூர் 10ஆம் பிரிவு அட்டப்பள்ளத்தில் காணிப் பிரச்சினை தொடர்பில் நில அளவீடு செய்து அறிக்கையிடச் சென்ற உதவிப் பிரதேச செயலர் மற்றும் சில அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலை மேற்கொண்டவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று போராட்டம் நடத்திய உத்தியோகத்தர்கள் வலியுறுத்தினர்.



நிந்தவூர் பிரதேச செயலக வளாகத்தில் கறுப்புக் கொடிகள் கட்டப்பப்பட்டிருந்தன.

சம்மாந்துறைப் பொலிஸார் ஆர்ப்பாட்டம் செய்தவர்களுடன் பேச்சு நடத்தினர். தாக்குதல் நடத்தியவர்கள் கைது செய்யப்படுவர் என்று உறுதியளித்தனர்.

(ற-30)

## வர்த்தக நிலையத்தில் தீ விபத்து

கொழும்பு,மார்ச்.01

கொஸ்கம, சாலாவ பகுதியிலுள்ள விற்பனை செய்யும் நிலையமொன்றில் நேற்று தீ விபத்து ஏற்பட்டது.

கட்டடப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையத்திலேயே நேற்று அதிகாலை 1 மணியளவில் இந்த தீ விபத்து இடம்பெற்றது.

கொஸ்கம பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, பொலிஸார், இராணுவத்தினர், சிறப்பு அதிரடிப்படையினர், பிரதேச வாசிகள்மற்றும்கொழும்பு தீயணைப்பு படையினர் ஆகியோரின் உதவியுடன் தீ முழுமையாக அணைக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கொஸ்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற-ரி2)

## லகிருவுக்கு பிணை



கொழும்பு,மார்ச்.1

நீதிமன்ற உத்தரவை மீறிய குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தஅனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் லஹிரு வீரசேகர மற்றும் வணக்கத்துக்குரிய டெம்பிடியே சுகதானந்த தேரருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

நேற்று கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்ப ட்ட போதே இவருக்கு பிணை வழங்கப்பட்டது. அண்மையில், இடம்பெற்ற ஆர்ப்பாட்ட நடவடிக்கை காரணமாக இவர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைய, விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

(ற-ரி5)

## ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகைத் தாக்குதல்

அநுராதபுரம், மார்ச்.1

தம்புத்தேகம நகரில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தைக் குழப்பும் வகையில் பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர் மீது நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை தாக்குதல் மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இராஜாங்கணை நீர்த் தேக்கத்தைப் பயன்படுத்தி அநுராதபுர பிரதேசத்தின் பல இடங்களுக்கு நீர் விநியோகிக்க ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டத்துக்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் 4 பொலிஸார் காயமடைந்ததுடன், 44 ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

(ற-ரி5)

## பெரஹெராவுக்காக சிறப்பு போக்குவரத்து

கொழும்பு, மார்ச்.1

கொழும்பு கங்காராம விகாரையின் நவம் பெரஹரா, நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வை முன்னிட்டு கங்காராம விகாரையைச் சூழவுள்ள வீதிகளில் சிறப்புப் போக்குவரத்துத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, நவம் வீதி, பெரஹர மாவத்தை, டபிள்யு.ஏ.டீ. ராமநாயக்க மாவத்தை, முத்தையா வீதி, ஸ்ரீ ஜினரத்தன மாவத்த, ஹுனுபிட்டிய வீதி, பிரேவ்புரூக் வீதி, பார்க் வீதி, ஸ்டெப்ல் மாவத்தை உள்ளிட்ட வீதிகள் நேற்றுத் தற்காலிகமாக மூடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் ஏற்படும் சிரமங்களை தவிர்த்துக்கொள்ளும் வகையில் பொதுமக்களை மாற்றுப் பாதைகளை பயன்படுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். பெரஹர நிகழ்வு இன்றும் நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

## குளவி கொட்டியதில் 10பேர்சிகிச்சையில்



ஹற்றன்,மார்ச்.01

பொகவந்தலாவ எல்பட, தோட்டத் தொழிலாளர்கள் 10 பேர் நேற்று குளவிக் கொட்டுத் தாக்கதலுக்கு இலக்காகியுள்ளனர்.

நோர்வூட், பொகவந்தலாவ எல்பட கீழ் பிரிவு தோட்டத்தில் தேயிலை மலையில் கொழுந்து பறித்து கொண்டிருந்த தொழிலாளர்களே குளவி கொட்டுக்கு இலக்காகினர்.

தாக்குதலுக்கு இலக்கானவர்கள் பொகவந்தலாவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதில் 08 பெண் தொழிலாளர்களும், 02 ஆண் தொழிலாளர்களும் அடங்குவர்.

எல்பட 15 ஏ மலையில் இருந்த குளவிக் கூடு உடைக்கப்பட்டதன் காரணமாகவே இந்த சம்பவம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி2)

## துப்பாக்கி வைத்திருந்த மூவர் கைது


மட்டக்களப்பு,மார்ச்.1

மட்டக்களப்பு, உன்னிச்சைப்பகுதியில் துப்பாக்கிகளுடன் மூவர் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வலைகள், வெடிபொருட்கள் என்பன மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம்தொடர்பில்பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற-ரி2)



# 2 ஆயிரம் ஆண்டுகள் பழமையான சுடுகாடு

## எகிப்தில் கண்டுபிடிப்பு

கெய்ரோ, மார்ச்1
நூற்றுக் கணக்கான கல்லறைகளைக் கொண்ட சுடுகாடொன்று எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சுடுகாசு 2 ஆயிரம் ஆண்டுகள் பழமையானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தலைநகர் கெய்ரோவிலிருந்து தெற்கே அமைந்துள்ள மின்யா நகரில் இந்தச் சுடுகாடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறித்த சுடுகாட்டில் 40 கல் சவப்பெட்டிகள், ஆபரணங்கள், கலைப்பொருட்கள் மற்றும் தங்கத்தால் ஆன முகமூடி ஒன்று ஆகியன கண்டெடுக்கப்பட்டன. ஆராய்ச்சிப் பணிகளை முடிப்பதற்கு இன்னும் ஐந்து ஆண்டுகள் ஆகும் என்று எகிப்து தொல்பொருள்துறை அமைச்சர் கலீத் அல்எனானி தெரிவித்துள்ளார்.

'இது புதிய கண்டுபிடிப்பு. மத்திய எகிப்தில் மேலும் பல தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைச் சேர்க்கப்போகிறோம். அந்தக் கல்லறைகள் தோத் எனும் பழங்கால எகிப்து கடவுளுக்கு பூசை செய்த மதகுருக்கள் அடக்கம் செய்யப்பட்டவை' என்றும் அவர் தெரிவித்தார். இந்த மாதத்தின் தொடக்கத்தில் 4 ஆயிரத்து 400 ஆண்டுகளுக்கு முன்னைய காலத்து மதகுருக்களின் கல்லறைகளை எகிப்து தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)











# ஸ்ரீதேவியின் உடலை இந்தியா கொண்டுசெல்ல 17,500,000 செலவு

துபாய், பெப். 29
நடிகை ஸ்ரீதேவியின் உடலை டுபாயில் இருந்து இந்தியாவுக்குக் கொண்டுசெல்ல தனியார் வானூர்திக்கு மட்டும் இலங்கை மதிப்பில் சுமார் ஒரு கோடியே 75 லட்சம் ரூபா செலவாகியுள்ளது. நடிகை ஸ்ரீதேவி உடலை இந்தியா கொண்டுசெல்ல கடந்த 25ஆம் திகதி தன வானூர்தி அனுப்பி வைக்கப்பட்டது. அவரது சாவில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்து அவரின் உடலைப் பெறுவதில் 3 நாள்கள் தாமதமானது.

நேற்றுமுன்தினம் மாலை உடல் இந்தியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டது. இந்தநிலையில் ஸ்ரீதேவியின் உடலை இந்தியா கொண்டுசெல்ல இலங்கை மதிப்பில் சுமார் ஒரு கோடியே 75 லட்சம் ரூபா செலவாகி யுள்ளது என்று அறியவருகிறது. (ம)

# 'சிரியாவுக்கு இரசாயன ஆயுதம் வழ

டமஸ்கஸ், மார்ச்1
சிரிய அரசுக்கு இரசாயன ஆயுதங்கள் வடகொரியாவிடம் இருந்தே கிடைக்கப்பெற்றன என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
சிரியாவின் கவுடா நகரில் கிளர்ச்சிக் குழுவுக்கு எதிராக கடும் தாக்குதல்களை நடத்தி

வருகிற
பது கல
இந்த இ
அமெரி



# 2,000 ஆண்டுகள் பழமையான தேவாலயம் மீண்டும் திறப்பு

டெல்அவிவ், மார்ச்1
இயேசுக்கிறிஸ்து உயிர்த்தெழுந்த இடம் என்று நம்பப்படும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த சுமார் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆலயம், இஸ்ரலின் வரிவிதிப்புச் சிக்கல்களால் கடந்த 26ஆம் திகதி திங்கட்கிழமை தற்காலிகமாக மூடப்பட்ட நிலையில், அந்தத் தேவாலயம் நேற்று மீண்டும் திறக்கப்பட்டது.

கிறஸ்தவ, கத்தோலிக்க மக்களின் புனிதத் தலங்களில் இந்த ஆலயமும் ஒன்று. ஆண்டுதோறும் உலகின் பல நாடுகளில் இருந்து ஏராளமான மக்கள் ஜெருசலேமில் உள்ள இந்தத் தேவாலயத்துக்குச் சென்று வழிபாடு செய்து வருகின்றனர்.

அதிலும் தவக்காலமாக இந்தக் காலத்திலும், கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழாவின் போதும் இந்த ஆலயத்துக்கு வரும் மக்களின் கூட்டம் மிகவும் அதிகமாக இருக்கும்.

இந்த நிலையில் வரிவிதிப்புச் சிக்கல்களால் இந்த ஆலயம் மூடப்பட்டமை பல அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில் தற்போது அந்தத் தேவாலயம் மீண்டும் திறக்கப்பட்டது. (ம)

# கவ

ரஷ்யக்



# போர்க்களப் புலிகள் 'வைட் ஹெல்மட்ஸ்'

## குண்டுகளுக்குள் புகுந்து குழந்தைகளை மீட்கும் புனிதர்கள்



டமஸ்கஸ், பெப். 29

சிரியாவில் வான்வழித் தாக்குதல் நடத்தப்படும் இடங்களில் 'வைட் ஹெல்மட்ஸ்' அமைப்பால்தான் தம்மை காப்பாற்ற இயலும் என்று நம்புகின்றனர் அங்குள்ள மக்கள். அங்குள்ள மக்களின் அரவணைப்பு, ஆறுதல் என்று எல்லாமுமாக இந்த 'வைட் ஹெல்மட்ஸ்' அமைப்பு விளங்குகிறது.





சிரிய - ரஷ்ய கூட்டுப் படைகளின் தாக்குதலால் ஒவ்வொரு நாளும் தரைமட்டமான கட்டிடங்களின் புழுதி பறக்கும் தூசுகளுக்கு இடையே அகப்பட்டு கிடக்கும் சிரியாவின் குடிமக்களை மருத்துவனைகளில் சேர்க்கும் பணியை சிரிய உள்நாட்டுப் போர் தொடங்கிய 2014ஆம் ஆண்டு முதல் மேற்கொண்டு வருகிறது 'வைட் ஹெல்மட்ஸ்' தன்னார்வ அமைப்பு. ஜேம்ஸ்லி மெசுரியர் என்பவர் நிறுவிய இந்த அமைப்பில் சுமார் 3 ஆயிரம் தன்னார்வலர்கள் உள்ளனர். இவற்றில் பெண் தன்னார்வலர்களும் அடக்கம்.

இந்த நூற்றாண்டின் நரகம் என்று சித்தரிக்கப்படும் சிரியாவில் பன்னாட்டுச் சமூகத்துக்கு தெரிந்தும் தெரியாமலும் தினமும் 100 குண்டுகள் வரை அப்பாவிப் பொதுமக்களை நோக்கி போடப்படுகின்றன என்பது புள்ளி விவரம்.

அவ்வாறு குண்டு வீசப்படும் பகுதிகளை நோக்கி தலையில் வெள்ளை கவசத்தை அணிந்து கொண்டு தங்கள் குடும்பத்திடமிருந்து விடை பெற்று செல்லும் இந்த வீரர்கள் ஒவ்வொரு நாளும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்களை சரிந்த கட்டிடங்களிலிருந்து மீட்கின்றனர்.

உணவு, தண்ணீரையும் பொருட்படுத்தாது தங்கள் மக்களை எப்படியாவது மீட்டுவிட வேண்டும் என்று போர்க்களப் பகுதியை நோக்கிச் செல்லும் இந்த 'ஹீரோ'க்களை குறி வைக்கவும் சிரிய அரசுப் படைகள் தயங்குவதில்லை. இதுவரை போர் நடைபெறும் இடங்களிலிருந்து 99 ஆயிரத்து 220 உயிர்களை காப்பாற்றியுள்ளனர் 'வைட் ஹெல்மட்' அமைப்பினர். இந்த எண்ணிக்கை தொடர்ந்து ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருகிறது.

காப்பாற்றப்பட்டவர்களின் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் குழந்தைகள். மீட்புப் பணிகள் மட்டுமில்லாது வானிலிருந்து கட்டிடங்களை நோக்கி குண்டுகள் விழும்போது எப்படி தற்காத்து கொள்ள வேண்டும் என்ற பயிற்சியையும் இவர்கள் சிரிய மக்களுக்கு அளிக்கிறார்கள். மேலும் சிரிய போர் பகுதிகளில் நடக்கும் அட்டூழியங்களை சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகிறார்கள்.

"நாமொன்றும் பெரிதாக எதையும் சாதிக்கவில்லை. மனிதம் உள்ளவர்கள் செய்ய வேண்டியது எதுவோ அதையே செய்கிறோம்" என்கிறார்கள் அவர்கள். (ம)

## ...ம் வழங்கி வருவது வ.கொரியாவே'

...வருகிறது சிரியா. இந்தத் தாக்குதலில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த இரசாயன ஆயுதங்களை சிரியாவுக்கு வடகொரியாவே வழங்கியுள்ளது என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## ...கவுடாவில் குண்டுமழை

### ...ஷ்யக் கூட்டுப்படை ஆவேசம்



டமஸ்கஸ், மார்ச் 1

சிரியாவின் கவுடா நகரில் ரஷ்யா தலைமையிலான கூட்டுப் படைகள் ஆவேசத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது.

சிரியாவின் கவுடா நகரம் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் கிளர்ச்சிப் படையின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்தது. அங்கு கடந்த 10 நாள்களாக ரஷ்ய கூட்டுப்படை கடும் தாக்குதல்களை நடத்தி வந்தது.

கவுடாவில் 30 நாள்கள் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்று கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தது ஐ.நா. சபை. எனினும் கூட்டுப் படையின் தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றன. "தற்போது வரை கிழக்கு கவுடா பகுதியில் 4 லட்சம் பொதுமக்கள் வரை உள்ளனர். அவர்களின் தேவைகள் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு 30 நாள் போர் நிறுத்தத்தை உடனே நடைமுறைப்படுத்த வேண்டும்" என்று ஐ.நா. சபையின் செய்தித் தொடர்பாளர் டுஜாரிக் தெரிவித்துள்ளார். (ம)

## சீனாவில் முதியோர் தொகை 24 கோடியாக உயர்ந்தது

பீஜிங், மார்ச் 1

சீனாவில் முதியோர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து, தற்போது 24 கோடியை எட்டியுள்ளதாக அந்த நாட்டு அரசு அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த நாட்டின் முதியோருக்கான தேசிய ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'ஒரு நாட்டின் மக்கள்தொகையில் 10 சதவீதம் பேர் 60 வயதைக் கடந்தவர்களாக இருப்பின், அதனை 'முதியோர் சமூகம்' எனக் குறிப்பிடுவது வழக்கம். தற்போது சீனாவும் அந்த நிலைக்கு வந்திருக்கிறது.

சீனாவில் சுமார் 24 கோடியே 10 லட்சம் பேர், 60 வயதைக் கடந்தவர்களாக இருக்கின்றனர். அதாவது, சீன மக்கள் தொகையில் முதியவர்கள் 17.3 சதவீதமாக வியாபித்துள்ளனர்.

இந்த நிலை தொடருமேயானால், 2050ஆம் ஆண்டு சீனாவில் 48 கோடி முதியவர்கள் இருப்பார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. இது, நாட்டு மக்கள்தொகையில் 34.9 சதவீதமாகும். இவ்வாறு முதியோர் எண்ணிக்கை அதிகரித்து வருவது நாட்டுக்கு பல்வேறு வகையில் பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே, இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு செயல்திட்டம் வகுத்து வருகிறது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# எதிர்பார்த்த ஒன்றுதான்

புதிய அரசமைப்புப்பற்றிப் பேசதற்போதைய அரசியல் சூழ்நிலைகள் பொருத்தமாக இல்லை. அரசின் நெருக்கடிகளைக் கருத்தில்கொண்டு அரசியல் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை உடனடியாக முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

ஜாதிக ஹெல உறுமய கட்சியால் நடத்தப்பட்ட செய்தியாளர்சந்திப்பு, குறித்தகட்சியின்தலைமை அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அவர்.

சிறிலங்காசுதந்திரக்கட்சிக்கும், ஐக்கிய தேசியக்கட்சிக்கும் கிடைக்கும் வாக்குகளைப் பறிக்கும் சூழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. அடுத்து வரவுள்ள மாகாணசபைத் தேர்தல், அரச தலைவருக்கான தேர்தல் ஆகியவற்றில் வெற்றிபெற தற்போதிருந்தே வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். நடுத்தர மக்களை இலக்கு வைக்க வேண்டும் என்றும் அங்கு வைத்து திருவாய் மலர்ந்துள்ளார் அவர்.

முடிவடைந்த உள்ளூராட்சித் தேர்தலில் மகிந்த தலைமையிலான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி பெற்ற வெற்றியை அடுத்து, புதிய அரசமைப்பு உருவாக்கம் கிடப்பில் போடப்படும் என்பதை தமிழர்தாயக மக்கள் நன்கு அறிந்தே வைத்துள்ளனர். ஆதலால் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் கருத்துக்கள் எதிர்பார்த்த ஒன்றுதான்.

உள்ளூராட்சித்தேர்தலில்மகிந்தபெற்றவெற்றியானது, இனவாதப் பரப்புரைகள் மூலமே அவருக்குக் சாத்தியமாகியிருந்தது. புதிய அரசமைப்பு உருவானால் தமிழர் தாயகம் மலரும், இதற்காகவா எமது சிப்பாய்கள் தத்தமது இன்னுயிரைத் தியாகம் செய்தனர் என்று அவர் வெளிப்படையாகவே விமர்சித்திருந்தார். ஆக, இனவாதப் பரப்புரைகள்தான் தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்கின்றன என்று தலைமை அமைச்சர் ரணில்– அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேனதலைமையிலான கூட்டுஅரசுகொண்டுள்ளநம்பிக்கையின்வெளிப்பாடாகவும், மகிந்தவுக்குக்கிடைத்த வெற்றியின்மூலம் பெற்றுக்கொண்ட படிப்பினையாகவுமே அமைச்சர்சம்பிக்க ரணவக்கவின் கருத்துக்கள் அமைந்துள்ளன என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

மாகாண சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய ஏற்கனவே அறிவித்துள்ளார். அது முடிந்த பின்னர் அரச தலைவருக்கான தேர்தல் ஆயத்தங்கள் துரித கதியில் மேற்கொள்ளப்படும். இவ்வாறிருக்கதமதுவாக்குவங்கிகளைக்கருத்தில்கொண்டு, புதிய அரசமைப்பு உருவாக்கத்தை கூட்டுஅரசு இனி எப்போதுமேகருத்தில் கொள்ள இடமேயில்லை என்று எண்ணத்தோன்றுகிறது. அதுவே யாதார்த்தம். சம்பிக்க ரணவக்கவின் கருத்துக்களும் அதையே சொல்லாமல் சொல்லிநிற்கின்றன.

கூட்டுஅரசு மீது தமிழ் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை அண்மைக்காலமாக மிகையாகவே சிதைக்கப்பட்டு வருகிறது. 'கிழக்கில் தமிழர்கள் பெரும்பான்மையாக இல்லை. வடக்கில்என்னவென்று தெரியவில்லை. ஆதலால் வடக்கு – கிழக்கு இணைப்புச் சாத்தியமில்லை' என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும், 'காணாமல் ஆக்கப்பட்டவர்கள்எங்கு தேடியும்கிடைக்கவில்லை. அவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வேண்டுமானால்தரலாம்' என்று அரசதலைவர்மைத்திரிபால சிறிசேனவும் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கருத்து வெளிப்படுத்தியிருந்தனர். தற்போது, புதிய அரசமைப்புஉருவாக்கத்துக்கும் அமைச்சர்சம்பிக்கரணவக்கவிடம் இருந்து பதில் கிடைத்துள்ளது.

கூட்டு அரசு அல்ல இன்னும் எத்தனை அரசுகள் அமைந்தாலும், கொழும்பின் நிலைப்பாடு சிறுபான்மை மக்களுக்கு எதிராகத்தான் அமையும். அதன் உளவியல், சிந்தனை, செயற்பாடுகள் என்று எதுவும் சிறுபான்மை மக்களுக்குச் சாதகமாக அமையப்போவதில்லை என்பது கடந்தகாலவரலாறுகளினதும், நிகழ்காலப்படிப்பினைகளூடானதுமான அவதானிப்பு.

# கூட்டரசின் ஆட்சி தொடர்வதே மேற்குலக நாடுகளின் அவா

“அரசியல் விமர்சகர்களது கருத்துப்படி, பசில் ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேனவுடன் நெருங்கிய உறவைப் பேணாமையினால், வாக்குகள் பிரிந்து, எவருமே பெரிய அளவில் வெற்றியீட்ட முடியாதுஎன்ற நிலைமைதான் உருவாகியிருந்தது. உண்மையிலேயேபசில் ராஜபக்ச, மகிந்த ராஜபக்சவுக்கு துரோகம் செய்து, ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்கு வழிவகுக்கின்றார் என்ற கருத்தும் கூட்டு எதிரணியினரால் முன்வைக் கப்பட்டது.

மொழிமூலம்:-
சிவந்திரணசிங்க
(சிலோன் ருடே)

தமிழில்:- ஆனந்த்

பிரித்தானியர்கள் 70 வருடங்களுக்கு முன்னர் எங்களுக்கு வழங்கிவிட்டுப் போன சுதந்திரம், எங்களால் முறையாகக் கையாளப்படாமையினால், உருக்குலைந்து, அதன் விளிம்புக்கே வந்துவிட்டது. அத்துடன் வெள்ளையர்கள் வெளியேறுமுன்னரே, சில தமிழ் அரசியல்வாதிகள், சிங்கள அரசு என்ற பிரிவினைக் குரலைஎழுப்பத்தொடங்கிவிட்டார்கள். வடக்கிலும், கிழக்கிலும்பயங்கரவாதம்தலையெடுக்கக் காரணம், நிச்சயமாக தமிழ் அரசியல் தலைவர்களின்தவறானவழிநடத்தலே. மேலும், இந்தியா, தனது அரசியல் ஆதாயத்துக்காகவும், பௌதீக நலநோக்குக் காரணமாகவும் இவர்களை ஆதரித்தது. நாங்களும் கூட அவர்களுடன் ஒத்துப் பாடினோம்.

விட்டதால், போரை வெற்றி கொண்ட வீரரான முன்னாள் அரச தலைவர் மகிந்த, பெரிதாக எதையும் அலட்டிக் கொள்ளாமலேயே வெற்றிப் பாதையில் பயணித்தார். இந்த இரண்டு கட்சிகளினதும், இரண்டாம் மட்டத் தலைவர்கள், இந்த அரசின் உள்ளகப் பூசல் காரணமாக மகிந்தவே வெற்றியை நோக்கி நகர்வார் என்பதை உணர்ந்து, இந்த உள்ளகப்பூசலை நிறுத்த முயன்றார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரபலஅரசியல்வாதிகளில்ஒருவரான லக்ஸ்மன் கிரியெல்லவின் எதிர்பார்ப்பாக இருந்தது, இந்தப்பழையகாதலர்கள்இருவரும்- மைத்திரிபால சிறிசேனவும் ரணில் விக்கிரமசிங்கவும்- தேர்தலின் பின்னர் ஒன்று சேர்வார்கள் என்பதே. மைத்திரிபால மற்றும் ரணில் ஆகிய இருவருக்குமிடையிலான இந்தமோதல்கள்பாரதூரமான ஒன்றல்ல என 'எலிய' போன்ற தேசிய இயக்கங்களும், கூட்டு எதிரணியினரும் கூறிக்கொண்டு தானிருந்தார்

பேணவில்லை என்ற காரணத்தினால், கூட்டு எதிரணியின் விசுவாசிகள் மனமுடைந்திருந்தனர், அரசியல் விமர்சகர்களது கருத்துப்படி, பசில் ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேனவுடன் நெருங்கிய உறவைப் பேணாமையினால், வாக்குகள் பிரிந்து, எவருமே பெரிய அளவில் வெற்றியீட்ட முடியாது என்ற நிலைமைதான் உருவாகியிருந்தது. உண்மையிலேயேபசில்ராஜபக்ச, மகிந்த ராஜபக்சவுக்கு துரோகம்செய்து, ஐக்கியதேசியக் கட்சியின் வெற்றிக்கு வழிவகுக்கின்றார் என்ற கருத்தும் கூட்டு எதிரணியினரால் முன்வைக்கப்பட்டது.

**பசில் ராஜபக்சவினது விசித்திரமான போக்கு**

பசில் ராஜபக்ச ஒரு திறமையான அரசியல்வாதி என்பதால், அவரால் பிரபலமான அரசியல்வாதியாகத்திகழமுடியவில்லை. அவரைப் பற்றிய பெரிய மனக்குறையான விடயம், அவர் எல்லாவற்றிலும் மூக்கை நுழைப்பதேயாகும்.



**அதிர்ச்சியை ஏற்படுத்திய உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள்**

உள்ளூராட்சித்தேர்தல்குறித்த முன் நடவடிக்கைகள் ஆரம்பமானவுடனேயே கூட்டு அரசின் இரண்டு தரப்புக்களுக்குமிடையிலான உறவில் விரிசல் ஆரம்பித்து, அந்த விரிசல் நாளடைவில்மேலும்பெரிதாக விரிவடையத் தொடங்கியது. இரண்டுகட்சிகளினதும்உயர் தலைமைகள் இரண்டுமே, ஒருவர்மீதுமற்றவர்அவதூறு வெடிகுண்டுகளால்தாக்குதல் தொடங்கினார்கள். ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் தாங்களாகவே தங்களைஇழிவுபடுத்திக்கொண்டுகள். மடகொட அபேதிஸ்ஸ தேரர்இதுபற்றிக்குறிப்பிடுகையில், மைத்திரியும் ரணிலும், வாடகைவீட்டில்குடியிருக்கும் கணவனும்மனைவியும், வீட்டின் உரிமையாளர் வாடகை வசூலிக்க வரும் போது, தம்மிடையே சண்டையிட்டுக் காட்டிக் கொள்வது போன்று நடிப்பது, நாட்டை முடக்கிப் போட்டுள்ளபிரச்சினைகளைமறைக்கவே எனக் கூறியிருந்தார். எதுஎப்படியாயினும், தாமரை மொட்டின் வெற்றியை எவருமே எதிர்பார்க்கவில்லை என்பதேஉண்மை. பசில்ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேனவினது சுதந்திரக் கட்சியுடனான உறவை முறையாகப்

மகிந்தவின்ஆட்சிக்காலத்தில், மற்றெவரையும் தரகுப்பணத்தைப்பெற அனுமதிக்காமல், தானே தரகுப்பணம் அனைத்தையும் சுருட்டிக் கொண்ட அவரதுசெயற்பாடு, கட்சிக்குள் அவருக்கு நிறைய எதிரிகளை உருவாக்கிவைத்தது. பசிலின் நடவடிக்கையால் அதிருப்தி அடைந்தசுதந்திரக்கட்சிஉறுப்பினர்கள் அவருக்கு "மிஸ்டர் பத்துவீதம்" என்றபட்டப்பெயர் சூட்டியிருந்தனர். இவர்களே தான் மகிந்தவின் ஆட்சிக் கவிழ்ப்புக்கு வழிவகுத்தவர்கள். மகிந்தவின் ஆட்சியில் நாட்டின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு, மூலகாரணமாக இருந்தவர் பசில் ராஜபக்ச



லாமல் கடமையாற்றும் கருஜயசூரியஎதையுமே வெளிப்படையாகக் கதைப்பவர். போர் இடம் பெற்றகாலகட்டத்தில்அவரது அறிவுரைகள் பெரும் வரவேற்பைப் பெற்றன. அவர்தன் சகாக்களுடன் அப்போது அதிகாரத்திலிருந்த கூட்டணி அரசுடன் இணைந்து ஆட்சிதொடர உதவினார். நாட்டில்போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டபின்னரேஅவர் மீண்டும் ஐ.தே.கட்சிக்குத் திரும்பினார். அந்தக் காலத்தில் கரு ஜய சூரிய ஐ.தே. கட்சியில் இருந்து ஒதுங்கியிருந்தமைக்கான காரணம் போரை முடிவுக்குக் கொண்டுவர ரணில் உதவ முன்வரவில்லை என்பதுதான். ஆனால் இன்று நிலைமை மாறியுள்ளது. சஜித் பிரேமதாச கூட ஒரு காலத்தில் ரணிலுக்குச்சவாலாகஇருந்தவர்தான். ஆனால் இப்போதுஅந்தநிலைமைமாறிவிட்டது. சஜித் பிரேமதாச தன்னுடைய தொகுதியின் மேம்பாட்டுக்காகக் கடுமையாகப் பாடுபட்டவர். அவரை அந்த வழியிலேயே போக விட்டிருந்தால்நாட்டின்அரசதலைவராகும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியிருக்கும். ஆனால் அவர் திசை திருப்பப்பட்டு, மகிந்த ராஜபக்சவைத்தீவிரமாகஎதிர்ப்பதற்கான வழிவகைகளைமேற்கொள்ளஅவர்ஏவப்பட்டார்.

சஜித் பிரேமதாசாவின் தந்தையாரான முன்னாள்அரசதலைவர்ரணசிங்கபிரேமதாச தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்து நாட்டை நிர்வகிக்கமுயன்றார். ஆனால்அவர் அவர்களாலேயே கொல்லப்பட்டார். மகிந்த ராஜபக்சதான் கடைசியாக தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்தவர். ஆனால் சஜித் பிரேமதாசமகிந்தமீதுபழிசுமத்திவிட்டு, மாவை சேனாதிராஜா, விஜயகலா மகேஸ்வரன் ஆகியோருடனான உறவைத் தொடர்ந்தார். மூத்த அரசியல்வாதியான ஆனந்த சங்கரி, மாவைசேனாதிராஜாதமிழீழவிடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டவர் என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளார். மகேஸ்வரன் பகிரங்கமாகப் பிரபாகரனைப் பாராட்டி அவருடைய காலத்தில் வாழ்க்கைசிறப்பாகவேஇருந்ததாகக்கூறியுள்ளார்.

**மேற்குலக நாடுகளது ஆதரவு கூட்டரசுத் தரப்பினர்களுக்கே**

பகிரங்கமாக அல்லாது அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசப், மற்றும் இந்தியாவின் உயர் ஸ்தானிகர் ஆகியோர் அண்மைய அரசதலைவர்-தலைமைஅமைச்சர்ஆகியோரிடையேயானமுரண்பாட்டின்போது, சிறிசேனாவையும் ரணிலையும் இணைத்து வைப்பதில் பெரும் பங்காற்றினார்கள். 25 வருடங்கள் தொடர்ச்சியாகத் தேர்தல்களில் தோல்விகளைச் சந்தித்த ரணில்விக்கிரமசிங்க, தலைமைஅமைச்சர் பதவியிலிருந்து விலகத் தயாராக இல்லை. கல்விப்பொதுத்தராதரப்பரீட்சையின் தோல்வியைக் கூடத் தாங்க முடியாமல் தவறான முடிவெடுத்துத் தமது உயிரைப்போக்கிக்கொள்ளும்மாணவசமூதாயம் வாழும் மோசமானதொரு நாட்டின் தலைமை அமைச்சர் பதவியிலிருக்கும் அவர், வாக்காளர்களின் பலத்தை நம்பியிருக்கவில்லை. அவர் நம்பியிருப்பதெல்லாம் மேற்குலக நாடுகளது பின்புல ஆதரவைத்தான். ரணிலை தலைமை அமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்றச் சிறிசேன எவ்வளவுதான் முயன்றாலும் மேற்குலக நாடுகள் அதனை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. எங்கள் நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைத்து நாட்டைத் துண்டு போடுவதுதான் மேற்குலக நாடுகளது நோக்கம். வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தெற்கில் ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும்தோல்வியடைந்தமைக்கான காரணம், இவர்கள் மக்களின் அன்றாட அடிப்படைத்தேவைகளைப் பற்றிச் சிந்திக்காமல், அவர்களுக்கானதொழில்வாய்ப்புக்களைஏற்படுத்திக் கொடுப்பதுகுறித்துஅக்கறைகொள்ளாமல், பெருகிவரும்போதைப்பொருள்பாவனையைக் கட்டுப்படுத்த முயலாமல், வெறும் அரசமைப்புஉருவாக்கம், அதன்மாற்றங்கள் போன்ற மக்களுக்குப் பெரிதாக அக்கறையில்லாத விடயங்களைப் பற்றியே கூடுதல்கவனம்செலுத்தியமையே ஆகும். மேற்குலகநாடுகள்மைத்திரிபாலசிறிசேன மற்றும் ரணில் விக்கிரம சிங்கவின் அரசியல் பந்தத்தைப் பாதுகாத்து விட்டிருக்கலாம். ஆனால் நாட்டைப் பாதுகாக்க நாங்கள்ஒன்றிணைந்துசெயற்பட்டாகவேண்டும்.

தான். சகலஅபிவிருத்தித்திட்டங்களையும் பசிலேவளைத்துப்போட்டுக்கொண்டிருந்த போதிலும், சுதந்திரக்கட்சியின்இளம்நாடாளுமன்ற உறுப்பினர்கள், பசில் ராஜபக்சவுக்கு நன்றிக் கடன் பட்ட வர்களாகவே இருந்தனர். ஏனைய மூத்த அரசியல்வாதிகள்இந்தஇளம்நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கு அரசியல் நெளிவு சுளிவுகளைக் கற்றுக் கொடுக்க முயலவில்லை. அந்த இளம்நாடாளுமன்றஉறுப்பினர்கள்அரசியலில் மேலோங்கிவிடுவார்கள் என்றஅச்சம்தான்அதற்குக்காரணம். ஆனால்பசில் இந்த இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சகலவித உதவிகளையும் செய்து கொடுத்ததுடன், அவர்களுடைய தொகுதிகளிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துஅவர்களுடையவெற்றிக்கு வழிவகுத்துக்கொடுத்தார். இந்தநிலையில் தான்பசில்பரிதாபத்திற்குரியவராகிஅவரது நேர்மை கேள்விக்குறியாகியுள்ளது.

**குழப்பமுற்ற நிலையிலும் கூட்டைத் தொடர்ந்த மைத்திரிபாலவும் ரணிலும்**

எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்குள் நடக்கவிருக்கும்மாகாணசபைகளுக்கான தேர்தலைத் தொடர்ந்து, அரச தலைவர் பதவிக்கானதேர்தல் மற்றும்நாடாளுமன்றத் தேர்தல்ஆகியவற்றின் போது பசில் ராஜபக்சவின் நேர்மை வெளிப்படுமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் மூன்று கட்சிகளுமே பெரு வெற்றிபெறாமல், ஐக்கியதேசியக்கட்சிபடு தோல்வியையும், சுதந்திரக்கட்சிபயங்கரப் படுதோல்வியையும் சந்திக்க நேர்ந்தது. இதனால்பழையகாதலர்களானமைத்திரிபாலாவும்ரணிலும்குழப்பமடைந்தமனநிலையிலும், அரசியல் வாழ்க்கையைத் தொடரவேண்டியதாயிற்று. அரசியல் முக்கியத்துவத்தி னின்றும் , ரணிலை ஒதுக்கி வைத்ததால், மக்கள்மைத்திரிபாலசிறிசேனாவுக்கு மிக மோசமான தேர்தல் தோல்வியை வழங்கியிருந்தனர். கடந்த ஒன்றரை வாரங்கள் ரணிலைத் தலைமை அமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்றிவிடஅரசதலைவர்மைத்திரிமுயற்சிப்பதும், ரணில் வெகு சாதாரணமாக அதனை மறுதலிப்பதுமாகவே கழிந்தன. உண்மையில் அது ஒரு நல்ல பொழுது போக்காகவே தோன்றியது. இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சியைவிட குறைவான வாக்குகளையே பெற்றிருந்த போதிலும், ஐக்கிய தேசியக் கட்சி சிறிசேனாவைப் பதவி விலகுமாறுஒருபோதும்கூறியதில்லை. ஐக்கிய தேசியக் கட்சியினர்தான் இரண்டாகப் பிரிந்து ஒரு குழுவினர் ரணிலைப் பதவி விலகும்படி வற்புறுத்த, மற்றைய குழுவினர் அவரைத் தலைமை அமைச்சர் பதவியைத் தொடருமாறு வலியுறுத்தினர்.

**தலைமை அமைச்சராக கரு ஜயசூரியவை அல்லது சஜித் பிரேமதாசவை நியமிக்க யோசனை முன்வைப்பு**

ரணில்வெளியேற்றப்படவேண்டுமென்ற குழுவில் கலாநிதி ஹர்ச டி சில்வா போன்றவர்கள்இருந்தமைகுறிப்பிடத்தக்கது. இந்த ஹர்ச டி சில்வா தான் முன்னைய அரசின் பொருளாதாரக் கொள்கைகளை மோசமானவைகளாகக் காட்டுவதற்காக நாட்டின் அபிவிருத்திக் கட்டமைப்புகளுக்கு முன்னைய அரசுக்கு நிதியுதவி வழங்கிய சீனாவைக் கடுமையாக சாடும் அளவுக்குச் செயற்பட்டவராவார். ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்பதைவிட, சிறந்த ஒரு பொருளாதார நிபுணர் என்ற கோணத்திலேயேஅவரதுகருத்துபலராலும்அக்கறையாகச் செவிமடுக்கப்பட்டன. ஆனால், அதிகாரம் கைக்கு வந்தவுடனே, அவரது போக்குத்தலைகீழாக மாறிவிட்டது. அவர் எதிர்க் கட்சியில் இருந்த சமயம் எங்கே தவறு நடந்தது என்பது குறித்து விமர்சிக்கவில்லை. இந்த அரசில் அவர் பதவியிலிருந்த காலம்முழுவதும் கண்களை மூடிக் கொண்டு செயற்பட்டிருக்கிறார். அதே சமயம் ரணிலை தலைமை அமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்ற வேண்டுமென விரும்பிய ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு தரப்பினர், தலைமை அமைச்சர் பதவிக்கு பொறுத்தமானவர்களாக இருக்கக்கூடிய இரண்டுபேரை அணுகியுள்ளனர். கருஜய சூரியவும், சஜித் பிரேமதாசவுமே அந்த இரண்டு பேருமாவர். இவர்களில் கரு ஜய சூரிய நாடாளுமன்ற வரலாற்றில் நாட்டுப் பற்றுள்ள, நேர்மையானதொரு சபாநாயகர் என்று பெயர் பதித்தவர். பாகுபாடு இல்

> ரணிலைத் தலைமை அமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்றச் சிறிசேன எவ்வளவுதான் முயன்றாலும் மேற்குலக நாடுகள் அதனை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. எங்கள் நாட் டின் ஒற்றுமையைச் சீர் குலைத்து, நாட்டைத் துண்டு போடுவதுதான் மேற்குலக நாடுகளது நோக்கம். மேற் குலக நாடுகள் மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் பந்தத்தைப் பாதுகாத்து விட்டிருக்கலாம். ஆனால், நாட்டைப் பாதுகாக்க நாங்கள் ஒன்றிணைந்து செயற்பட்டாக வேண்டும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பது எமது கடமை

பொதுச் சொத்துக்கள் சகலருக்கும் உரிமையானவை. அவற்றை மிகவும் பாதுகாப்பாக பயன்படுத்த வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உரியதொன்று. எம்மில் பலரும் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தில் வாங்கும் பொருள்களை மிகவும் அவதானமாகப்பாவிக்கின்றோம். அதேபோல்பொதுச்சொத்துக்களைப்பாவிக்கவேண்டிய பொறுப்பு சகலருக்கும் உண்டு.

போர் இடம்பெற்ற வேளையில் விலை மதிக்க முடியாத் பெருமளவிலான பொதுச் சொத்துக்கள் அழிவடைந்ததை எவரும் மறுப்பதில்லை. பொதுச் சொத்துக்கள் அழிவடைவதால் பாதிக்கப்படுவது பொதுமக்களேதான். கடந்த வாரம் வரணி வடக்கில் உள்ள சனசமூக நிலையத்தில் இனந்தெரியாத விசமிகள் இரவு வேளை, சனசமூக நிலைய முன்பக்கத்தில் உள்ள சுவர்ப் பகுதியை இடித்து வீழ்த்தி நாசப்படுத்தி உள்ளனர். இதனால்இந்தவிசமிகள்கண்டபலன்தான்என்ன? பிரதேசத்தில் ஒரு சனசமூக நிலையத்தை உருவாக்கி, அதை நடைமுறைப்படுத்த நீண்ட காலம் எடுக்கும். அது சிரமமானதொரு பணி.

இப்படியானஅறிவுப்பசிதீர்க்கும்இடத்தைச்சேதப்படுத்திஇல்லாதொழிப்பதால்இந்த விசமிகளுக்குஎன்னதான்இலாபமோ? இப்படிப்பட்டவர்களாஎமதுஎதிர்காலச்சிறார்களைவழிநடத்துபவர்கள்? முன்னையதொருகாலகட்டமாகஇருந்தால், இப்படிப்பட்ட விசமிகளுக்கு இப்படியான துணிச்சல் வருமா? இனிவரும் காலங்களிலாவது இப்படிப்பட்டவர்கள்மனம்திருந்திநாட்டுக்கும்எம்இனத்தவர்களுக்கும்நல்லதைச்செய்ய முன்வரவேண்டும்.

எமது வளங்களும் அன்றாடம் சுரண்டப்படுகின்றன. மீதியாய் இருக்கும் பொதுச் சொத்துக்களக்கும்நாமேஅழிவைஏற்படுத்திஅவற்றைஇல்லாமல்செய்தால்பாதிக்கப்படுவது எம்மவர்களேஎன்பதைமறந்துவிடக்கூடாது. எனவேநல்லதைச்செய்ய முன்வாருங்கள். அது முடியாது எனில் ஒதுங்கி இருந்தாலே போதும்.

அ. அன்பு, வரணி.

# பகிர்வு, மனிதத்தின் உயிர்ப்பு

ஆடம்பரமும், கேளிக்கையும், ஆர்பாட்டமும், அறுசுவை உணவும் நிறைந்த செல்வந்தன் ஒருவனின் உணவறை வாசலில் கடும் பசியோடும், சீழ்வடியும் புண்களோடும், வாலறுந்த நாய்களோடும் ஒருபிடி உணவுக்காக காத்திருக்கும் ஏழை இலாசரை கண்டு கொள்ளாத செல்வந்தனின் கதையை இன்று இயேசு கூறி நிற்கிறார். எவருக்கு என்ன தேவையென உணர்ந்து சேவைகள் ஆற்றிடவே இறைவன் எமக்கு வாய்ப்புக்களை, வசதிகளைத் தருகின்றார். எவ்வளவு வைத்திருக்கின்றோம் என்பதைவிட எதற்காக வைத்திருக்கின்றோம் என்பதே முக்கியமானது. சகோதரத்துவ உணர்வு மேலோங்குகின்ற போது பதுக்கும் எண்ணம் மடிந்து போகும். ஏழை இலாசரைப் புறக்கணிக்கும் செல்வன் இறைவனைப் புறக்கணிக்கின்றான் என்று எண்ண முடியாதா?




அடுத்தவரின் நலனின் அக்கறை கொள்ளாத செல்வந்தர்களின் இதயம் அன்பு ஊற்றுவற்றி, பகிர்வு வாய்க்கால் அடைபட்டு உவர் நிலமாக மாறிவிடுகிறது. விளைவு, மனநிறைவு, நிம்மதி, மகிழ்வைத் தொலைத்து நரகத்தைத் தாமே உருவமைத்து மனம் உழன்று சாவடைகின்றனர். இவர்கள் ஆன்மிகத்தில் ஏழைகள். கடவுளைச் சேர்ந்து வாழ்வோர் நீரருகே நடப்பட்ட மரம் போல நிம்மதியையும் மனநிறைவையும் ஆசிர்வாதங்களையும் வாழ்நாள் முழுதும் பெறுவர். இவர்கள் ஆன்மிகத்தில் செல்வந்தர்கள். செல்வத்தைப் பிறருக்கும் பகிர்ந்து கனிதரும் மரமாக வாழ்வோம். ஏழை இலாசருக்குக் கிடைத்தது போல ஆபிரகாம் மடி என்ன ஆண்டவன் ம்டியே பரிசாகக் கிடைக்கும்.

எஸ். யேசுதாஸ் , கொழும்புத்துறை.



## வரலாற்றில் இன்றைய தினம் 01.03.2018



1790 - அமெரிக்காவின் முதலாவது சனத்தொகைக் கணக்கெடுப்பு இடம்பெற்றது.

1901 - ஆஸ்திரேலிய இராணுவப் படை உருவாக்கப்பட்டது

1947 - பன்னாட்டு நாணய நிதியம் தனது நிதி நடவடிக்கைகளைத் தொடங்கியது.


1961 - உகண்டா சுயாட்சி பெற்று தனது முதலாவது தேர்தலை நடத்தியது.

1991 - சதாம் ஹுசைனுக்கு எதிரான எழுச்சி ஈரானில் தொடங்கியது.

2003 - நெதர்லாந்தின் ஹேக்கில் பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றம் தனது முதலாவது அமர்வைத் தொடங்கியது.

2007 - அனுராரபுரத்தில் வானூர்திப்படைப் பயிற்சி வானூர்தி வீழ்ந்து நொருங்கியது. அதிகாரியும் பயிற்சி விமானியும் சாவடைந்தனர்.

1562 - றியோடிஜெனிரோ நகர் உருவாக்கப் பட்டது.



**நாளை**

**02.03.2018**

வெள்ளிக்கிழமை

**மாசி 18**

திதி: பூரணை கா 07.02 வரை
நட்சத்திரம்: பிரதமை பி.இ. 05.36 வரை
சுபநேரம்: 06.27–07.57 வரை
ராகுகாலம்: 10.57–12.27 வரை



# மேன்மைமிகு மாசிமகம்

சிவரம்யா

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்' அன்பும், அருளும், பக்தியும் கொண்ட பெருமை பெற்ற சமயம் சைவ சமயம் ஆகும். இறைபக்தியால் வாழ்வில் மேன்மை பெற்றவர்கள் பலர். இறைவனின் பெருமைபாடி முக்தி பெற்றவர்களை நாம் அறிவோம். சிறப்பு விரத தினங்களில் மனம் ஒருமித்து கடவுளை வேண்டி நற்பேறு அடையலாம். அதிகாலையில் துயில் எழுந்து இல்லங்களைத் தூய்மை செய்து மனம், உடல், வாக்கு சுத்தமாக, புலன்களை அடக்கி இறைவனை நினைந்து வழிபடல் நலம் தரும்.

### தமிழ்நாட்டில் மாசிமகம்

மாசிமாதத்திலே வரும் மக நச்சத்திரத்தோடு கூடிய புண்ணிய காலம் மாசிமகம் எனப்படும். மாசிமாதம் சந்திரன் சிம்ம இராசியில் மகம் என்னும் நட்சத்திரத்தில் நுழையும் நாளன்று ஆலயங்களில் சிறப்பான வழிபாடு நடைபெற்று வருகின்றது. இந்தியாவிலும், இலங்கையிலும் இந்துக்களால் மிகவும் பக்தி சிரத்தையுடன் இந்த நாள் வழிபடப்படுகிறது. தமிழ் நாட்டில் கும்பகோணத்தில் பனினரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் "மகாமகப் பெருவிழா" புகழ் பெற்ற விழாவாகும். இந்த விழாவுக்கு இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பக்த கோடிகள் வருகிறார்கள். இவர்கள் அனைவருமே விரதம் கடைப்பிடித்தே இந்தப் பெருவிழாவில் கலந்து கொள்கிறார்கள். இவ்வாறு விரதம் இருந்து இந்த மகாமகத்தில் கலந்து கொள்பவர்கள் எல்லா நன்மைகளையும் அடைவதுடன் பூர்வஜென்ம பாவங்களும் நீங்கி நிம்மதியு டன் திகழ்வார்கள் என்பது உறுதி. இந்த நாளைக் குறிக்க பல வரலாற்று விளக்கங்கள் உள்ளன.

### குழந்தைப்பேறுக்கு உகந்த மாசிமகம்

ஆறுகளான கங்கையும், யமுனையும் பரம்பொருளான சிவபெருமானிடம் போய் கேட்டன. "இறைவா! பல கோடி மக்கள் தாங்கள் செய்த பாவங்களை எங்களில் முழுகுவதால் கழுவித் தீர்க்கின்றார்கள். ஆனால் நாங்கள் எங்கே போய் அவற்றைத் தீர்ப்பது?" என்று. அதற்கு சிவபெருமான் "நீங்கள் மாசி மாத மகத்தில் கும்பகோணம் மகாமகக் குளத்தில் தங்குங்கள்." என்றார். அந்தப் புண்ணிய குளத்தில் நீராடிய வர்களுக்கு முப்பிறவிப் பாவங்கள் அகலும் என்றும் ஆண் அல்லது பெண் குழந்தைகள் வேண்டுமென்று விரதம் இருப்பவர்களுக்கு வேண்டியவாறே பிள்ளை பிறக்கும் என்றும் சொல்லுவார்.

ஆதிகாலத்தில் அரசனொருவனிருந்தான். அவன் மிகவும் கொடியவன். அவனைக் கொல்வதற்கேற்ற உபாயத்தைக் கூறும் பொருட்டு அவனுடைய குரு இருளிலே வருண தேவனிடத்தில் சென்றார்.

அவரைப் பகைவனென்று நினைத்த வருணன் தனது பாணத்தை அவர் மேல் வீசினான். உடனே குரு இறந்தார். இதனால் வருணன் நெடுங்காலமாகத் துன்பத்தை அனுபவித்துக் கொண்டு கவலையடைந்தான்.

மண்ணுலகத்தவரும் விண்ணுலகத்தவரும் சிவபெருமானை நோக்கி, "வருணனுடைய துன்பத்தை நீக்கியருளுக" என விண்ணப்பித்தார்கள். சிவபெருமான் இயைந்து, சமுத்திரத்துக்குள் எழுந்தருளி வருணனுடைய கட்டை அறுத்தருளினார். வருணன் எழுந்து சிவபெருமானை வணங்கி, "மாசி மகமாகிய இத்தினத்திலே இத்துறையிலே நீராடினவருடைய பாவத்தை நீக்கி அவர்களுக்கு முத்தியைக் கொடுத்தல் வேண்டும்; தேவரீர் இத்துறையில் அத்தருணம் எழுந்தருளுதலும் வேண்டும்." எனப் பிரார்த்தித்து வரங்களைப் பெற்றான்.

இந்தச் சரித்திரத்தை வியாக்கிரபாத முனிவர் இரணியவர்மச் சக்கரவர்த்திக்கு கூறினார். அவன் மதசிமகத் தினம்வரச், சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்குக் கொடியேற்றுவித்தர்ன். தேவர்கள், முனிவர்கள் முதலானோர் வந்து விழாவைத் தரிசித்துக் 'கனகசபைக்குத் தலைவரே! அருள் செய்க' என்று வேண்டினார்கள். தேவர்கள், சிவபெருமான் சமுத்திரத்துக்கு எழுந்தருளும் வழியை அலங்காரஞ் செய்தார்கள். சிவபெருமான் சமுத்திரத்துக்கு எழுந்தருளினார். இதனை வருணன் எதிர்கொண்டு நமஸ்கரித்தான். சிவபெருமான், வருணனது பாவத்தை நீக்கியருளிய துறையிலே திருமஞ்சனமாடி அடியார்களுக்கு அநுக்கிரகித்துக் கனகசபையிலுள்ளே புகுத்தருளினார்.

*திருஞானசம்பந்த சுவாமிகள் இது பற்றி,*
*மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்*
*கடலாட்டுக் கண்டான் கபாலீச்சர மமர்ந்தான்*
*அடலா னேறூரும் அடிகள் அடிபரவி*
*நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்*
என்றார்.



மாசி மாதத்து மக நட்சத்திரத்தில், தக்கன் என்பானின் மகள் தாட்சாயினி பிறந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. தக்கன், தனது மகளாகச் சிவபெருமானின் சக்தியாகிய உமாதேவியார் வந்து பிறக்க வேண்டும் என்று வேண்டிப் பெருந்தவம் இயற்றினான். தக்கன் செய்த தவத்தைக் கண்ட சிவபெருமான், அவன் முன் தோன்றிய பொழுது, தான் உமாதேவியாரை மகளாகப் பெறவும், சிவபெருமானை மருமகனான அடையவும் வரம் வேண்டினான். கடவுள் அருள் கூர்ந்து அருளினார். உமாதேவியாரும் வந்து தக்கனுக்கு மகளாகப் பிறந்தார். தெய்வக் குழந்தைக்கு தாட்சாயினி எனத் தக்கன் பெயரிட்டு அன்போடு வளர்த்துச் சிவபெருமானுக்குத் திருமணம் செய்வித்தனன். தாட்சாயினி மாசி மகத்தன்று திருவவதாரம் செய்தமையினால், தேவியின் பிறந்த தினமாகவும் இந்த நாள் மகத்துவம் பெறுகிறது.

புனிதம் நிறைந்த இந்த விரதநாளை கடைப்பிடித்து சிவபொருமான், பார்வதியை வழிபட்டு நற்பயன்கள் பெறுவோமாக.









## மரண அறிவித்தல்

### இராசதுரை ரவீந்திரன் (வில்லுத்தகடுரவி)



யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை, பத்திரகாளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை ரவீந்திரன் (27.02.2018) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை இரத்தினம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ் சென்ற சபாரத்தினம் மகேஸ்வரி தம்பதி யரின் அன்பு மருமகனும் யசோதராவின் அன்புக்கணவரும் விஜித்திரா (கொலண்ட்), சுமித்திரா, மிதுலன் (விவசாய திணைக்களம் பரந்தன்), சங்கீர்த்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயமோகன் (கொலண்ட்).ராகுலன் (பிரான்ஸ்) ஆகி யோரின் அன்பு மாமனாரும் ஜானுஷன் (கொலண்ட்), அபிநாத் (கொலண்ட்), சரண்யா (கொலண்ட்) ஆகியோரின் அன்புப்பேரனும் இராஜேஸ்வரி (பிரான்ஸ்), துரைசிங்கம், ஆனந்தராசா, பொன்ராசா காலஞ்சென்ற சிவபாதம், தவனேஸ்வரி, ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்), சிவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கோமேஸ்வரி மற்றும் நிர்மலா, ஜெயலக்சுமி, பத்மினி (சுவிஸ்) ,பஞ்சலிங்கம், லோகேஸ்வரன் (பிரான்ஸ்), கீதாதேவி (பிரான்ஸ்), புஸ்பராணி, சிவபாலன், நிர்மலகுமாரி, அம்பிகா, அஜந்தன் காலஞ்சென்ற ஜெயபாலன் ஆகியோரின் மைத்துனரும் துரைராசா, யோகேஸ்வரி, சற்குணம், குலசிங்கம், சுதர்சினி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப.11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று க்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர். 077 840 0828**

**71/2, பத்திரகாளி கோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.** (cs4087)(17.8)

## மரண அறிவித்தல்



### திருமதி அன்னபூரணி சத்தியநாதன்


திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் நல்லூர், மூத்தவிநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னபூரணி சத்தியநாதன் நேற்று (28.02.2018) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - சின்னம்மா த்ம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மகாதேவன்.- மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சத்தியநாதனின் பாசமிகு துணைவியும் சர்வநாயகியின் (வாணி) அருமைத் தாயாரும் கணேசலிங்கம், திலகவதி, காலஞ்சென்ற மகாலட்சுமி மற்றும் கமலாம்பிகை, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் சத்தியபாமா,காலஞ்சென்ற சந்திரபவாணி மற்றும் சந்திரலேகா, சர்வேஸ்வரன், சர்வேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் புவனேஸ்வரி, கமலேஸ்வரி, மகேஸ்வரன், சகாதேவன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2018) வியாழக்கிழமை திருநெல்வேலியிலுள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**22/3, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி.**
**077 865 8734** (CS 568/15/17) **தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்



## கலாநிதி வல்லிபுரம் ஆறுமுகம்

(வாழ்நாள் பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்)

தாமரைக்குளத்தடி, துன்னாலையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கு, பழைய தபாற் கந்தோர் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி வல்லிபுரம் ஆறுமுகம் நேற்று (28.02.2018) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - றோசம்மா தம்பதிரியரின் அன்பு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான லட்சுமிப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியை), காராளசிங்கம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) மற்றும் தெய்வசோதி, காலஞ்சென்ற திரவியம் மற்றும் தெய்வநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வநாதனின் (ஓய்வுபெற்ற IT Manager, Holcim Lanka Ltd.) அன்பு மைத்துனரும், Dr.பார்த்திபன் (வைத்தியர் - யாழ். போதனா வைத்தியசாலை), வாசவன் (UN - Habitat மாவட்ட முகாமையாளர், நுவரெலியா), வாணி (விரிவுரையாளர் - யாழ். உயர்தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுமதி, மாலதி, புஸ்பராஜா (சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனும், காருண்யா (யா /வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஜீவினி (இந்து மகளிர், கல்லூரி, கொழும்பு - 07) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2018) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

தகவல்: குடும்பத்தினர்.
Dr.ஆ.பார்த்தீபன் (மகன்)

**021 223 0854** (cs.14338)(13,17)

## மரண அறிவித்தல்கள்

பிறப்பு 13 . 12 . 1991



இறப்பு 27 . 02 . 2018

## இமானுவேல் சாமுவேல் (வெஸ்லி)

*(இறுதி வருட மருத்துவ பீட மாணவன் - யாழ். பல்கலைக்கழகம்)*

யாழ். நெல்லியடிகரவெட்டியைப்பிறப்பிடமாகவும்வவுனியா உக்குளாங்குளத்தைவசிப்பிடமாகவும் கொண்ட இமானுவேல் சாமுவேல் (வெஸ்லி) (யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவன்) நேற்றுமுன்தினம் (27.02.2018) செவ்வாய்க்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் இமானுவேல் - கெலன் லோஜினா தம்பதியரின் அன்பு மகனும், கிறிஸ்ரி ஜெயசீலன் (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகைம் விஞ்ஞானபீடம்) அவர்களின் அன்புத் தம்பியும், ஜெஸ்ரிகா, ஜெனா, கவிஸ்ரா, நிலுக்ஷி, டிலக்ஷி, ஜெனிவர், ஜொய்சன், ஸ்ரீபனி, லேஜினா, வலரின், அல்வின் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தர்மிலா (விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்) அவர்களது அன்பு மைத்துனரும், அக்ஷனா அவர்களின் சிறிய தகப்பனும், பொலினா (பருத்தித்துறை), ஜொய்சி (பிரான்ஸ்), கொன்சி (பிரான்ஸ்), ஜெஸ்மின் (ஆசிரியை - வவுனியா இந்துக்கல்லூரி), வினி (லண்டன்), எசேக்கியேல் (பருத்தித்துறை), யோவேல் (வவுனியா), காலஞ்சென்றவர்களான டானியல், ரதினா, நதானியேல், தயாளன் ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2018) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்திலிருந்து பிற்பகல் 2.30 மணியளவில் வுவுனியா தூய சூசையப்பர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நெளுக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


உக்குளாங்குளம்,
வவுனியா.

தகவல்: குடும்பத்தினர்.
(கிறிஸ்ரி ஜெயசீலன்)

(279(13,17)

**077 995 5666**

பிறப்பு 06 . 11 . 1919



இறப்பு 28 . 02 . 2018

## வைத்திலிங்கம் சிவசிதம்பரம்

காரைநகர், பொன்னுடையார்வளவு, தங்கோடையைப் பிறப்பிடமாகவும், இல.99, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சிவசிதம்பரம் நேற்று (28.02.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், தையல்நாயகி, வேலுப்பிள்ளை, அன்னபாக்கியம், சிவபாக்கியம், சிவயோகம், சிவகுமாரி, இராமச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் தவராசா, செல்வராணி, பேரம்பலம், சுந்தரலிங்கம், மனோகரி ஆகியோரின் அன்பு மாமனும், நாகராசா (லண்டன்), தர்மவர்த்தினி (லண்டன்), தர்மவாகினி (கனடா), செல்வரஞ்சினி, சிவரூபா (கனடா), சிறீதரன் (அமெரிக்கா), சிவதர்ஷினி (லண்டன்), பிரிய தர்ஷினி (கனடா), சுதாகரன் (SPARKWINN RESEARCH), சர்மிளா (கனடா), சங்கீதா, வசீகரன்(Commercial Bank), ஆகியோரின் அன்புப் பேரனும், ராம், அபிராமி, லாவண்யா, ரிஷிகேஷன், அஸ்வினி, ஆர்த்தி, அருண், அகிலன், மித்ரா, கிஷான், சச்சின், சேயோண், அஜே, பவிஷான் ஆகியோரின் அன்புப்பூட்டனும், காலஞ்சென்ற விசாலாட்சியின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு பிற்பகல் 4.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகன் - சி.இராமச்சந்திரன்

(cs.14338)(13,17) **077 391 0667**

பிறப்பு 22 . 02 . 1932



இறப்பு 27 . 02 . 2018

## திருமதி புவனேஸ்வரி சொக்கலிங்கம்

புங்குதீவு 11 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.185/ 6 பாடசாலை வீதி, பண்டாரிக்குளம், வவுனியாவை தற்கலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி சொக்கலிங்கம் 27.02.2018 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - செல்லமீமா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி சொக்கலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பகிரதன் மற்றும் பார்த்தீபன் (கனடா), லலிதாம்பாள் (வவுனியா), தயாபரன் (கனடா), காலஞ்சென்றவர்களான பத்மினி, பிரதீபன் ஆகியோரின் அன்புத் தாயும், துஷ்யந்தினி (லண்டன்) அவர்களின் பெரிய தாயும், தியாகேஸ்வரன், ராஜி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற காமாட்சி மற்றும் கனகலிங்கம், தியாகராஜா, பரமலிங்கம் , காலஞ்சென்ற பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் ஞானம்மா, காலநிதி, அகிலேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சபாரெத்தினம், பாலாமணி, செல்லம்மா, சுப்பிரமணியம், சோபனம் ஆகியோரின் மைத்துனியும், சோமிகா (பெல்ஜியம்) , தேனுஷா (முகாமைத்துவ பீடம் - யாழ்.பல்கலைக்கழகம்), லோஜகா (கனடா), உஷானிகா (கனடா), ஜசிகரன் (கடனா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பண்டாரிக்குளம் வவுனியா இல்லத்தில் இன்று (01.03.2018) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.185/6, பாடசாலை வீதி,
பண்டாரிக்குளம், வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.

(278(13,17)

**076 341 8699, 077 143 3275**

## பேஸ்புக் கவிதை

# பாட்டி இல்லாத வீடு

பாட்டி... பாக்கு இடிக்கும்
சத்தமே எனக்கு
அதிகாலை அலாரம்
அப்பா, அடிக்க
வரும்போதெல்லாம்....
பாட்டியே எனக்கு,
பாதுகாப்பு வளையம்!

கண்ணாடி விளக்கோடு....
காலைவரை
காவல் செய்வாள்
கன்றையும் மாட்டையும்!
ஆடு கோழி கூட....
அவள் சொல்படிதான்
நடக்கும்!
பள்ளிக்கே போகாதவள்
அறிந்த
பாஷைகளோ பல!

கால்மேல் கால் போட்டு
யார் இருக்கக்
கண்டாலும்....
நினைத்துக் கொள்வேன்,
“அன்போடு கண்டிக்க
அவர்களுக்கு ஒரு
பாட்டி இல்லையோ?”
என்று.

திருநீறு பூசி, உச்சி
முகர்ந்து
சிறுபிள்ளையாய்
கையசைக்கும் பாட்டி,
தாத்தா சாவிற்குப்பின்
நான் ஊருக்குக் கிளம்பும்
வேளைகளில்,
எதிரே வராததில்
இருக்கிறது அவளது
அறியாமையும்,
என் மேலுள்ள
அளவற்ற அக்கறையும்!

பாட்டியின் ஆசையே....
என் திருமணத்தைப்
பார்ப்பதும்,
பின் இறப்பதும் தான்!
காரணம் கேட்டால்,
செத்தால்தான்
உனக்குப் புள்ளையாகப்
பொறக்க முடியும்
என்பாள் அந்த மகராசி!

கால ஓட்டத்தில்
இல்லாமல் போனது....
மண்பானை சமையல்,
மக்காச்சோளக்கூழ்,
மரக்குதிர் மட்டுமல்ல!
தன் கைவைத்தியத்தால்
பல நோய்களை
எங்கள் வீட்டுப் பக்கமே
வராமல் செய்த
என் பாட்டியும்தான்!

பாட்டி கொடுத்த கசாயம்
அன்று கசந்தது
ஏனோ இன்று
இனிக்கிறது!
இப்போதெல்லாம்
அடிக்க ஓங்குகின்ற அப்பா
அழுதே விடுகின்றார்
தடுக்க வராத
தாயை நினைத்து.....

“தாத்தா பாட்டி இல்லாத
வீடு”
இக்காலப் பெற்றோருக்கு
வேண்டுமானால்
சுதந்திரமாய் இருக்கும்!
ஒருபோதும்....
பேரப்பிள்ளைகளுக்கு
சொர்க்கமாய் இருக்காது!

# மற்றொரு படத்தில் நடிக்கிறார் ரஜினி






‘காலா’, ‘2.0’ படங்களைத் தொடர்ந்து ரஜினி நடிக்கப்போகும் அடுத்த படம் பற்றிய அதிகாரபூர்வ அறிவிப்பை சன் பிக்சர்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

ரஜினி நடிக்கும் ‘காலா’ படத்தின் படப்பிடிப்பு முடிந்திருக்கும் நிலையில் இந்தப் படம் எதிர்வரும் ஏப்ரல் 27ஆம் வெளியாகுமென்று தயாரிப்பு நிர்வாகத்திட மிருந்து அறிவிப்பு வந்துள்ளது. மேலும், ஷங்கர் இயக்கியிருக்கும் ‘2.0’ படமும் இந்த வருட இறுதிக்குள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் மற்றொரு படத்தில் ரஜினி நடிக்கப்போகிறார் என்று சன் பிக்சர்ஸ் நிறுவனத்திடமிருந்து அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது.

## வேறுபட்ட கனவுகள்




## சிரி

ஆசிரியர்; நீ வாழ்க்கையில என்னவாக ஆசைப்படுறாய்..

மாணவன்: நான் அப்பாவப்போல டாக்டர் ஆக ஆசைப்படுறன்.

ஆசிரியர்: உங்க அப்பா டாக்டரா...?

மாணவன் :இல்லை. ஆசைப்பட்டாராம் ஆனால் ஆக முடியலையாம்...




## twitter

Hasan Kalifa @smhrkalifa

பிறரிடம் தன்னை தாழ்த்திக் கொள்பவர்கள் உயருகிறார்கள்,பிறரை தாழ்த்தியே வாழ வேண்டும் என்பவர்கள் தடுமாறுகிறார்கள்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** இடையூறு செய்தவர்களை அடையாளம் கண்டு விலகுவீர்கள். புதிய முயற்சியில் ஓரளவு நன்மை உண்டாகும்.தொழில், வியாபாரம் தாமத கதியில் இருக்கும்.

**இடபம்:**மனதில் கூடுதல் தைரியம் ஏற்படும். எதிர்ப்புக்களை சாதுர்யமாக வெல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி சிறப்பாக நிறைவேறும்.

**மிதுனம்:** முக்கிய பணி நிறைவேற தாமதம் ஆகலாம். நண்பரின்ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரம் செழிக்க நவீன மாற்றம் செய்வீர்கள்.

**கடகம்:** உங்களின் தனித்திறமையை நண்பர் பாராட்டுவர். முயற்சிக்கு உரிய பலன் முழுமையாக வந்து சேரும். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும்.

**சிங்கம்:** பணிகளில் கூடுதல் கவனமுடன் செலுத்துவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற புதிய வாய்ப்பு உருவாகும். சீரான வருமானம் கிடைக்கும்.

**கன்னி:** பேச்சு, செயலில் நேர்மை வெளிப்படும். குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும்.

**துலாம்:** இடையூறு விலகி நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் புதியவாய்ப்பால் வளர்ச்சி மேலோங்கும். சேமிக்கும் விதத்தில் வருமாணம் கிடைக்கும்.

**விருச்சிகம்:**சொந்த விஷயம் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். கூடுதல் உழைப்பின் மூலம் தொழிலில் அதிக ஆதாயம் காண்பீர்கள். புதிய இனங்களில் திடீர் செலவு ஏற்படும்.

**தனுசு:** உறவினரின் பேசசால் சிரமத்திற்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பினால் பணவரவு சீராகும். தாராள அளவில் பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** ஆன்மிக சிந்தனையுடன் செயல்படுவீர்கள். தாயின் அன்பும், ஆசியும் வளர்ச்சிக்கு துணைநிற்கும். தொ்ழில், வியாபாரம் செழிக்கும். உபரி வருமானம் கிடைக்கும்.

**கும்பம்:**பொது விஷயத்தில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமம் விலகும். லாபம் சீராகும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கி தருவீர்கள்.

**மீனம்:** போட்டி, பந்தயத்தில் ஈடுபட வேண்டாம். தொழிலில் உள்ள குளறுபடியை சரிசெய்வதால ஓரளவு வளர்ச்சி கிடைக்கும்.

# சுடோக்கு

என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | 6 | | 7 | | 8 | |
| 3 | | | | | | | | 2 |
| | | 4 | | | | 7 | | |
| 9 | | | 7 | | 2 | | | 5 |
| | 4 | | | 1 | | | 3 | |
| 1 | | | 3 | | 6 | | | 8 |
| | | 9 | | | | 4 | | |
| 8 | | | | | | | | 9 |
| | 3 | | 9 | | 1 | | 5 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | 7 | 9 | 6 | 4 | 3 | 5 | 1 |
| 4 | 9 | 1 | 2 | 3 | 5 | 7 | 6 | 8 |
| 3 | 5 | 6 | 8 | 1 | 7 | 2 | 4 | 9 |
| 9 | 6 | 2 | 5 | 4 | 8 | 1 | 7 | 3 |
| 5 | 7 | 3 | 1 | 9 | 2 | 4 | 8 | 6 |
| 1 | 4 | 8 | 6 | 7 | 3 | 9 | 2 | 5 |
| 8 | 1 | 4 | 7 | 5 | 9 | 6 | 3 | 2 |
| 6 | 3 | 5 | 4 | 2 | 1 | 8 | 9 | 7 |
| 7 | 2 | 9 | 3 | 8 | 6 | 5 | 1 | 4 |

நேற்றைய விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.



# நேர்மை

ஒரு மனிதன் தனக்குக் கிடைக்கும் அதிஷ்டத்தை எப்படிப் பயன்படுத்துகிறான் என்று அறிய மன்னனுக்கு ஆவல் ஏற்பட்டது. அதனைச் சோதிக்க நினைத்து ஒருநாள் இரண்டு ரொட்டித்துண்டுகளை வரவழைத்து விலையுயர்ந்த வைரக் கற்களை ஒன்றினுள் பதுக்கி வைத்தான்.

பின்னர் இரண்டு ரொட்டித்துண்டுகளையும் பணியாளன் ஒருவனிடம் கொடுத்து "கவனமாகக் கேள். தகுதியுள்ள கண்ணியமான மனிதன் ஒருவனுக்கு இந்த கனமான ரொட்டியைக் கொடு. மற்ற சாதாரண ரொட்டியை ஒரு சாதாரண பிச்சைக் காரனுக்குக் கொடு" என்று சொன்னான். உடனே காவலன் அரண் மனையை விட்டு வெளியேறினான். நீண்ட மேலங்கி அணிந்து அடர்ந்த தாடியுடன் சாமியார் போல் தோற்றமளித்த ஒரு மனிதனுக்கு கனமான ரொட்டியைக் கொடுத்தான். பின்னர் மற்றொன்றை ஒரு பிச்சைக்காரனுக்குக் கொடுத்தான்.

பணியாளின் இந்த செயற்பாடுகளையெல்லாம் மன்னன் தனது அரண்மனை மேல் மாடத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தான்.

இப்போது சாமியார் உண்பதற்காக உற்றுப்பார்த்தார். "இது சரியாக பதப்படுத்தப்படவில்லை போலும். கனமாக உள்ளதே!" என்று எண்ணிதன் அருகில்வந்துகொண்டிருந்த பிச்சைக்காரனை அழைத்து "எனக்கு அவ்வளவு பசியில்லை. ஆதலால் எனது இந்த ரொட்டியை நீ எடுத்துக் கொள். உன்னுடையதை விட இது சற்று ஊதி பெரிதாகவும் உள்ளது" என்றார். பிச்சைக்காரனும் எதுவும் யோசியாது சாமியார் கொடுத்த ரொட்டியைப் பெற்றுக் கொண்டான். உடனே சாமியார் உனது ரொட்டியை என்னிடம் கொடுத்து விடு. பின்னர் எனக்கு பசி எடுக்கும்போது அதனை நான் சாப்பிட்டுக் கொள்கிறேன்" என்றார். பிச்சைக்காரனும் தனது ரொட்டியை சாமியாரிடம் கொடுத்தான்.

இந்த ரொட்டிகள் பரிமாற்பபட்ட செயலை மாளிகையின் மேல் மாடத்திலிருந்து கவனித்துக்கொண்டிருந்த மன்னன் "ஆகா! என்னே கடவுளின் கருணை! ஒரு தவயோகிக்கு செல்வம் தேவையில்லையாதலால் வைரக் கற்கள் உள்ளடங்கிய ரொட்டி அவரிடம் தங்காமல் அந்த ஏழையிடம் சென்று விட்டது" என்று நினைத்தான்.

உடனே அந்தப் பிச்சைக்காரனையும் சாமியாரையும் பின் தொடருமாறு தன் பணியாள்களுக்குக் கட்டளையிட்டான்.

அன்று மாலை அவ்விருவரையும் பற்றிய தகவல்கள் மன்னனுக்குக் கிடைத்தன.

சாமியார் போலத் தோற்றமளித்தவன் தன் வீட்டுக்குச் சென்றான். தான் அணிந்திருந்த பொய்த்தாடியையும், மேலங்கியையும் எடுத்து விட்டு ஆசை தீர ரொட்டியை உண்டான். பின்னர் முன்பு போல தாடியை ஒட்ட வைத்துக்கொண்டு சாமியார் வேடத்தில் பிச்சை எடுக்க கிளம்பி விட்டான். இந்தச் செய்தியே சாமியார் பற்றி மன்னனுக்குக் கிடைத்ததாகும்.

தன் வீட்டுக்குச் சென்ற பிச்சைக்காரன் தன் மனைவியுடன் சேர்ந்து ரொட்டியை உண்ணத் தொடங்கினான். அப்போது அதற்குள் வைரக் கற்கள் மின்னுவதைக் கண்டான். மகிழ்ச்சியில் துள்ளிய அவன் மனைவி அவற்றைக் கொண்டு தாம் பணக்காரனாகி விடலாம் எனக் கூறி மகிழ்ந்த போது பிச்சைக்காரன் அதனை மறுத்து "இந்த வைரக்கற்களைக்கொண்டு கடவுள் என் மனசாட்சியை சோதிக்க விரும்புகிறார் என்றே நினைக்கிறேன்" என்று கூறினான். மேலும் "இந்த ரொட்டியைக் கொடுத்த அரச பணியாளரிடம் இதைப் பற்றிய உண்மையைத் தெரிவித்துவிட வேண்டும். இவ்வாறு இரத்தினக் கற்கள் உள்ளிருப்பது அவருக்குத் தெரியாதுஎன்றால்அவருடையபொருளை அவரிடமே சேர்த்துவிட வேண்டும். ஆனால் தெரிந்தே இவ்வாறு கொடுத்தார் என்றால் இவை அந்தச் சாமியாரைச் சேர வேண்டும். அதுதான் நியாயம்" என்று கூறினான்.

பிச்சைக்காரன் பற்றிய இந்த செய்தியை அறிந்த அரசன் அவனது நேர்மையையும் உயர்ந்த உள்ளத்தையும் கண்டு வியந்தான்.

அவனை அரண்மனைக்கு அழைப்பித்து அந்த வைரக் கற்களை அவனுக்கே கொடுத்து மேலும் பல பரிசுகளையும் வழங்கினான். கடவுளின் அருளால் வைரக் கற்கள் ஒருபோலிச் சாமியாரிடம் சிக்காமல் நேர்மையான ஒரு பிச்சைக் காரரனை அடைந்ததை எண்ணி மன்னன் மகிழ்ந்தான்.




# மருந்தாகும் மலர்கள்



**செம்பருத்திப்பூ**
நான்கு செம்பருத்திப் பூக்களைச் சுத்தம் செய்து சிறிதளவு தண்ணீரில் நன்றாகக் காய்ச்சி ஆறிய பின்னர் அதை வடிகட்டி காய்ச்சிய பசும்பாலில் கலந்து தேவையான சக்கரை சேர்த்து காலை மாலை என இருவேளை பருகி வர இதயம் வலுப் பெறும்.

**வேப்பம் பூ**
வேப்பம் பூவை வறுத்து பொடி செய்து பருப்பு ரசத்துடன் சேர்த்துச் சாப்பிட்டால் வாந்தி, ஏப்பம் நின்று போகும். குடற்கிருமிகள் அழிந்துபோகும்.





**வெங்காயப்பூ**
வெங்காயப்பூக்களை நீரில் போட்டு அந்தத் தண்ணீரை காலை மாலை குடித்துவர பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் நீங்கும்.


**ஆவாரம் பூ**
ஆவாரம் பூவைப் பச்சைப்பயறுடன் சேர்த்து அரைத்து உடலில் தேய்த்து குளித்து வந்தால் தோல்கடிகள் தீரும்.





**தும்பைப் பூ**
தும்பைப் பூவை நல்லெண்ணெய் விட்டு காய்ச்சி தலையில் வைத்து முழுகி வந்தால் தலைப்பாரம் (தடிமன்)குறையும்.


**மாம்பூ**
மாம்பூவைக் காயவைத்து பொடி செய்து தயிரில் கலந்து சாப்பிட்டால் மலத்துடன் குருதி வெளியேறல் நிற்கும்.





**தூதுவளைப் பூ**
தூதுவளைப் பூவைப் பாலுடன் சேர்த்து காய்ச்சி குடித்து வந்தால் ஆஸ்மா மட்டுப்படும்.

**வில்வம் பூ**
வில்வம் பூ இதழ்களை வதக்கி இலேசான சூட்டுடன் கண் இமைகளில் ஒற்றடம் கொடுத்தால் கண் வலி, கண் சிவப்பு, கண் அரிப்பு போன்றவை குறையும்.





**வாகைப்பூ**
வாகைப்பூவை அரைத்துத் தோலில் ஏற்படும் கட்டியின் மேல் வைத்துக் கட்டினால் கட்டி உடையும்.

**மருதாணிப்பூ**
மருதாணிப்பூக்களைத் தலையணைக்கு அடியில் வைத்தால் நல்ல தூக்கம் வரும். அத்துடன் உடல்வெப்பம் தணியும்.



# எமது கண்கள்



ஒரு பொருளின் முப்பரிமாண அமைப்பையும் ஒரே நேரத்தில் பார்க்கக் கூடிய ஆற்றலுடையவை எமது கண்கள். கட்குழிகளினுள் மேல் சரிவுத் தசை கீழ் சரிவுத் தசை, பக்க நேர்த் தசை எனப்படும் தசை நார்களின் மூலம் கண்கள் பொருத்தப்பட்டுள்ளன. கண்களில் பார்வைக்குரிய பகுதி விழித்திரை ஆகும். இங்கு மஞ்சட் புள்ளி என்னும் பகுதியில் கோல்க் கலங்கள், கூம்புக் கலங்கள் என்ற இரு வகையான உயிர்ப்பான கலங்கள் காணப்படுகின்றன. இவற்றில் கோல்க்கலங்கள் இரவுப் பார்வைக்கும், கூம்புக்கலங்கள் பகல் பார்வைக்கும் உதவுகின்றன. ஆந்தையின் இராப் பார்வைக்கு அதன் கண்களில் அதிகமாகக் காணப்படும் கோல்கலங்களே உதவுகின்றன.

எமது விழித்திரைக்கு கண்ணின் வில்லையினூடாக வரும் ஒளிர்க்கதிர்கள் பொருளின் தலை கீழான விம்பத்தைத் தோற்றுவிக்கின்றன. கண்களிலுள்ள கண் வில்லையானது குவிவு வில்லையின் அமைப்பையும் தொழிலையும் ஒத்ததாகும். தூரப் பொருள்களைப் பார்க்கும் போது குவியத் தூரத்தை அதிகரித்தும் கிட்ட உள்ள பொருள்களைப் பார்க்கும் போது குவியத்தூரத்தைக் குறைத்தும் பார்வைக்கு உதவுகிறது. விழித்திரையில் தலை கீழாகத் தோற்றுவிக்கப்படும் விம்பமானது உடனடியாக முளைக்கு பார்வைக்குரிய நரம்புகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு விம்பம் நேராக்கப்பட்டு நாம் தெளிவாகப் பார்க்க உதவுகின்றது. எமது கண்களில் ஒளியை உட்செல்ல விடும் பகுதி விழிவெண்படலம் ஆகும். கண் தானம் செய்யும் போது இந்தப் பகுதியே மாற்றீடு செய்யப்படுகிறது. இதைவிட சிலரது கண்களின் மையப்பகுதியின் நிறம் கறுப்பு நிறமாகவும் வேறு சிலரின் நீலம் கபிலம் எனவும் மாறுபடுகிறது. இவ்வாறு மாறுபட்ட நிறங்களைக் கொண்டிருப்பது 'கதிராளி" ஆகும். இது கண்களினுள் செல்லும் ஒளிச்செறிவின் அளவைக் கட்டுப்படுத்துகிறது. எம்மில் சிலரிடையே மாறுகண் (வாக்குக்கண்)காணப்படுகிறது. இது குழந்தை பிறக்கும் போது சிலவேளைகளில் ஆயுதங்கள் உபயோகிப்பதாலோ அல்லது கட்டிலில் இருந்து குழந்தை கீழே விழ நேரிடுவதாலே கட்குழியில் அமைந்துள்ள .தசை நார்கள் இழுபடுவதால் இத்தகைய மாறுகண் ஏற்படுகிறது.

### பிரச்சினைக்குரிய...

கள் முட்டை ரொட்டி கோரியுள்ளனர். அதனுடன் தொட்டுச் சாப்பிடுவதற்கு ஆணம் (குழம்பு) கேட்டுள்ளனர். குழம்பில் வெள்ளை நிறத்திலான சிறிய கட்டி காணப்பட்டுள்ளது. அந்தக் கட்டி இனவிருத்தியைக் கட்டுப்படுத்தும் மருந்து என்று சிங்கள இளைஞர்கள் தெரிவித்துள்ளனர். குழம்பை இறுக வைப்பதற்கு கோதுமை மா கலக்கப்படுகின்றது என்றும், அது கரையாமல் இருந்தமையே வெள்ளை நிறக் கட்டிக்கு காரணம் என்று ஹோட்டல் உரிமையாளர் குறிப்பிட்டார். சிங்கள இளைஞர்கள் அதனை ஏற்க மறுத்து வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். பின்னர் அது கைகலப்பாக மாறியது.

இனவிருத்தியைக் கட்டுப்படுத்தும் மருந்து கலக்கப்பட்டது என்று கூறப்படும் உணவை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ற-5.7)

### காணாமல்...

யும் என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கும், அரச தலைவர் மைத்திரிபாலவுக்கும் இடையில் அரச தலைவர் செயலகத்தில் கடந்த டிசெம்பர் மாதம் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோர் விபரத்தை திரட்ட அரச தலைவர் உத்தரவிட்டிருந்தார்.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு, நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் காணாமல் போனோர் தொடர்பான விபரத்தை கிராம அலுவலர்கள் ஊடாகத் திரட்டி வருகின்றது.

இதுவரை 13 ஆயிரம் விண்ணப்பங்கள் அமைச்சுக்கு கிடைத்துள்ளது. உள்ளூராட்சித் தேர்தல் காரணமாக அமைச்சின் இந்தப் பணிகளில் தாமதம் ஏற்பட்டிருந்தது. இன்னமும் இரண்டு மாதங்களில் இந்தத் தகவல் சேகரிப்பு நடவடிக்கை முழுமையடையும் என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, போரில் உயிரிழந்தவர்களின் விவரங்களையும் தேசிய ஒருமைப்பாடு மற்றும்நல்லிணக்க அமைச்சு திரட்டிவருகின்றது என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தவறாகச் செய்தி வெளியிட்டுள்ளது என்று அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். (ற-5)


## விற்பனைக்கு

2012ஆம் ஆண்டு TATA SUPER AC வெள்ளை நிறம் விற்பனைக்கு உண்டு. (அலுமினிய Full Body)

தொடர்பு: நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
077 766 7175

(CS/14342)(10)

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.

- ✓ Technical Officer (Minimum 3 yrs experience)
- ✓ Technical Assistant (Minimum 1yr experience)

தொடர்புகளுக்கு: 075 9183 947
royalbuilders17@hotmail.com

(CS/14344)(10)








## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் J/123 பிரிவில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திரு. மாசிலாமணி குணசேகரம்** அவர்களின் அன்புத் தாய்

### திருமதி மாசிலாமணி கண்மணி

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்**

(IN 6020)(10)

## துயர் பகிர்வு



கடந்த 23.02. 2018 வெள்ளிக்கிழமை இறைபதமெய்திய எமது உறவான

### திருமதி தவமணிதேவி ஜெகதீஸ்வரன்

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மாவை உறவுகள்**

(cs.14318)(13.17)

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு பேரின்பவேலுப்பிள்ளை



சிவன் கோயிலடி, வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் இல. 12, 2 ஆம் பண்ணை, கனகபுரம், கிளிநொச்சியைப் வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு பேரின்பவேலுப்பிள்ளை நேற்று முன்தினம் (27.02.2018) செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - முத்துப்பிள்ளை தம்பதியரின் அருந்தவப் புதல்வனும், காலஞ்சென்ற சாந்தலட்சுமி மற்றும் கமலாதேவி ஆகியோரின் பாசமிகு கணவரும், தவச்செல்வன் (கனடா), அருட்செல்வன் (பிரான்ஸ்), குகசெல்வன் (குகா - கரைச்சி பிரதேசசபை உத்தியோகத்தர்), தவலோஜினி (கனடா), புவனலோஜினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பரராசசிங்கம் தெய்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நாகமுத்து சரசிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் தெய்வானைப்பிள்ளை, பழனி, அன்னம்மா ஆகியோரின் மதிப்பிற்குரிய மருமகனும், கலைஞர் நா.புவனசுந்தரம், வேதாந்தசிவம், பரிபூரணதேவி, காலஞ்சென்ற கருணாநிதி, பத்மாதேவி, கந்தசாமி, வாமதேவன், மகாதேவன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், இராசலட்சுமி, புனிதவதி, சரோஜா, தங்கவேல், இன்பராணி, இன்பவதனி, தவராசா, லலிதா, கோமதி, சுதாகினி, சிவசொரூபன் ஆகியோரின் பாசமிகு மாமனும், திசானா, தினேக்கா, வானுஜன், மயூரிக்கா, கிருத்திகா, சயந்தன், பகிஷன், றுவானி, புவனஜா, பிரவின், தினேஸ், சதிக்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2018) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கனகபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பே.தவச்செல்வன்** - 0015 1427 18455
**பே.அருட்செல்வன்** - 0148 308170
**பே.குகசெல்வன்** - 0773792572
**பே.தவலோஜினி . சி.புவனலோஜினி**

(akv 389)(13.17)

தகவல்: **குடும்பத்தினர்**

## ஈராண்டு நினைவு நாள்



### திருமதி நேசமணி கிறிஸ்த்ததாஸ்

| | | | |
|---|---|---|---|
| இடரிலும் | தளராது | இன்னல்கள் | நோக்காது |
| திடமுடன் | வாழ்வினில் | திகழ்ந்திட்ட | அம்மாவே! |
| புடமிட்ட | தங்கமென | பிள்ளைகள் | எம் வாழ்வை |
| சுடராயிருந்து | இருளகற்றி | சரித்திரம் | ஆனவளே! |

'தங்கமால்'
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

குடும்பத்தினர்.
077 197 3129

(ACH . 310)(13.17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
30 . 06 . 1935



மறைவு
12 . 03 . 2017

### அமரர் கணபதிப்பிள்ளை விநாயகமூர்த்தி

(இளைப்பாறிய ஆசிரியர் -
யாழ். புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலயம்)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழி காட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மை விட்டு பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதான வீதி, அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(cs . 14317) 13.17)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 21.11.1930
உதிர்வு 16.03.2014

அமரர்

### இராசக்கோன் குழந்தைவேலு

(ஓய்வு பெற்ற அதிபர்.
யா /மட்டுவில் கமலாசனி வித்தியாலம்)

எங்கள் அன்புத் தந்தையே! கற்பவை கற்று கற்றாங்கு ஒழுகி
உத்தமனாக ஊர்போற்ற வாழ்ந்து
இறைவனடி சேர்ந்த எமதருமை ஐயாவே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணம்.** **குடும்பத்தினர்.**

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1953.09.25
மறைவு 2009.03.11

அமரர்

### இராசரத்தினம் யசோதரன்

(தவில் வித்துவான்)

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தில் அரவணைத்து வழிகாட்டிய எங்கள் அப்பாவே
உங்கள் நினைவுகளில் மிதக்கின்றோம் அப்பா!




**இல. 64, A.V வீதி, அரியாலை.** **குடும்பத்தினர்.**

# தின வணிகம்

## சந்தைப் பரம்பலில் அவதானம் கொள்ள வேண்டியவை

பங்குச் சந்தையில் நுழைந்த ஒவ்வொருவரும் முதலில் ஈர்க்கப்படுவது தின வணிகத்தில் தான். குறிப்பாக எந்த அனுபவமும் இல்லாமல், குழுமங்களைப் பற்றிய அடிப்படை அறிவு இல்லாதவர்கள் கூட, இதில் மிகுந்த உற்சாகமாக ஈடுபடுவார்கள். சிலருக்கு முதல் சில தின வணிகங்களில் இலாபம் கூட கிடைக்கலாம்.
இவர்கள் நினைவில் கொள்ள வேண்டிய ஒரு விடயம் உண்டு. குறிப்பாக, 'வாரன் பப்பெட்' என்பவர் பங்கு சந்தை முதலீட்டை மட்டுமே மேற்கொண்டு உலக கோடீஸ்வரர்களில் ஒருவரானவர். ஆம், 1960 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் முதலீடு செய்ய அவரிடம் தொகை இருந்தபோதிலும், சரியான விலையில் மட்டுமே முதலீடு செய்ய வேண்டுமென்ற எண்ண மேலீட்டோடு ஏறத்தாழ 10 வருடங்கள் காத்திருந்தார்.



பங்கு தரகு நிறுவனங்களில் வணிகம் செய்யாமல், அலுவலகங்களிலிருந்தோ அல்லது வெளியிலிருந்தோ (On the go) 'தின வணிகம்' செய்பவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சில முக்கிய விதிகள் குறித்து இந்தப் பகுதியில் நோக்குவோம்.

**தங்க விதி** (The Golden Rule)
பங்குச் சந்தையில் இலாபமீட்ட தின வணிகம் மட்டுமே வழியல்ல. வேறு பல வழிகளும் உள்ளன. பங்குச் சந்தையின் நிலைகளை தொடர்ந்து பார்க்க இயலாத பட்சத்தில் தின வணிகம் செய்வதைத் தவிர்ப்பதே நல்லதாகும்.
பொதுவாக தங்க விதி என்பது நடைமுறை வாழ்வில் கடைப்பிடிக்க முடியாத ஒன்றாகும். எனவே பிற விதிகள் குறித்துப் பார்ப்போம்.

- அதிகாலையில் அலுவலகத்துக்குச் செல்லும் முன்பாக அன்றைய தின வணிகத்துக்கான தீர்மானத்தை மிகத் தெளிவாக திட்டமிட்டுக்கொள்ள வேண்டும். உதாரணமாக, "இன்றைக்கு இலாபம் என்று வந்தால் இவ்வளவு, நஷ்டம் என்று வந்தால் இவ்வளவு எனவும், நாளின் நடுவில் இன்னும் சிறிது உயர்த்தி விற்கலாம்." என்ற எண்ண மேலீட்டினை கொண்டிருக்கக்கூடாது. அதேபோன்று, விலை உயர்ந்துவிடும் நஷ்டத்தை குறைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணமும் கூடாது.
- அதிகாலையில் தின வணிகத்துக்குரிய திட்டங்களை மேற்கொள்ளும் போது, இலக்கு விலை (Target Price) இவ்வளவு என நிர்ணயிக்கயிக்கும்போது, அதே விலைக்கே உங்களின் விலையும் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. உதாரணமாக, காலையில் 'டெக்னிகல் சார்ட்' வைத்து பார்க்கும்போது ஐடியா செல்லுலார் இன் முந்தைய விலை 83.55 என்றும், இன்றைக்கு அதன் இலக்கு விலை 88 எனவும் தோன்றினால், சந்தையின் ஆரம்பத்தில் அதனை நீங்கள் 83.85 என்ற விலைக்கு வாங்கினால் இலக்கு விலையான 88 என்ற விலைக்கு பதிவுகளை மேற்கொள்ளாது, 87.50 மற்றும் 87.75 என்ற விலை கேள்விக்கு இடைப்பட்ட விதமாக செயற்படுவது சிறந்தது.

நீங்கள் பங்குத் தரகு நிறுவனத்தில் இருந்து வணிகம் செய்தால், இறுதி நேரத்தில் 'பதிவுகளை' (Orders) மாற்ற முடியும். அவ்வாறு இயலாத பட்சத்தில் வாங்கியவுடன் உங்கள் இலக்கு விலையை போட்டுவிடுவது நல்லது. உங்கள் கேள்விக்கான 'பதிவு விலை வரிசையில்' (Order Queue) முதலில் (Priority) இருக்கும்.
அதேபோன்று குறுகிய கேள்வி நிலை (short Positions) இருக்கும் போது, அதே இலக்கு விலைக்கு ஏற்ப செயலாற்ற வேண்டும் என்பதில்லை. அதற்கு முந்தைய நிலையிலும் அதனை ஈடு செய்துவிடலாம். இவை அனைத்தையும் தெரிந்து கொண்டும் பலர் இந்த இடத்தில் தடுமாறுகின்றனர்.

- மிக மிக முக்கியமான விதிகளில் ஒன்று, தின வணிக திட்டம் இலாபத்திலோ அல்லது நஷ்டத்திலோ முடிந்தவுடன் அப்படியே விட்டுவிட்டு வேறு வேலைகளை செய்ய முற்படுவது உத்தமம். இலாபத்தை அதிகரிப்பதையோ, நஷ்டத்தை குறைக்கும் பொருட்டோ அன்றைய தின அலுவலக வேலைப் பளுவில் மேற்கொள்ளும் அவசர கால திட்டங்கள் (Emergency Contingency Plans) அனைத்தும் 99 வீதமும் நஷ்டத்தையே மேலும் அளிக்கக் கூடும்.
- டெக்னிகல் சார்ட் (Technical Charts) 100 வீதமும் நம்பகமானது கிடையாது. தொழில்நுட்பப் பகுப்பாய்வை நீங்கள் செய்தாலும் சரி அல்லது அனுபவம் வாய்ந்த நிபுணர் ஒருவர் செய்தாலும் சரி குறிப்பிட்ட இலக்கு விலையை 100 வீதமும் அன்றைய தினத்தில் எய்தவேண்டும் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனம். தொழில்நுட்ப பகுப்பாய் என்பது தேவையற்றது. அவை உபயோகமற்றவையல்ல. இருந்தபோதும் அவற்றின் மீது அதீத நம்பிக்கை கொள்ளக்கூடாது.

ஆக, பங்குச் சந்தையில் நுழைந்த ஒவ்வொருவரும் முதலில் ஈர்க்கப்படுவது தின வணிகத்தில்தான். குறிப்பாக எந்த அனுபவமும் இல்லாமல், குழுமங்களைப் பற்றிய அடிப்படை அறிவு இல்லாதவர்கள் கூட, இதில் மிகுந்த உற்சாகமாக ஈடுபடுவார்கள். சிலருக்கு முதல் சில தின வணிகங்களில் இலாபம் கூட கிடைக்கலாம்.
இவர்கள் நினைவில் கொள்ள வேண்டிய ஒரு விடயம் உண்டு. குறிப்பாக, 'வாரன் பப்பெட்' என்பவர் பங்கு சந்தை முதலீட்டை மட்டுமே மேற்கொண்டு உலக கோடீஸ்வரர்களில் ஒருவரானவர். ஆம், 1960 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் முதலீடு செய்ய அவரிடம் தொகை இருந்தபோதிலும், சரியான விலையில் மட்டுமே முதலீடு செய்ய வேண்டுமென்ற எண்ண மேலீட்டோடு ஏறத்தாழ 10 வருடங்கள் காத்திருந்தார். அதன் பின்பாக வந்த ஒரு பெரும் அமெரிக்க பங்கு சந்தை சரிவில் அன்னவரும் பங்குகளை விற்று விட்டு அதிலிருந்து விலகிச் சென்றனர். ஆனால் 'வாரன் பப்பெட்' பெரும் தொகையுடன் நுழைந்தார். வெற்றி கண்டார். பத்து வருடங்கள் காத்திருக்கும் அளவுக்கு அவர் கொண்டிருந்த பொறுமை என்ற அளவு கருவியின் தனித்துவத்தை நாம் அனைவரும் கடைபிடிக்க வேண்டியது மிக முக்கி யமான ஒன்று என்பது புரிகிறது.

### வீட்டிலிருந்தோர்...

சென்று பார்த்துள்ளார். அப்போது 5 பேர் கொண்ட குழு வாள்களுடன் கத்திகளுடன் அவரைப் பிடித்துள்ளது. இருவர் அவரைப் பிடித்திருக்க ஏனைய மூவரும் ஏறிப் பாய்ந்து வீட்டுக்குள் சென்றுள்ளனர். வீட்டிக்குள் இருந்த தாயையும் இரு பிள்ளைகளையும் அச்சுறுத்தியுள்ளனர். அப்போது தாய் அபயக் குரல் எழுப்பியுள்ளார். அயலவர்கள் திரளத் தொடங்கினர்.
திருடர்கள், குரல் எழுப்பிய தாயையும், மகன் ஒருவரையும் வெட்டிக் காயப்படுத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்துக்கு மோப்ப நாயுடன் வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். காயமடைந்த தாயும், மகனும் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை காங்கேசன்துறைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-26)

### பொலிஸின்...

வதை எதிர்த்து முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் பங்கெடுத்து பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட 5 குற்றச்சாட்டுக்கள் பொலிஸாரால் முன்வைக்கப்பட்டது.
பொதுமக்களின் போக்குவரத்துக்கு தடை விதித்தமை, அரச அலுவலர்களை கடமை செய்யவிடாது தடுத்தமை, சட்டவிரோதமாக கூட்டம் கூடியமை, வாகனத்துக்கு சேதம் விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களில், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உடந்தையாக இருந்தார் என்று பொலிஸாரால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.
சட்டத்தரணிகள் பிணைமனுக் கோரி விண்ணப்பித்தனர். பொலிஸார் அதற்கு ஆட்சேபனை தெரிவித்தனர். தமது விசாரணைகள் இன்னமும் முடியவில்லை. இந்த வழக்குடன் தொடர்புடைய இன்னும் சில சந்தேக நபர்களைக் கைது செய்ய வேண்டியிருக்கின்றது. கைது செய்யப்பட்டவரை விடுவித்தால் அவர் சாட்சிகளிடம் தலையீடு செய்வார். மேலும் பொதுமக்களுக்காக போராட்டம் செய்திருந்தாலும் அதனால் மற்றொரு பொதுமகன் பாதிக்கப்பட்டுள்ளார். எனவே பிணையில் விடுவிக்க அனுமதிக்க முடியாது. நாளை வெள்ளிக்கிழமை வரையிலாவது விளக்கமறியலில் வைக்க பொலிஸார் கோரிக்கை விடுத்தனர்.
சட்டத்தரணிகள், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்ற பல்வேறு கவனயீர்ப்புப் போராட்டங்களில் பங்கேற்றுள்ளார். அமைதியான முறையில், ஜனநாயக முறையில் செயற்பட்டுள்ளார். அவர் மீது இது தொடர்பில் வழக்கு எதுவும் இல்லை.
மக்கள் பிரதிநிதியான ரவிகரன், மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் போராட்டத்தில் பங்கேற்றுள்ளார். அவர் சட்டவிரோதமாக கூட்டம் கூட்டினார் என்று கூற முடியாது என்று வாதங்களை முன்வைத்தனர்.
பொலிஸ் நிலையத்தில் ஒவ்வொரு வாரமும் இறுதி நாளில் அவர் கையெழுத்திட வேண்டும் என்று பொலிஸார் கோரிக்கை முன்வைத்தபோதும், சட்டத்தரணிகள் அதற்கும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். ஒவ்வொரு மாதமும் இறுதி வெள்ளிக்கிழமை நீதிமன்றில் கையெழுத்திட வேண்டும் என்று நீதிவான் உத்தரவிட்டார்.
காணி சுவீகரிப்புக்கு நடைமுறை இருக்கின்றது. அதற்கு முரணாக - சட்டத்துக்கு முரணாக சுவீகரிக்க முற்பட்டுள்ளனர். காணி சுவீகரிப்பதாயின் அது தொடர்பில் பகிரங்க அறிவித்தல் ஒட்டப்பட வேண்டும். அதனை பாதுகாப்புத் தரப்பினரின் முகாமுக்குள் ஒட்டினால் பொதுமக்கள் பார்வையிட முடியாது. காணி சுவீகரிப்பு மேற்கொள்ள எடுக்கப்பட்ட நடைமுறை பிழையானது என்றும் சட்டத்தரணிகள் தமது வாதங்களின் போது சுட்டிக்காட்டியுள்ளனர். (ற-5)

### ரவிகரனுக்காகத்...

களான தங்கராசா பரஞ்சோதி, ந.சுதர்சன், திருமதி சுபா விதுரன், க.கேணஸ்வரன், இஸ்மத் ஜெனில், ராதிகா தேவனந்தராஜா, திருமதி நிலோஜினி சாரங்கநாதன், ஹாரிஸ், செல்வி அனித்தா சிவநேசன் ஆகியோர் வடக்கு மாகாண சபை உறுப்பினருக்காக மன்றில் முன்னிலையாகினர்.
பொலிஸார் பிணை வழங்க மறுத்திருந்த நிலையில், சட்டத்தரணிகளின் கடுமையான வாதங்களையடுத்தே ரவிகரனுக்குப் பிணை வழங்கப்பட்டிருந்தது.
இந்த வழக்குக்காக முல்லைத்தீவு மாவட்டச் சட்டத்தரணிகள் அனைவரும் ஓரணியில் திரண்டமை குறிப்பிடத்தக்கது. (ற-5)

### போர்க்களப்...

கிடக்கும் சிரியாவின் குடிமக்களை மருத்துவனைகளில் சேர்க்கும் பணியை சிரிய உள்நாட்டுப் போர் தொடங்கியது முதல் மேற்கொண்டு வருகிறது வைட்ஸ் ஹெல்மட்ஸ் தன்னார்வ அமைப்பு. இதுவரை சுமார் ஒரு லட்சம் பேர் வரை இவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

(தொடர்புடைய செய்தி பக்கம்14)

## தாக்கப்பட்ட...

கள் பிறப்பிக்கப்பட்டன. தாக்குதலுடன் தொடர்புடையவர்களை துரிதமாகக் கைது செய்ய வேண்டும் என்றும், உடைக்கப்பட்ட பள்ளிவாசலை திறக்க வேண்டும் என்றும், தொலைத்தொடர்பு நிறுவனங்களின் உதவியைப் பெற்று கலவர நேரத்தில் உரையாடிய அலைபேசி அழைப்புக்களை வைத்து தாக்குதலாளிகளைக் கைது செய்ய வேண்டும் என்றும், பாதிக்கப்பட்டவர்களிடம் வாக்குமூலத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் பொலிஸாருக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

பொலிஸ் பாதுகாப்புடன், பள்ளிவாசல் நேற்றுத் திறக்கப்பட்டு துப்புரவு செய்யப்பட்டது. நாளை தொழுகைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**கடையடைப்பு**

அதேவேளை அம்பாறையில் இன்று முழு அடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியிருந்தது. ஆனால் எந்தவொரு உத்தியோகபூர்வ அழைப்பும் விடுக்கப்படவில்லை என்று அம்பாறை மாவட்ட தமிழ் பேசும் மக்கள் தெரிவித்தனர். (ற-5,7)

## அம்பாறை...

வன்முறைக்கு வந்த குழுவினரை அடையாளம் காண்பதற்குப் பிரதேசத்தின் பல முக்கிய இடங்களில் பொருத்தப்பட்டிருந்த மறைகாணி (சி.சி.ரி.வி) பதிவுகளை பெற்று அவை ஆராயப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் சுட்டிக்காட்டினர். வன்முறை நடைபெற்றபோது அங்கிருந்து வெளிச்சென்ற மற்றும் உள்வந்த அலைபேசி அழைப்புக்களை மையப்படுத்தியும் சந்தேக நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் குறிப்பிட்டனர். நேற்று மாலை வரை இடம்பெற்ற விசாரணைகளில் 30க்கும் மேற்பட்ட முக்கிய வாக்கு மூலங்களைப் பொலிஸார்பெற்றுள்ளனர். பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாக தொடர்ந்தும் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினருடன் இணைந்து செயற்படுகின்றோம் என்று பிரதேசத்தின் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ற-5,71)

## சிவாஜிலிங்கத்துக்கு...

இந்த வழக்கு முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது.

கோத்தபாய முகாம் அமைந்த மக்கள் காணியை விடுவிக்க வேண்டும் என்று முல்லைத்தீவு வட்டுவாகலில் கடந்த 22 ஆம் திகதி பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அங்கு காணி அளவிடச் சென்ற அதிகாரிகள் திரும்பிச் செல்ல வேண்டும் என்று பொதுமக்கள் கோரியபோதும் அதிகாரிகள் நகராது நின்றனர். போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தசிவாஜிலிங்கம்திணைக்களத்தினர் பயணித்த வாகனத்தின் கண்ணாடியை கையால் அடித்து உடைத்தார் என்று முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி, தேசிய அமைதிக்குப் பங்கம் விளைவித்தமை, சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியமை, அரச ஊழியர்களது கடமைக்கு இடையூறு விழைவித்தமை, அரசசொத்தைச் சேதப்படுத்தியமை உட்பட ஆறு குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

வழக்குக்கான அழைப்பாணை வல்வெட்டித்துறைப் பொலிஸார் ஊடாக சிவாஜிலிங்கத்துக்கு வழங்கப்பட்டிருந்தது. நேற்றுமுன்தினம் அவர் தனது சட்டத்தரணி ஊடாக மன்றில் முற்பட்டார்.

விசாரணையின்போது சிவாஜிலிங்கம் சார்பாக அவரது சட்டத்தரணி முன்பிணை கோரி மனுத் தாக்கல் செய்தார். சுமார் 35 நிமிட வாதப் பிரதிவாதங்களின் பின்னர் மனுவை நீதிவான் ஏற்றபோதும் முன் பிணையை நிராகரித்தார். இந்த வழக்கு மேலதிக விசாரணைக்காக எதிர்வரும் 6ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ற-4,26)

## லசந்த...

இவ்வாறு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

அவன்காட், ரக்னா லங்கா பாதுகாப்பு சேவை, மிக் வானூர்திக் கொள்வனவு மற்றும் டி.ஏ.ராஜபக்ச மன்றம் போன்ற விடயங்கள் ஊடாக விசாரணைகளை முன்னெடுத்து என்மீது சேறு பூசிய அரசு தற்போது ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலையுடன் என்னைத் தொடர்புபடுத்த முயற்சிக்கின்றது. என்னைக் கைது செய்வதே அரசின் நோக்கமாக காணப்படுகின்றது.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரி ஒருவரின் சாட்சியத்தின் அடிப்படையில் படுகொலையுடன் இராணுவ புலனாய்வுக்கு தொடர்பு இருக்கின்றது என்றும், அப்போதைய இராணுவ புலனாய்வு பிரிவின் பொறுப்பாளரான மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரணவின் கீழ் கொலை குழு செயற்பட்டனர் என்றும், இவர்கள் கோத்தபாய ராஜபக்சவின் கட்டளையின் பிரகாரம் செயற்பட்டனர் என்றும் கடந்த வாரத்தில் இணையத்தளத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

போலியான தகவல்களை பரப்பி மக்களை திசைதிருப்பவும் உண்மைகளை மூடிமறைக்கவும் எடுக்கின்ற மோசமான முயற்சியாகவே இது காணப்படுகின்றது. ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்ட காலப்பகுதியில் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண இராணுவ சேவையில் ஓய்வு பெற்றிருந்தார். பாதுகாப்பு அமைச்சின் தேசிய புலானாய்வு பிரிவின் தலைவராகவும் செயற்பட்டிருந்தார். தேசிய புலனாய்வு பிரிவின் தலைவர் இராணுவத்துக்கு பொறுப்புடையவர் அல்ல. பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படும் சிவில் கடமையையே அவர் மேற்கொண்டிருந்தார்.

இராணுவ புலனாய்வு பிரிவுகள் இராணுவ நிர்வாகத்தின் கீழே காணப்படும். பாதுகாப்பு அமைச்சின் கீழ் அல்ல. அதே போன்று புலனாய்வு பிரிவுகளின் செயற்பாடுகள் இராணுவப் புலனாய்வு பணிப்பாளர் சபையின் கீழ் நிர்வகிக்கப்படும். அப்போது அதன் பொறுப்பாளராக பணிப்பாளர் நாயகம் பிரிகேடியர் அமல் கருணாசேகர செயற்பட்டார்.

இராணுவ புலனாய்வு பிரிவின் அனைத்து நடவடிக்கைகளையும் இராணுவத் தளபதிக்கே அவர் அறிவித்தார். இந்த காலப்பகுதியில் இராணுவ தளபதியாக லெப்டினன் ஜெனரல் சரத் பொன்சேகா பதவி வகித்தார். உள்நாட்டு போரின் உச்சகட்டமான காலப்பகுதியில் இராணுவ தளபதியின் அறிவுறுத்தல்களோ கட்டளைகளோ இன்றி எந்தவொரு இராணுவ புலனாய்வும் செயற்படாது என்பது பாதுகாப்பு துறைசார் சிறிய அறிவு காணப்படுவர்களுக்கும் தெரிந்த விடயமாகும்.

மிக் வானூர்திக் கொள்வனவு தொடர்பில் எனக்கு எதிராக வெளியிடப்பட இருந்த தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டார் என்று அரசியல் தரப்புகள் சேறு பூசும் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றன. இவ்வாறான போலியான பரப்புரைகளை மேற்கொள்பவர்கள் ஒரு விடயத்தினை மறந்து விட்டுள்ளனர். அதாவது மிக் வானூர்திக் கொள்வனவு தொடர்பில் எனக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் செய்தி வெளியிட்டியிருந்த சண்டே லீடர் பத்திரிகைக்கு எதிராக அன்று வழக்கு தாக்கல் செய்திருந்தேன். வழக்கில் நான் வெற்றியீட்டியும் இருந்தேன். தவறான செய்தியை வெளியிட்டமைக்காக சண்டே லீடர் பத்திரிகைக்கு பகிரங்கமாக மன்னிப்பு செய்தியை பிரசுரிக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

லசந்த விக்ரமதுங்கவின் குற்றச்சாட்டுகளுக்கு நான் அன்று சட்டத்தின் பிரகாரம் பதிலளித்தேன். பகிரங்கமாக மன்னிப்பு கோரியமையால் அதற்குப் பின்னர் சண்டே லீடர் பத்திரிகையுடன் எவ்வித முரண்பாடுகளும் காணப்படவில்லை. ஆனால் ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்படுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அப்போதைய இராணுவ தளபதியான சரத் பொன்சேகாவை விமர்சித்து செய்தி வெளியிடப்பட்டது. சரத் பொன்சேகா நான் பின்பற்றிய சட்ட நடவடிக்கைகளை அவர் பின்பற்றாதிருந்தார். அந்தச் செய்தி தொடர்பில் கோபம் கொண்டிருந்திருந்தார். லசந்த படுகொலை தொடர்பில் இன்று விசாரனைகளை முன்னெடுக்கும் பொலிஸார் இந்த விடயத்தினை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இரகசிய பொலிஸார் என்னை விசாரணைக்கு அழைத்திருந்த போது, லசந்த படுகொலை செய்யப்பட்ட காலப்பகுதியில் கொழும்பு இராணுவ நடவடிக்கைகளுக்கு பொறுப்பாளராகயிருந்த 112 ஆவது படையணியின் தளபதி பிரிகேடியர் கெப்பெட்வலானவின் கீழ் செயற்பட்ட இராணுவக் குழுக்களின் செயற்பாடுகள் குறித்து கண்டறிய வேண்டும் என்று இரகசிய பொலிஸாரிடம் கேட்டு கொண்டேன். அரசியல் தலையீடுகள் காரணமாக அந்த விடயங்கள் இடம்பெறவில்லை.

லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பில் அன்று எதிர்கட்சி தலைவராக இருந்த ரணில் விக்ரமசிங்க இராணுவ தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தியிருந்தார். முன்னாள் சபாநாயகரான ஜோசப் மைக்கல் பெரேராவும் இவ்வாறான குற்றச்சாட்டினையே முன்வைத்திருந்தார். இவர்கள் தற்போது அதிகாரத்தில் இருக்கின்ற போதிலும் அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை விவகாரத்தைத் திசைதிருப்பி வருகின்றனர்.

லசந்த விக்ரமதுங்கவின் படுகொலைக்கு காரணம் அவர் எழுதிய செய்தி என்றால், அவ்வாறான அவதூறு செய்தியை வெளியிட்டமைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து என்னை விசாரணை செய்யும் பொலிஸார் அதே ஈடுபாட்டை அப்போதைய இராணுவ தளபதியான சரத் பொன்சேகாவிடமும் காட்ட வேண்டும்.

தற்போதைய சட்டம் ஒழுங்கு அமைச்சர் என்ற வகையில் சரத் பொண்சேகாவுக்கு எதிரான அன்றைய குற்றச்சாட்டை இன்று ரணிலால் விசாரணை செய்ய முடியும். ஆனால் இன்று நரிக்கு கோழியை பொறுப்பளிப்பதை போன்று பொன்சேகாவிற்கு பொலிஸ் திணைக்களத்தின் பொறுப்பை வழங்க அரசியல்வாதிகள் ஆலோசணை வழங்கி வருகின்றனர்.

அரசியல் சுய நலன்களுக்காக பொலிஸார் போலியான சாட்சியங்களைத் தயாரித்து நாட்டின் சட்டம் ஒழுங்கை சீரழிப்பதால் நாடு மாத்திரம் அல்லாது பன்னாட்டுச் சமூகத்திலும் மதிப்பிறக்கம் ஏற்பட்டுள்ளது. அநீதிக்கு எதிராக போராட வேண்டிய நிலையே மக்களுக்கு தற்போது ஏற்பட்டுள்ளது. இவ்வாறான மோசடி அரசை மக்கள் விரட்டியடித்த வரலாறு உலகில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறான பதிலடியை இலங்கை மக்களும் விரைவாக கொடுப்பார்கள் - என்றுள்ளது. (ற-5,31)

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**
வெற்றி வாரம்: 3001 திகதி: 28.02.2018
புதன்கிழமை
ஊதா
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து | போனஸ் இலக்கம் | அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
20 21 52 62 J | 11 | 32,308,820/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT SS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது நேரடி அழைப்பு - 0114 824 824, 0112 333 778

### கேள்வி அறிவித்தல்
### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி

பல்கலைக்கழகக் கல்லூரியில் உள்ள உணவகத்தை நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்லூரி உதவி நிதியாளர் பணிமனையில் 09.03.2018 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணமாக ரூபா2000/= உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/= உம் தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்லூரி கணக்கு இலக்கம் 162100100045947 இற்கு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப் பல்கலைக்கழக கல்லூரி உதவிநிதியாளர் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

உதவிநிதியாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்லூரி.
இல 29, பிறவுண் வீதி, கொக்குவில் (Jn. 6019) (13.17)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகம்மா துரையப்பா



நல்லூர், அரசடி, 4ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா துரையப்பா நேற்று (28.02.2018) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கதிர்காமு - சீதா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சின்னாச்சன் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை நடராசா, வல்லிபுரம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற நாகம்மா, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆனந்தராணி (ஆனந்தம்), சறோசா (சறோ - டென்மார்க்), சாந்தினி (பவானி), ஈசன், காலஞ்சென்ற ஜீவரத்தினம், சந்திரபோஸ், மகேந்திரம், சந்திராதேவி, விமலாதேவி, குலேந்திரம், வளர்மதி (சிறீ) ஆகியோரின் பாசமிகு தாயும் கனகலிங்கம் (கலைமகள் மரக்காலை உரிமையாளர்), செல்வராசா (டென்மார்க்), ஜெகதீஸ்வரன் (ஈசன் C.T.B.சாரதி), வாசுகி ஆகியோரின் அன்பு மாமியும் கருணா, வசந்தன் (சுவிஸ்), ஆசா (கனடா), அசோக்குமார் (அசோக்), உதயன் (லண்டன்), றோசி, மயூரா, சிந்துஜா (லண்டன்), பிரசாத் (டென்மார்க்), வசீகரன் (சுவிஸ்), பவித், கஜித் (மாங்குளம்), கோசல்யா, கீர்த்திகா, லக்ஷ்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சுவிஸ்கரன், சுரேக்கா, டனிஸ்ரன், டசிந்தன், டிலக்சன், அஜிவ், கிரோக், பவிசன், அபிசன், கஸ்மிதா, தனுஸ்கா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 14346/15/17)

### குமாரவேலுப்பிள்ளை குலசிங்கம்

**(கள்ளித்தெரு, தங்கோடை, காரைநகர்)**



தோற்றம் 18.09.1936 மறைவு 28.02.2018

காரைநகர், மூக்கம்பிட்டியைப் பிறப்பிடமாகவும் 43 A, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலுப்பிள்ளை குலசிங்கம் நேற்று (28.02.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலுப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும் பொன்னம்பலம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் பாசமிகு கணவரும் தவக்குமரன் (ஆசிரியர் - யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி), செல்வக்குமரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராதிகா, தாரணி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புமாமனும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம், பாக்கியம், தனலட்சுமி, கனகசபாபதி மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை, மார்க்கண்டு மற்றும் சரஸ்வதி, ஈஸ்வரி, சிவலிங்கம், Dr.நவரட்ணராசா (ஆஸ்திரேலியா), இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஜலக்ஷனா (மாணவி - யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), பர்வதன் (மாணவன் - யா/இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (04.03.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**43A, சிவப்பிரகாசம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**077 927 4136, 077 617 3035**

தகவல்: **குடும்பத்தினர்.**

(CS 566/15/17)



# மெதடிஸ்த பெண்கள் எல்லேயில் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 1

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான எல்லேயில் சம்பியனாகியது பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் பாடசாலை.

வடமராட்சி வலயப் பாடசாலைளுக்கு இடையிலான எல்லே தொடரில், பெண்கள் பிரிவு இறுதியாட்டம் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த ஆட்டத்தில் மணற்காடு றோ.க.த.க. பாடசாலையும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மணற்காடு றோ.க.த.க. பாடசாலை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துகளில் அனைத்து இலக்குகளையும் இழந்து 7 ஓட்டங்ளைப் பெற்றது. அதிகபட்சமாக நிதர்சனா, நிறோஜா ஆகியோர் தலா 2 ஓட்டங்களையும் விவவின்ஜா, மைதிலி மற்றும் சுகிர்தா ஆகியோர் தலா ஓர் ஓட்டத்தையும் பெற்றனர்.

தொடர்ந்து 8 ஓட்டங்களை இலக்காகக் கொண்டுகளமிறங்கியமெதடிஸ்தபெண்கள் அணி 30 பந்துகளில் இலக்கை அடைந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக அஜித்தா 3 ஓட்டங்களையும், கிசோறி மற்றும் மனோஜா ஆகியோர் தலா 2 ஓட்டங்ளையும் சுவர்ணசீலி ஓர் ஓட்டத்ததையும் பெற்றனர். (ம-108)

# நியூசிலாந்துக்கு இங்கி. பதிலடி

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் நியூசிலாந்தில் நடைபெற்று வருகிறது. முடிவடைந்த முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் நியூசிலாந்து அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்தது. இரண்டாவது ஆட்டம் நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 49.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 223 ஓட்டங்களை மட்டும் பெற்றது. சான்நெர் ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களையும், கப்ரில் 50 ஓட்டங்களையும், கிரான்ட்கோம் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வோக்ஸ், மொயின் அலி, ஸ்ரோக்ஸ் மூவரும் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி 37.5 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக ஸ்ரோக்ஸ் 63 ஓட்டங்களையும், மோர்கன் 62 ஓட்டங்களையும், பரிஸ்ரெளவ் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆட்டநாயகனாக ஸ்ரோக்ஸ் தெரிவானார். (ம)



# ஆட்டம் சமநிலை

கலைவாணி விளையாட்டு கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குருநகர் பாடும் மீன், பொற்பதி அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

கோல்கள் எவையும் பதிவு செய்யாததை அடுத்தே ஆட்டம் சமநிலையானது. (ம-23)





# ஆவரங்கால் மேற்கு இளைஞர் கழகம் வாகை

யாழ்ப்பாணம், மார்ச் 1

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் மேற்கு இளைஞர் கழக அணி சம்பியனானது.

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மேற்கு இளைஞர் கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை கெருடாவில் அண்ணா இளைஞர் கழக மோதியது. 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலாவது செற்றைக் கைப்பற்றியது பருத்தித்துறை கெருடாவில் அண்ணா அணி.

ஆவரங்கால் மேற்கு இளைஞர் அணி அடுத்த இரண்டு செற்களையும் முறையே 25:20, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)




# மகாஜன இளைஞர் கழகம் கரப்பந்தாட்டத்தில் மகுடம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட மட்ட கரப்பந்தாட்டத் தொடரில், பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜன இளைஞர் கழகம் சம்பியனாகியது.

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜன இளைஞர் கழக அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தா இளைஞர் கழக மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 26:16, 25:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது தெல்லிபழை மகாஜனக் இளைஞர் கழக அணி. (ம-23)



# கரவெட்டி ஞானம்ஸ் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், மார்ச் 1

குப்பிளான் ஞானகலா விளையாட்டுக் கழகம் நடத்திய வடமாகாண ரீதியிலான துடுப்பாட்டத் தொடரில், கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.

குப்பிளான் ஞானகலா விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி 8 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அருண் 30 ஓட்டங்களையும், சேந்திரன் 28 ஓட்டங்களையும், ஜொனி 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கோகுலன் 2 இலக்குகளையும், சாள்ஸ், துவாரகன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

88 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொலின்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றதை அடுத்து 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றது கரவெட்டி ஞானம்ஸ் அணி.

பந்துவீச்சில் றஜீவன், ஜொனி, துருவன், சேந்திரன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

(ம-23)



இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்திய 13 வயதுக்கு உட்பட்ட இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான தேசியமட்ட துடுப்பாட்டத் தொடரில் கிண்ணம் வென்று முதலாம் பிரிவுக்கு முன்னேறிய யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, பாடசாலைச் சமூகத்தால் நேற்றுமுன்தினம் மதிப்புறுத்தப்பட்டது. கல்லூரி அதிபர் என்.ஞானப்பொன்ராஜா தலைமையில் இந்த மதிப்புறுத்தல் நிகழ்வு நடைபெற்றது. (ம-23)

## யாழ். வீரர் தயாநிதிக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்டச் செயலகங்களுக்கு இடையிலான குமித்தே தொடரில், 55 கிலோவுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த யு.தயாநிதி தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

மன்னார் பொது உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. 55 கிலோ எடைக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவு குமித்தேயில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த யு.தயாநிதி தங்கப்பதக்கத்தையும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தைப் பிரதிநித்து வம் செய்த எஸ். அன்பரசன் வெள்ளிப் பதக்கத்தையும், கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எம்.தர்சன், யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தைப் பிரதி நிதித்துவம் செய்த ஏ. அருள்தாஸ் ஆகியோர் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

(ம-422)

## முல்லை வீரர் ஆதவனுக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட குமித்தே தொடரில், 75 கிலோவுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.ஆதவன் தங்கப் பதக்கம் வென்றார்.

மன்னார் பொது உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. 75 கிலோ எடைக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவு குமித்தேயில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.ஆதவன் தங்கப் பதக்கத்தையும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.விவுலபூசனன் வெள்ளிப் பதக்கத்தையும், முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பி.தமிழ்ச்செல்வன், ஐங்கரன் ஆகியோர் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

(ம-422)

## முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 1

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்ட மாவட்டச்செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கராத்தேயில் முல்லைத்தீவு மாவட்ட செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

மன்னார் பொது உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. ஆண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்டச் செயலக அணி சம்பியன்கிண்ணத்தையும், யாழ்ப்பாண மாவட்டச் செயலக அணி இரண்டாமிடத்தையும் பெற்றன.

(ம-422)



## யாழ்ப்பாண வீரர் விஜயகணேஸ் வென்றார் தங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்ட செயலகங்களுக்கு இடையிலான குமித்தேயில், 84 கிலோ எடைக்கு மேற்பட்ட பிரிவில் யாழ்ப்பாண மாவட்ட செயலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பி.விஜயகணேஸ் தங்கப்பதக்கம் வென்றார்.

மன்னார் பொது உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. 84 கிலோ எடைக்கு மேற்பட்ட ஆண்கள் பிரிவுகுமித்தேயில்பி.விஜயகணேஸ் தங்கப் பதக்கத்தையும், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த கே.ஜெயரூபன் வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

(ம-422)

## கிளிநொச்சி வீரர் சதீஸ் காண்டீபன் வென்றார் தங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

வடமாகாண திணைக்களத்தின் விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்ட மாவட்டச் செயலகங்களுக்கு இடையிலான 67 கிலோ எடைக்கு உட்பட்ட ஆண்களுக்கான குமித்தேயில் கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ரி.சதீஸ்காண்டீபன் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

மன்னார் பொது உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. 67 கிலோ எடைக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவு குமித்தேயில் கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ரி.சதீஸ்காண்டீபன் தங்கப் பதக்கத்தையும், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே. சிந்துஜன் வெள்ளிப் பதக்கத்தையும், வவுனியா மாவட்டச்செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஏச்.எம்.எம். ரிசாத், ஏச்.எம்.எம்.ரினாஸ் ஆகியோர் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

# முன்னணி வீரர்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வால் முத்தரப்புத் தொடர் தனது மதிப்பை இழக்காது

## இலங்கை கிரிக்கெட் சபை கருத்து

இலங்கை இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடரில், முன்னணி வீரர்களுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வால் முத்தரப்புத் தொடர் அதன் மதிப்பை இழக்காது என்று தெரிவித்தது இலங்கை கிரிக்கெட் சபை.

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்தத் தொடர் நடத்தப்படுகிறது. மார்ச் 6ஆம் திகதி தொடர் ஆரம்பமாகிறது. இந்த தொடருக்கான இந்திய அணி கடந்த திங்கட்கிழமை அறிவிக்கப்பட்டது. இந்திய அணித் தலைவர் கோக்லி, இலக்குக் காப்பாளர் டோனி, வேகப்பந்து வீச்சாளர்களான பும்ரா, புவனேஸ்வர் குமார், சகலதுறை வீரர் பாண்டியா, சுழல்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் ஆகியோருக்கு கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தத் தொடரில் விறுவிறுப்புத் தன்மை இருக்காது என்று கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்த நிலையில் இவ்வாறு தெரிவித்தார் இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால.

"இலங்கை இந்தியாவுக்கு எதிராக விளையாடிக் கொண்டிருக்கிறது. தனிப்பட்ட எந்த வீரருக்கும் எதிராக நாங்கள் விளையாடவில்லை. எங்கள் அணியிலும் மத்தியூஸ், குசல் பெரேரா, அசல குணரத்ன, மலிங்க ஆகியோர் இடம்பெறவில்லை" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)




அறிமுகம் - Rs 250/=
சிக்கன் பிரியாணி
ப்றைட் சிக்கன் - றைஸ் & பைட்ஸ்
Fried Chicken - Rice & Bites
யாழ் பாடியில் 49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800

புதிய பிரிவுகள் ஆரம்பம்
வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification: - G.C.E.O/L Passes With 5 Credits including Maths.
கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Executive Level & Business level
(Tamil & English Medium)
Qualification: - G.C.E. A/L 3 Passes
Certificate Course in English
. 16 Batches have successfully completed the Course Register your names before 10/03/2018
Further Details: Jaffna College Undergraduate Dept. 464, Hospital Road, Jaffna.
021 222 3382/ 021 222 9149

## மரண அறிவித்தல்



பிறப்பு 13.11.1955

இறப்பு 28.02.2018

### கணபதிப்பிள்ளை இராஜதுரை

நாவற்குழி, தச்சன்தோப்பைப் பிறப்பிடமாகவும் கூழாவடி, ஆனைக் கோட்டையை வசிப்பிட மாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராஜதுரை நேற்று (28.02.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் சண்முகம் - சொர்ணாம்பிகை தம்பதிகளின் மருமகனும் அழகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுதன், இந்திரோமா ஆகியோரின் பாசமிகு தந்தையும் தனோஜா, சுகிதரன் ஆகியோரின் மாமனும் வடிவேலு, காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் அப்பாத்துரை (சுவிஸ்), பூபதி, கலா (ஜேர்மனி), தேவராசா, ரஞ்சினி, ரதி (சுவிஸ்), தவராசா (பிரான்ஸ்), ரவிச்சந்திரன், சுகி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ஜெயரட்ணம், ஈஸ்வரி, தௌரி, ஜெயசுந்தரம், காலஞ்சென்ற ஜெயச்சந்திரன், விக்கினேஸ்வரி, பாலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் இந்துசனின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.03.2018) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் காக்கைதீவு இந்துமயானத்தில் தகனம்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனைக்கோட்டை, கூழாவடி.

தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.